கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



வளரும் தியா,
உருகும் சூர்யா!

KALKI • 02.11.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்




ஜயகாந்துக்கு
வேண்டுகோள்!



பாவளிச்
சிறப்பிதழ்...

கீர், பனீர், சுனீர்...
3 தொடர்கள்...

ரயில் ராதிகா
to
ராடன் ராதிகா



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்


தங்க, வைர நகைகள்
புது புது டிசைன்களில்...
தரம், ரகம், கனிவான சேவை
என
அனைத்திலும்
BEST!
ஸ்ரீ குமரன்
தங்கமாளிகை
™
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகை
(தி சென்னை சில்க்ஸ் அருகில்)
சென்னை • கோவை • திருப்பூர் • ஈரோடு • திருச்சி
கடையுடன் கூடிய விசாலமான கார் பார்க்கிங்
Shop online at www.sktm.in

● அ.யாழினி பர்வதம், சென்னை

அந்திமக் காலத்தில் பாவங்களைத் தொலைக்கத் தானே, காசி யாத்திரை செல்வார்கள். நீங்கள் திருமணத்தன்றே காசி யாத்திரை சென்றதேன்....?

நான் நாடகக்காரன். ரிகர்சல் இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய மாட்டேன், including காசி யாத்திரை.

● அ.ஷண்முக சுந்தரம், பெங்களூர்

கம்பருக்கும், சூத்திரத்துக்கும் என்ன சம்பந்தம்? அது என்ன கம்ப-சூத்திரம்....?

கதை சொல்பவனை சூத்திரதாரி என்பார்கள். ''கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் ஜானகியை மனச் சிறையில் கரந்த காதல்- உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி''. ராமன் எய்த அம்பு ராவணனின் மார்பைப் பிளந்து உள்ளே சென்று, அவன் இதயத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் சீதையின் மீது கொண்ட ஆசையைத் தேடிப்பிடித்துக் கொன்று அறவே அழித்ததாம். கதாபாத்திர அந்தஸ்த்தை அம்புக்கும் அளித்தவன் கம்பன். அவனை விட ஒரு கெட்டிக்கார சூத்திரதாரி, 'க.மு-க.பி' (கம்பனுக்கு முன்- கம்பனுக்குப் பின்) இரண்டிலும் கிடையாது.

● வி.ஜி.சத்திய நாராயணன், சென்னை

ஆத்மா - மகாத்மா, இரண்டுக்கும் என்ன வித்தியாசம்....?

ஆத்மா - சாந்தி , மகாத்மா - காந்தி.

● சுமிதா, தஞ்சை

பைத்தியத்துக்கும், நமக்கும் என்ன வேறுபாடு....?

தான் பைத்தியம் என்பது பைத்தியத்துக்குத் தெரியாது. நமக்குத் தெரியும்.

● ரா.பிரசன்னா, மதுரை

பொண்ணுங்களோட பேசுவதை ஏன் சார் 'கடலை' போடறதுன்னு சொல்றாங்க....?

'கடல்ல' போடறதைத்தான், 'கடலை' போடறதுன்னு சொல்றாங்க. ஆத்துல மட்டுமில்லை; கடல்லயும் அளந்துதான் போடணும். பொண்ணை இம்ப்ரெஸ் பண்ணறதுக்காக இஷ்டத்துக்கு உங்களைப் பத்தி



அளந்து வுட்டுப் போட்டீங்கன்னா, அது அப்பால கடல்ல கரைச்ச பெருங்காயமா காணாமப் பூடும்.

● கே.எஸ்.கிருஷ்ணவேணி, குடந்தை

கேள்வி சீரியஸாக இருந்தால்கூட விளையாட்டாகப் பதில் சொல்கிறீர்களே....?


விளையாட்டுதான் விடையில் முடியும்.

● இந்து, கள்ளக்குறிச்சி

'செல்-ஃபோன்' இல்லாத மனிதன், அரை மனிதன் என்று கூறலாமா....?

Missed Call-மனிதன்....!

பாடுங்க



கிரேஸியைக் கேளுங்கள்

● வீ.பெரியசாமி, அரியலூர்

ஆண்கள் - பெண்கள், இருவரில் பொருட்களை வாங்கும்போது, பேரம் பேசி வாங்குவதில் யார் கில்லாடி....?

யார் கில்லாடி என்பதற்கு பதிலாக, யார் 'கில் LADY' என்று கேட்டிருந்தால், கேள்வியே பதிலாகியிருக்கும்.

● வீ.சிவசங்கர், கள்ளக்குறிச்சி

தன்னை உயர்த்திச் செய்யும் விவேக்கின் நகைச்சுவை, தன்னைத் தாழ்த்திச் செய்யும் வடிவேலுவின் நகைச்சுவை. இரண்டில் எது சிறந்தது...?

நகைச்சுவை என்பது குழந்தைக்குச் சமானம். இதில் 'தாழ்ச்சி, உயர்ச்சி சொலல் பாவம் பாப்பா'.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: சீதா ரவி

உதவி ஆசிரியர்: கதிர்பாரதி

வடிவமைப்பு: எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி: 044 - 4343 8888 (30 lines)

தொலைநகல்: 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு: kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு: marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு: subscription@kalkiweekly.com

பிற தகவல்கள்: info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkionline.com


சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

திருமணத்துக்குப் பிறகு நான் ரொம்பவும் மாறிட்டேன். அந்த மாற்றங்களுக்குக் காரணம் ஜோதான். தினமும் எங்களுக்குன்னு கொஞ்ச நேரம் ஒதுக்கி, எதுவானாலும் மனசுக்குள்ளயே வெச்சுக்காம, மனம் திறந்து வெளிப்படையா பேசிவிடுகிறோம். அது இரண்டு பேருக்குள்ளேயும் நல்ல அண்டர்ஸ்டாண்டிங்கை ஏற்படுத்தி இருக்கு.

ஜோ கருவுற்றிருக்கிறார் என்று நான் தெரிந்து கொண்டபோது, 'அட! எனக்கும், ஜோவுக்கும் இடையில் ஒரு புது உயிர் உருவாகி இருக்கிறது; எங்களுடைய கட்டிலை அதுவும் பங்கு போட்டுக் கொள்ளப் போகிறது' என்று நினைத்தபோது, எனக்குள்ளே ஒரு இனம் புரியாத சந்தோஷம். அதுவரை நான் பார்த்த, அறிந்த ஜோவிலிருந்து ஒரு மாறுபட்ட ஜோவை நான் காண ஆரம்பித்தேன். கரு



வுற்ற தாய்களுக்கு நடத்தப்படும் பிரத்யேகமான யோகா மற்றும் இதர விஷயங்களைச் சொல்லித்தரும் வகுப்புக்குச் சென்றார். தாய்மை குறித்து பல புத்தகங்களை நாங்கள் இருவரும் சேர்ந்து படித்து, பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டோம். பிற்காலத்தில் குழந்தைக்குக் காட்டணும்னு சொல்லி, ஒவ்வொரு கட்டத்திலேயும் ஃபோட்டோ எடுத்து வெச்சுக்கிட்டோம்.

முதல் ஐந்தாறு மாதங்களுக்கு, அதிர்ஷ்டவசமா எனக்கு ஷூட்டிங் இல்லை. அதனால, ஜோகூட நிறைய நேரம் அவங்களுக்கு சப்போர்ட்டா இருக்க முடிஞ்சுது. ஒவ்வொரு தடவையும் டாக்டரைப் பார்க்க, ஸ்கேன் எடுக்கப் போகிறபோது, நானே காரை ஓட்டிக் கொண்டு கூடப் போனது இரண்டு பேருக்கும் சந்தோஷமா இருந்தது. குழந்தை கருவுற்ற பிறகு, அதுக்காக எடுத்துக்கிட்ட கவனிப்பு, 'நம்ம ஜோவா இப்படி மாறிட்டாங்க'ன்னு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

டாக்டர் சொன்ன டெலிவரி தேதிக்கு ஒரு வாரம் கழிச்சும் டெலிவரி ஆகல. குழந்தையோட வளர்ச்சி நன்றாக இருப்பதால சிசேரியன்தான் பெட்டர்னு டாக்டர் சொன்னாங்க! டாக்டர் சொன்னது ரொம்பச் சரி! குழந்தை நாலு கிலோ இருந்தது. டெலிவரியின் போது ஜோ கையைப் பிடிச்சுக்கிட்டு நானும் கூடவே இருந்தேன். அது அவங்களுக்கு ரொம்பத் தெம்பா இருந்தது. ஆனா, மருத்துவ வசதிகள் அதிகம் இல்லாத அந்தக் காலத்துல பெண்கள் பல விதமான கஷ்டங்களை அனுபவிச்சுக்கிட்டு, எப்படி வரிசையா பல குழந்தைகள் பெத்தெடுத்தாங்கன்னு நெனச்சுப் பார்த்தேன். பெண் இனம் மேல எனக்கு இருந்த மதிப்பும், மரியாதையும் அதிகமாயிடுச்சு!

நாங்க பெண் குழந்தைக்குத்தான் ஆசைப்பட்டோம். முதன் முதலா குழந்தையைப் பார்த்தபோது, 'இது என்னோட பொண்ணு' என உணர்ந்து கொள்ளவும், ரியாக்ட் பண்ணவும் கொஞ்சம் நேரமானது. இப்போ, என்னை 'அப்பா'ன்னு கூப்பிடறா! கையைப் பிடிச்சுக்கறா! சப்தம் கேட்டா என்னை கெட்டியாப் பிடிச்சுக்கறா! இதெல்லாம் எனக்குப் புது அனுபவம். அவளை நான்தான் குளிப்பாட்டி, சாதம் ஊட்டறேன். வெளியில போகணும்னா, குழந்தையை ரெடி பண்ண ஜோவுக்கு ஹெல்ப் பண்றேன். அப்பாகிட்டே, 'இதுமாதிரி எல்லாம் எங்களை நீங்க கவனிச்சுருக்கீங்களா?'ன்னு கேட்டபோது, 'நான் ஷூட்டிங், ஷூட்டிங்னு இருந்திட்டேன்; எனக்கு அதுக்கெல்லாம் நேரமே இல்லை; உங்களைக் கவனிச்சு, வளர்த்தது அம்மாதாண்டா'ன்னு சொன்னார். 'நீங்க சில அழகான விஷயங்களை இழந்திருக்கீங்கப்பா'ன்னு நான் சொன்னேன். இந்தக் காலத்து இளைய தலைமுறைக்காரர்களுக்கு, உங்க குழந்தைகளோட நிறைய நேரம் செலவிடுங்க; அது உங்க வாழ்க்கையோட பொக்கிஷம் மாதிரி'' என்கிறார் சூர்யா.

– கௌதம் ராம்

வளரும் தியா; உருகும் சூர்யா!

1993-ம் வருடம் மாஃபா நிறுவனம் துவங்கி ஓராண்டே ஆகியிருந்தது. மனித வளம் மற்றும் வேலை வாய்ப்புகளைப் பொறுத்தமட்டில், ஒரு தரமுள்ள நிறுவனமாகக் கால்பதிக்க நாங்கள் போராடிக் கொண்டிருந்த நேரம் அது. நிறுவனத்தில் பத்து ஊழியர்கள்தான். பலரிடம் இருந்து வேலைக்குச் சேர்த்துக் கொள்ள, சிபாரிசு செய்ய வேண்டுகோள்கள் வரும். அப்படித்தான் ஒருமுறை, விருதுநகர் மாவட்டத்திலுள்ள வத்திராயிருப்பு என்ற பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வேலை கேட்டு வந்தார். கிராமப் பகுதியைச் சேர்ந்த அந்த இளைஞர் பி.எஸ்ஸி., பட்டதாரி. ஆனால் தமிழ் மீடியத்தில் படித்ததால் அவருக்கே ஒரு தாழ்வுமனப்பான்மை. நுனிநாக்கில் ஆங்கிலம் பேசி அசத்தும் நகரத்துச் சூழலைப் பார்த்து அந்த இளைஞன் பயந்துபோய் இருந்ததைப் புரிந்து கொண்டேன். மிகச் சாதாரணக் குடும்பப் பின்னணி. அப்பா தேங்காய் வியாபாரி.

முறையாகச் சட்டையை 'இன்' பண்ணாமல் (அல்லது பண்ணத் தெரியாமல்) தயங்கித் தயங்கி உள்ளே வந்தபோதே, அவனைக் கொஞ்சம் கலாய்த்து மனஉறுதியைச் சோதித்துப் பார்க்க முடிவு செய்தேன். ''யெஸ் மிஸ்டர் குமரகுரு. கம்ப்யூட்டர் அறிவு இல்லை; நீங்கள் அறிவியல் பட்டதாரி. ஆனால் நாங்கள் விஞ்ஞான நிறுவனம் கிடையாது. உங்களுக்கு ஏற்ற நல்ல வேலை எங்கள் நிறுவனத்தில் இல்லையே?'' என்று தட்டிக்கழிக்கப் பார்த்தேன். ''வெறும் பட்டப்படிப்பை மட்டும் வைத்துக்கொண்டு, ஆங்கில மொழி ஆளுமை இல்லாமல் உங்களிடம் வேலை கேட்டு வந்தது தவறுதான். ஆனால் ஒன்றை மட்டும் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாபெரும் நகரத்தை நம்பி வந்து விட்டேன். கொஞ்சம் ஒதுங்கிக்கொள்ள இடம்கொடுங்கள். நீங்கள் குறிப்பிடும் காலக்கட்டத்திற்குள் வேலையை கற்றுக் கொண்டு நிறுவனத்துக்கு உபயோகமாக இருப்பேன்'' என்றார் குமரகுரு.

அந்த இளைஞரின் தோற்றத்துக்கும் அவர் குரல் வெளிப்படுத்திய தன்னம்பிக்கைக்கும் மாபெரும் வித்தியாசம். 'பச்' சென்று அவரிடம் பாசம் ஒட்டிக் கொண்டது. ஒருவேளை அதே பகுதியிலிருந்து, அதே பின்னணியோடு நான் வந்ததனால் கூட இருக்கலாம்.

டேட்டா என்ட்ரி ஆபரேட்டராகச் சேர்ந்தார் குமரகுரு. பின்னர் கம்ப்யூட்டர் நிர்வகிப்பது, பழுதுபார்ப்பது என்று தேர்ச்சி பெற்றார். இதற்குள் எங்கள் நிறுவனத்தில் நூறு ஊழியர்கள். கணினித் துறையில் உள்ள டிப்ளமா படிப்புகளை ஒவ்வொன்றாக முடித்தார் குமரகுரு. ப்ரோக்ராம், கோ-ஆர்டினேட்டர், ஸிஸ்டம் மேனேஜர் என்று

1

ஆயிரத்தில் ஒருவன்



சுனீர் தொடர்

படிப்படியாக வளர்ந்துகொண்டே போனார். நாங்கள் திறமையான ஊழியர்களை வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதுண்டு. அந்த வகையில் குமரகுருவை, தரம்வாய்ந்த நிறுவனத்துக்கு பாடி ஷாப்பிங் செய்தோம். அதற்குள் எம்.சி.ஏ. படிப்பையும் முடித்துவிட்டார் குமரகுரு. அங்கிருந்து அமெரிக்கா போனார். ஆனால் அவர் சேர்ந்த நிறுவனம், 2000 வருடத்தில் கணினித் துறையில் ஏற்பட்ட பிரச்னையால் (2k பிரச்னை) மூடப்பட்டுவிட்டது. கொஞ்சமும் பயப்படாமல், இருந்த பணத்தில் சிக்கனமாகச் செலவு செய்து, வேறு ஒரு மிகச் சிறந்த நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். இன்று, புகழ்பெற்ற அந்த நிறுவனத்தின் பிரதான யுக்தியாளர் என்ற நிலையில், தலைமை நிர்வாக அதிகாரி பதவியை அடைந்துவிட்டார். சம்பளம் மாதத்துக்கு மூன்று லட்சம் ரூபாய்.

குமரகுரு போன்று வாழ்க்கையில் நீங்களும் உயர முடியும். ஏதோ ஒரு துறையில் வேலைக்குப் போய், சம்பளம் கிடைக்கிறதே என்று முடங்கி விடாமல், மேலும், மேலும் முன்னேறி உச்சிக்குப் போக முடியும். இந்தியாவில் ஒரு வருடத்தில் 18 வயதுக்கு மேலே, சுமார் 92 லட்சம் பேர் வேலை வாய்ப்புக்குப் போராடுகிறார்கள். ஆனால் அமைப்பு சார்ந்த 22 துறைகளில், இந்தியாவில் மொத்தம் உள்ள வேலைவாய்ப்பே பத்தரை லட்சம்தான். இந்தப் பத்தரை லட்சத்தில் ஒருவராக உள்ளே நுழைந்து, படிகளையும் தடைகளையும் தாண்டி ஒரு நிறுவனத்தில் தலைவராகவோ, நிர்வாக அதிகாரியாகவோ அல்லது சுயதொழில் முனைவோராகவோ உருவாவது என்பது ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் சாத்தியம். அந்த ஆயிரத்தில் ஒருவனாக நீங்கள் இருக்க விரும்புகிறீர்களா? குமரகுரு அப்படி ஆயிரத்தில் ஒருவராக உருவாகி விட்டவர்தான்.

பழைய புராணங்கள், கதைகள் போன்றவற்றில் ஏழுகடல், ஏழு மலை தாண்டிப்

'மாஃபா' பாண்டியராஜன்

படங்கள் : ஸ்ரீஹரி





பாண்டி'S பிளாக்

தகவல் தொழில்நுட்பம், மின்னணு, கம்ப்யூட்டர் சயின்ஸ் மாணவர்களுக்கு, நமது நாட்டிலும், அமெரிக்கா உட்பட வெளிநாடுகளிலும் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில், லட்சம் லட்சமாக கேபிடேஷன் கட்டணம் கட்டிப் படிக்க வைக்கும் பெற்றோர்கள் இப்போது கலங்கித்தான் போயிருக்கிறார்கள்.

அந்தக் கலக்கத்தின் பின்னணியில் இருப்பது வீழ்ந்துவரும் அமெரிக்க டாலர் பொருளாதாரம். அமெரிக்க வங்கிகள் உட்பட பல தனியார் நிறுவனங்கள் திவால் ஆக, தனியார்மயத்துக்கு 'ஜே' போட்டு வந்த அமெரிக்க அரசு, உதவித் தொகை வழங்க வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இந்தியாவில் மென்பொருள் மேம்பாடு மற்றும் அவுட்சோர்சிங் குறித்து வழங்கப்பட்டுள்ள திட்டங்கள், திரும்பப் பெறப்படுமானால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கனவு சிதைந்து விடும் என்பதுதான் இப்போதைய கவலை. மேலும் அதிர்ச்சியளிக்கும்விதமாக, அதிபர் தேர்தலில் தாம் வென்றால், வெளிநாடுகளில் கொடுக்கப்பட்டுள்ள, திட்டப் பணிகளை ரத்து செய்து, அமெரிக்க இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார் ஒபாமா. கேம்பஸ் இண்டர்வ்யூவில் செலக்ட் ஆனவர்களுக்கு, வேலைக்கான ஆர்டர் வழங்காமல் பெரிய நிறுவனங்கள் பல இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றன.

உண்மையில், இந்திய மென்பொருள் நிறுவனங்கள் உறுதியான நிலைகளில் அமர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, கவலை அவசியமில்லை. வெளிநாடுகளில் இருந்து வழங்கப்பட்டிருக்கும் திட்டப் பணிகளை இடையிலேயே திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது. அமெரிக்காவில் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலை தற்காலிகமானதே. அதிபர் தேர்தலுக்குப் பிறகு நிலைமை சீரடையும். அதிகபட்சமாக கணித்துப் பார்த்தால்கூட இந்திய மென்பொருள், பி.பி.ஓ., மற்றும் கால் செண்டர் நிறுவனங்களுக்கு ஐந்து சதவிகிதம் வேலை வாய்ப்பில் பாதிப்பு உண்டாகலாம். மற்றபடி இந்தத் துறையில் இந்தியாவை யாரும் தவிர்க்கவே முடியாது.

மற்றொரு விஷயம், நமது நாட்டு வேலை வாய்ப்பில் முதலிடம் பெறுவது தகவல் தொழில்நுட்பமோ அல்லது தகவல் வளர் தொழிலோ (ITES) அல்ல. எரிசக்தி உற்பத்தி மற்றும் விநியோகத் துறைதான். இந்த வருடம் முடிவுக்குள் சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேருக்கு அங்கே வாய்ப்பு காத்துக்கொண்டிருக்கிறது. அதற்கடுத்து சுகாதாரத் துறை, கல்வி, உணவுப் பொருள், தனியார் துறைகள் வருகின்றன. இந்த வரிசையில் ஐந்தாவதாகத்தான் தகவல் தொழில்நுட்பம் வருகிறது. எனவே கவலை இல்லை!

போய் ரகசியத்தைத் தெரிந்து வந்தான் கதாநாயகன் என்று சொல்வார்கள். நல்ல நிறுவனத்தைத் தேர்வு செய்து, முதல்படியான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு, மலை, கடல் எல்லாம் தாண்ட வேண்டாம். ஏழு கதவுகளைத்தான் தாண்ட வேண்டும். அந்தக் கதவுகளைத் திறக்க வழிகாட்டுவதுதான் இந்தத் தொடர்.

(வெளிச்சம் வீசும்)

எழுத்தாக்கம் : **ஸ்ரீநி**

‘வல்லரசே தடுமாறும்போது, வளரும் அரசுக்குப் (இந்தியா) பொருளாதார சரிவு ஏற்பட்டால் விளைவு பயங்கரமாக இருக்கும்’ என்று தலையங்கம் தந்த எச்சரிக்கையை ஆள்பவர்கள் உணர வேண்டும்!

- ஆர்.பிரகாஷ், பொன்மலை

ஆசியாவின் புதுமையான திட்டத்துக்காக விருது பெற்றுள்ள ‘சிரஞ்சீவித் திட்டத்தை’ - தமிழக அரசு நடைமுறைப்படுத்தலாமே! கலைஞர் கவனிப்பாரா?

- உமாதேவி பலராமன், திருவண்ணாமலை

அமெரிக்காவுக்காவுக்கு தேள்கடி; இந்தியாவுக்கு நெருக்கடி... தலையங்கம் சரியான சவுக்கடி...!

- இரா. வாணி, திருவாரூர்

வாரணம் ஆயிரத்தைக் காரணம் ஆயிரமாக, மன மகிழ்வோடு இனிப்பாகக் கூறிய இயக்குநர் கௌதமுக்கு ஒரு ஜோரான ஜே!

- லால்குடி தி.கலைச்செல்வன், திருச்சி



ஜோரான ஜே!

பிக்பாங் டே - பற்றி விஞ்ஞானி நெல்லை சு.முத்து சிம்பிளாகப் புரிய வைத்தார். மின் துகள்கள் மோதுவதை டி.வி.யை உதாரணம் காட்டி அவர் சொன்னதும் எளிதாகப் புரிந்தது.

- டி.எம்.சுரேந்தர், திண்டுக்கல்

“ரசிகர்களின் வேண்டுகோளை ஏற்று ரஜினி கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்கிறாரே திருநாவுக்கரசர்?” என்ற கேள்விக்குரிய பதிலின் கடைசி வரியிலிருந்த கல்கிக்கே உரிய கிண்டல் ரசிக்க வைத்தது!

- ஆர். ராம்சுப்ரமணி, திருவாரூர்

சினிமா, டி.வி மோகமுள்ள இக்காலத்தில் எட்டு வயது சிறுமி சிவரஞ்சனி வானொலி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆர்வத்துடன் கேட்பது ஆச்சர்யமான விஷயம்; அதோடு நல்ல பழக்கமும்கூட.

- எம்.இராஜேந்திரன், லால்குடி

‘காந்திய நலவாழ்வுச் சங்கம்’ எனப்படும் தொண்டு நிறுவனத்தின் தலைவர் கருப்பூர் மாவடியானை ‘அசல் காந்தி’ என்று அழைக்கலாம்.

- கே.வி. ராமன், சென்னை

டிஜிட்டல் கேண்டீன் வாயிலாக வாரா - வாரம் பல அரிய செய்திகளை வழங்கிய இரா.முருகனுக்கும், உடலைப் பேணிக் காக்க - பதிமூன்று வாரங்கள் ஆலோசனைகள் கூறிய லக்ஷ்மி மோகனுக்கும் கல்கி வாசகர்கள் சார்பில் நன்றி!

- ரேவதிப்ரியன், ஈரோடு

வட்டமேஜை

திக் திக் தொடர்கதை

நில்... கவனி... ~~செல்!~~ கொல்!

▪ அருண் சரண்யா ▪

குமார் தொடர்ந்து சில நிமிடங்கள் மௌனம் சாதிக்க, பவித்ரா காத்திருந்தாள். 'தானாகவே சொல்வான். அதற்காகத்தானே வந்திருக்கிறான்.'

மெல்ல பேசத் தொடங்கினான். ''ஷிப்ரா என் அண்ணன் மனைவிதான். ஆனாலும் அவ அழகிலே என் மனம் அப்பப்போ கொஞ்சம் அலை பாய்ந்தது. என்னை அப்படி வெறுப்பாகப் பார்க்காதீங்க பவித்ரா. என் எண்ணம் தப்புதான். ஆனா மனசைக் கட்டுக்குள் வைத்திருப்பது எப்போதுமே சாத்தியம்னு சொல்ல முடியாது இல்லையா?''

பவித்ரா அதிர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். தப்பான எண்ணம் என்பதையும் தாண்டிய விவரங்களை குமார் அடுக்கத் தொடங்கினான்.

''டிசம்பர் மாதம் சென்னைக்கு வந்திருந்தபோது குரு வெளியூர் போயிருந்தான். அந்தச் சமயத்தை நான் பயன்படுத்திக்கிட்டேன். முதலில் ஷிப்ரா மறுத்தாள். கட்டாயப்படுத்தினேன். பிறகு ஒத்துக்கிட்டா. குருவும் நானும் பார்க்க ஒரே மாதிரி இருந்ததும் ஆழ்மனதில் செயல்பட்டு அவளை ஒத்துக்க வச்சிருக்கணும். ஆனால் இதன் காரணமாக அவள் ப்ரெக்னன்ட் ஆவான்றதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை.''

இவ்வளவு கேவலமான ஒரு செயலைச் செய்து விட்டதாகக் கூறும் ஒருவன் அதை அதிக அதிர்வில்லாமல் - அதுவும் இவ்வளவு உரத்த குரலில் பகிர்ந்து கொள்ள முடியுமா? குமார் அது பற்றி நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

அப்பா அம்மாவின் காதுகளில் இது விழுந்து விடப் போகிறதே என்ற கவலை வேறு பவித்ராவுக்கு ஏற்பட்டது. குமாரைப் பிடித்து உலுக்க வேண்டும் என்ற வேகம் உண்டானது.

அடுத்த நொடியில் கணாமி வேகத்தில் அறைக்குள் நுழைந்தது ஓர் உருவம். அது குரு என்பதை அவள் முழுதாக உள்வாங்கிக் கொள்வதற்கு முன்பாகவே, அவன் குமாரின் கன்னங்களில் மாறிமாறி அறையத் தொடங்கியிருந்தான்.


மிகவும் கஷ்டப்பட்டுதான் குருவை குமாரிடமிருந்து பிரிக்க முடிந்தது.

14

பவித்ரா உரத்துக் குரல் கொடுத்தாள். ''ப்ளீஸ் குரு, கொஞ்சம் பொறுங்க. உங்க தம்பி இன்னும் என்னதான் சொல்றாருன்னு கேட்டுடலாமே.''

''அவன் என்ன சொல்றது? நானே உனக்கு விளக்கமா சொல்றேன். அஞ்சு வருஷமாகியும் குழந்தை பிறக்காததினாலே நானும் பவித்ராவும் டாக்டரிடம் செக் அப் செய்துக்கப் போயிருந்தோம். அதற்கு இரண்டு நாளைக்கப்புறம் நான் வெளியூர் போகவேண்டியிருந்தது.

ரெண்டு மாசத்துக்கு அப்புறம் அதே டாக்டரிடம் செக் அப் செய்துகொண்டோம். ஷிப்ரா கர்ப்பமா இருக்கிறதைக் காட்டிக்



கொடுத்தது அந்தச் சோதனை. சந்தோஷம் உண்டானது. ஆனால் கூடவே வேறொரு உணர்ச்சியும் வலுவடைஞ்சுக்கிட்டே வந்தது. அது எப்படி ஐந்து வருடங்

களாக நடக்காத ஒண்ணு இப்போது நடக்கும்? என் மனசு ஒப்புக்கலே. 'ஷிப்ராவின் வயிற்றில் வளர்வது என் குழந்தை தானா?'ன்னு சந்தேகம் வந்தது. ஆனால், அப்போதுகூட ஷிப்ராவின் நடத்தையில் எனக்கு சந்தேகம் வரலே. ஷிப்ராவும் டாக்டரும் சேர்ந்து எனக்கு தெரியாமல் ஏதோ சதியில் ஈடுபட்டதா நினைச்சேன். சோதனைக் குழாய் குழந்தை பற்றியெல்லாம் கொஞ்சம் படிச்சது அரைகுறையாக நினைவுக்கு வந்தது. அதே ஆஸ்பத்திரியிலே 'செமன் வங்கி'யும் உண்டு.

அதற்கு ஒரு வாரத்துக்குப் பிறகு அம்மாவுடன் ஒரு முறை பேசியபோது, அவங்க யதார்த்தமாகச் சொன்ன சில தகவல்கள் எனக்கு விபரீதமாகப்பட்டன. நான் ஊரில் இல்லாதபோது குருவும் ஷிப்ராவும் மிகவும் சந்தோஷமாக அரட்டை அடிச்சதாகவும், தினமும் அருகில் இருக்கும் பூங்காவுக்கு வாக்கிங் போய் வந்ததாகவும் குறிப்பிட்டாங்க. என் மனசிலே ஒரு புதிய சந்தேகம் விழுந்தது. திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்ததில் அது தான் உண்மைன்னு தோணிச்சு. ஷிப்ராவிடம் வெறுப்பு வந்தது. ஆனால் ஆதாரமில்லாமல் எப்படிச் சொல்வது?

முதலில் மறுத்த குரு இப்போது தானாக வந்து உங்கிட்டே உண்மையை ஒத்துக்கிட்டிருக்கான்.

எப்படியாவது குரு மேலே உன் சந்தேகம் விழணும்னு நினைச்சேன். அதனால்தான் குரு ஒரு மொட்டை கடிதம் எழுதியதுபோல புதிர்களாகக் கொடுத்து, ஒரு கடிதத்தை என் முகவரிக்கே ஷிப்ராவுக்கு வருகிற மாதிரி போஸ்ட் செய்தேன். நீ வரும்போது அந்தக் கடிதம் தற்செயலாக உன் கண்ணில் படுவதுபோல திட்டமிட்டு வைத்தேன். நான் நினைத்த மாதிரியே நீ அந்தக் கடிதத்தை எடுத்துட்டுப் போனே. அந்தக் குறிப்புகளை உன்னால் எளிதாக உடைத்துப் புரிஞ்சுக்க முடியும்னு எனக்குத் தெரியும்.''


'' 'டிசம்பர் 7 மறக்க முடியுமா? - குமார்' என்று தான் பொருள் விளங்கிக் கொண்ட கடிதத்தை உண்மையில் எழுதியது குரு தானா?'' பவித்ராவின் அதிர்ச்சி கரைகடந்தது. குரு தொடர்ந்து பேசினான்.

''ஷிப்ரா தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் குமார்னு என்னாலே யூகிக்க முடிந்தது. நான் உண்மையைக் கண்டுபிடித்ததை குரு அவளிடம் செல்ஃபோனில் சொல்லியிருக்கணும். உண்மை எனக்குத் தெரிந்து போனதில் கிலி ஏற்பட்டு ஷிப்ரா ரயிலுக்கு முன்னாலே விழுந்திருக்கணும். தற்கொலை செய்து கொள்ளத் தூண்டியதற்காக குருவை போலீஸ் பிடிக்கணும்னு நினைத்தேன். அதற்கு ஷிப்ராவின் செல்ஃபோன் சாட்சியாக இருக்கும்னு தோன்றியது. ஏன்னா அவளுக்கு வந்த

"சார்... மணி பதினொண்ணு ஆகுது. கடையைச் சாத்தலாமா?"

"எதுக்கும் காலையில வந்த லேடீஸ் யாராவது செலக்ட் பண்ணிக்கிட்டு இருக்காங்களான்னு பார்த்துட்டு சாத்துங்க!"

- எம்.அசோக்ராஜா



கடைசி கால் எதுன்றது அதிலே பதிவாகி இருக்குமே.''

புது டெல்லியிலிருந்துதான் ஷிப்ரா வுக்கு இறுதி அழைப்பு வந்திருந்தது என்பது முன்பே உறுதியானதுதானே! ஓ, இதற்காகத்தான் ஷிப்ராவின் செல்ஃபோனைக் கைப்பற்றுவதில் குரு கவனம் செலுத்தினாரா?

''ஆனால் வெளுத்த தலையுடன் கொஞ்சம் வயதானவர் ஒருவர் செல்ஃபோனைப் பற்றி விசாரித்ததாகத்தானே குணசுந்தரி என்னிடம் சொன்னா.''

சற்றுத் திகைத்த குரு, வேர்க்கடலை விற்கும் பெண்ணைத்தான் அவள் பெயரிட்டுக் குறிப்பிடுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டு, ''எங்க ஆஃபீஸிலே வயதானவனாக ஒருமுறை நாடகத்திலே நடிச்சிருக்கேன். அப்போது வாங்கின 'விக்'கும் வெள்ளை மீசையும் பயன்பட்டது'' என்று சுருக்கமாக விடையளித்தான்.

பேசிக்கொண்டே வந்த குரு, மீண்டும் ஆக்ரோஷமாக குமாரைத் தாக்க முயல, அதேசமயம் பவித்ராவின் செல்ஃபோன் ஒலித்தது.

''பவித்ரா, நான் விக்ரம் பேசறேன். ஒரு சின்ன ஆக்ஸிடண்ட்ல மாட்டிக்கிட்டேன். சின்னதாக ஃப்ராக்சர். காலிலே கட்டு போட்டிருக்காங்க'' என்றது விக்ரமின் குரல்.


''எந்த ஆஸ்பத்ரியிலே இருக்கீங்க விக்ரம்? சீரியஸா எதுவும் இல்லையே?'' அக்கறையும் கலவரமுமாக பவித்ரா கேட்க, குருவை வேகமாக உதறிவிட்டு அவளை நெருங்கினான் குமார்.

''விக்ரமுக்கு என்ன ஆச்சு? எங்கே இருக்கார்?'' என்று பதைபதைப்புடன் கேட்டான்.

(அடுத்த இதழில் முடியும்)



கல்கி



2008 நவம்பர் 2
ஸர்வதாரி ஐப்பசி 17
மலர் : 67
இதழ் : 14

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா – *பாரதியார்*


வைகோவின் வடிகட்டிய தேசத் துரோகம்!

விடுதலைப் புலிகளைக் கடுமையாக விமர்சித்து எழுதிய ஹிந்து நாளிதழின் கோவை - ஈரோடு அலுவலகங்கள் தாக்கப்பட்டன. ஆனால் இந்தத் தாக்குதலை, தமிழக முதல்வர் தொடங்கி, எந்தவொரு அரசியல்வாதியும் கண்டனம் செய்யவில்லை.

கருத்துச் சுதந்திரத்துக்கும் பத்திரிகை சுதந்திரத்துக்கும் நேர்ந்துள்ள அச்சுறுத்தல் இது என்பது ஓர் அபாயம்; விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுடைய வன்முறையையும் செயல்பாடுகளையும் இந்த 'மௌன' அரசியல்வாதிகள் அங்கீகரிக்கிறார்கள் என்பது மற்றொரு மிகப் பெரிய அபாயம். இந்த மௌன ஆதரவை வைகோ நன்றாக சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார். தமது பொதுக்கூட்டப் பேச்சில் (அக்டோபர் 21 அன்று) புலிகளுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்திருக்கிறார்! 'இலங்கை துண்டாடப்படாமல் காக்க இந்தியா எந்த விதத்தில் உதவினாலும் சரி, இந்தியாவே துண்டாடப்படும் அபாயம் ஏற்படும்' என்று பிரதமரை எச்சரித்திருக்கிறார்! தமிழ் ஈழம் உருவாக உதவுவதற்கு, தாமே படை திரட்டி, தலைமை தாங்கி நடத்திச் செல்ல முடியும் என்றும் அவர் சவால் விட்டிருப்பது, பகிரங்க புலிகள் ஆதரவுப் பேச்சு மட்டுமல்ல; வடிகட்டிய தேசத் துரோகமும்கூட. ஆனால், இதற்கும் தமிழக முதல்வர் மௌனம் காத்து மறைமுக ஆதரவு தெரிவிப்பார் என்று நம்பலாம்!

தமிழக அரசியல்வாதிகள் நினைப்பதுபோல், பிரபாகரன் தமிழ்





ஈழத்தைத் தனி நாடாகப் பெற்று, ஆட்சி புரிய அனுமதிக்கப்பட்டால், விடுதலைப்புலிகளின் அடுத்த குறி தமிழகமாக இராது என்பது என்ன நிச்சயம்? அப்போது இங்கே நிலவக்கூடிய கொடுங்கோன்மையில், யாரும் எதையும் மேடைபோட்டுப் பேசக்கூட முடியாது!

புலி ஆதரவுப் புயலில் நிலை தடுமாறும் தமிழக அரசியல்வாதிகள் மத்தியில், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் சி.ஞானசேகரன் (காங்கிரஸ்) மட்டுமே தெளிவாகச் சிந்தித்து, தைரியமாகப் பேசியுள்ளார். ராஜீவ் காந்தி கொலையாளிகளை ஆதரிக்கும் வெறிப் போக்கைத் துணிந்து கண்டனம் செய்துள்ளார். தடை செய்யப்பட்ட இயக்கத்தையும் அதன் தலைவரையும் பகிரங்கமாக ஆதரித்துப் பேசுவோரை, தமிழக முதல்வர் கைது செய்யாதது ஏன்? என்று நியாயம் கேட்டிருக்கிறார். தமிழ் உணர்வு என்பது, மொழி, பண்பாடு, உரிமைகள் காப்பதில் இருக்க வேண்டியதுதான். ஆனால், அந்த உணர்வு வெறியாக திசை மாறி நாட்டைத் துண்டாட அனுமதித்தால், தமிழ்ப் பண்பாடும் தமிழ் உணர்வும் தழைக்காது; விரைவில் அழிந்துதான் போகும். மும்பையில் ராஜ் தாக்கரே விசிறி விட்டிருக்கும் மராத்தியப் பிரிவினை உணர்வும் இத்தகைய விபத்தையே விளைவிக்கும்.

வரலாற்று ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பல்வேறு அழகான இழைகளைக் கொண்டு பின்னப்பட்ட நாடு இந்தியா. அதில் ஒவ்வோர் இழைக்கும் தனித் தன்மையும் குணமும் உண்டு என்பதற்காக, இழையிழையாகப் பிரிக்க ஆரம்பித்தால் நாடும் துவண்டு போகும்; அதன் மாநிலங்களும் தனித் தனி இழைகளாகி, வலுவிழந்து, சுருண்டு தொங்கும்.

இந்த விபரீதம் நோக்கிச் செல்லவும், மக்களைத் தூண்டவும் முற்படும் சுயநல அரசியல்வாதிகள் ராஜ் தாக்கரேயானாலும் சரி, வைகோவானாலும் சரி, கைதாகி தண்டனை பெற வேண்டும்; மக்களால் புறக்கணிக்கப்பட வேண்டும். ○



இன்ட்ரஸ்டிங் இன்ட்ராலேஸ்!



டாக்டர் டி. ராமமூர்த்தி

''**'லா**சிக்' முறையில் கிட்டப் பார்வைக் குறையையும் தூரப் பார்வைக் குறையையும், சிலிண்டரிகல் பவர் குறைபாட்டையும் நீக்கிவிட முடியும். இந்தச் சிகிச்சைக்குப் பிறகு கண்ணாடி அணியத் தேவையில்லை என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

ஆனால், லாசிக் சையாப்டிக்ஸ் சிகிச்சையின் அடுத்த கட்ட முன்னேற்றமான இன்ட்ராலேஸ் ஃபெம்டோ செகன்ட் லேசர் என்னும் முழுமையான லேசர் சிகிச்சை இப்போது கிடைக்கிறது!'' என்கிறார் கோவை தி ஐ ஃபவுண்டேஷன் தலைமை கண் மருத்துவர் டாக்டர் டி.ராமமூர்த்தி.

''லாசிக் சையாப்டிக்ஸ் சிகிச்சை முறையில், விழியின் மீது மெல்லிய திரையை (ஃப்ளேப்) உருவாக்க, மைக்ரோ கெரடோம் என்னும் உலோக பிளேடு பொருத்திய கருவியைப் பயன்படுத்தி வந்தோம். இந்த நவீன இன்ட்ராலேஸ் முறையில் உலோக பிளேடை உபயோகிப்பதே இல்லை. இதற்குப் பதிலாக, முழுக்கமுழுக்க லேசர் கதிர் பாய்ச்சி, குமிழ்களை உருவாக்கி, அந்தக் குமிழ்கள் ஒன்றுசேர்ந்து மெல்லிய திரை போன்ற மூடியை உண்டாக்குகின்றன. விழிக்கான எக்ஸைமர் லேசர் சிகிச்சை முடிந்து, அந்த மெல்லிய திரையை அப்படியே விழி மீது பொருத்திவிடுகிறோம். இதற்கு நூறு சதவிகிதம் லேசர் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இதுதான் இன்ட்ராலேஸ் முறையின் தனிச் சிறப்பு.

''உலோக பிளேடைவிட லேசர் கதிர் வீச்சு முறை இன்னும் பாதுகாப்பானது. சில குறைபாடுகள் காரணமாக லாசிக் முறை சிகிச்சைக்குத் தகுதி இல்லாதவர்களுக்குக்கூட, இன்ட்ராலேஸ் லேசர் சிகிச்சை தர முடியும்!'' என்கிறார் டாக்டர் ராமமூர்த்தி.

அமெரிக்க ராணுவமும், நாசா விண்வெளி ஆராய்ச்சி மையமும் இன்ட்ராலேஸ் முறையில் துல்லியமான பார்வை பெற்றவர்களைத்தான் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறது.

''இன்ட்ராலேஸ் முறை சிகிச்சை மிகச் சிறப்பானது. பாதுகாப்பானது. உடனடி பலன் தரக் கூடியது! மேலும் கண் ஒளி சிறப்பாக இருந்தால் தானே தீபாவளியை மகிழ்ச்சியோடு கொண்டாட முடியும்?'' என்கிறார் டாக்டர் ராமமூர்த்தி.

தி ஐ ஃபவுண்டேஷன் கோவை ஆர்.எஸ்.புரத்தில் பிரம்மாண்டமான ஆறு மாடிக் கட்டடத்தில், எல்லா வசதிகளோடும் இயங்கி வருகிறது. திருப்பூரிலும் இந்தக் கண் மருத்துவமனையின் கிளை இருக்கிறது.

மேலும் தகவல்களுக்கு, தொலைபேசி: 0422 - 254 4242 / 4243.

– சாருகேசி

நான் யார்? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது யாருக்கும் அத்தனை சுலபமில்லை. என்னை நானே இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டால் அதற்கு ஒரு பதில் உள்ளே இருந்து கிடைக்கிறது. ஆங்கிலத்தில் 'ப்ரீ கன்சீவ்டு நோஷன்' என்று சொல்வார்கள். அதாவது முன் தீர்மானம். 'நடிகைன்னா இப்படித்தான் இருப்பாங்க. மார்க்கெட் இருக்கறவரைக்கும் நடிப்பாங்க. அப்புறம் காணாமப் போயிடுவாங்க' என்கிற ஒரு முன் தீர்மானம். அதை உடைத்துக்கொண்டு வருகிறவள் நான் அப்போது இருந்தது.

நான் நடிக்க வந்த கொஞ்ச நாட்களிலேயே அவர்களை மாதிரி இருக்கக் கூடாது என்று நினைத்துக்கொண்டேன். அப்படி நான் பரிசோதனை முயற்சி போல வித்தியாசமான பாத்திரங்களில் நடிக்கும் போதெல்லாம், நிறையபேர் என்னிடம் வாதம் செய்திருக்கிறார்கள். வேண்டாம் என்று தடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் தாண்டித்தான் நடித்தேன். நடித்த பாத்திரங்களுக்கு ஒரு பெயரையும் வாங்கிக் கொடுத்தேன்.

'நடிகையா வரணும்' என்று என்றுமே நான் நினைத்ததில்லை. சொல்லப்போனால், நடிக்க வந்த புதிதில், நான் ஒரு நடிகை மாதிரியே இருக்க மாட்டேன். நடிப்பதில் பெரிதாக எனக்கு விருப்பமும் இருந்ததில்லை. அதிகமாக சினிமாகூடப் பார்த்ததில்லை. சினிமாவுக்கான வெளிச்



ரயில் ராதிகா to ராடன் ராதிகா

என்று எனக்கு சமயத்தில் தோன்றும்.

நான் சினிமாவுக்கு நடிக்க வந்தது ஒரு முக்கியமான காலக் கட்டம். அன்றைய தமிழ் சினிமாவில், ஸ்ரீ ப்ரியா, ஸ்ரீ தேவி, சுஜாதா என்று மிக முக்கியமான நடிகைகள் இருந்த காலக் கட்டம். 'இந்த ரோலுக்கு சுஜாதாதான் பெஸ்ட்', 'இந்த ரோலை ஸ்ரீ தேவியை விட்டா வேற யாராலயும் பண்ண முடியாது' என்று ஒவ்வொருவருக்கும் ஒரு தனி அடையாளம்

சம் துளிக்கூட விழாமல்தான் நான் இருந்தேன். எங்கள் வீட்டில் என்னுடைய தந்தை எம்.ஆர்.ராதா அவர்களுக்கு மட்டும்தான் சினிமாவோடு தொடர்பு இருந்தது. நான் வெளிநாட்டில் படித்துக்கொண்டிருந்தேன்.

நான் சென்னை மந்தைவெளியில்தான் பிறந்தேன். சென்னையில்தான் வளர்ந்தேன். படிப்பதற்காக மட்டும்தான் வெளிநாட்டுக்குப் போனேன். விடுமுறையில்

சென்னை வருவேன். ஒரு முறை என் தம்பியைப் பார்ப்பதற்காக சென்னைக்கு வந்தபோதுதான் அது நடந்தது.

எங்களுக்கு மிகவும் வேண்டியவர் ஒருவருடைய வீட்டுக்கு இயக்குநர் பாரதி ராஜா போயிருக்கிறார். அங்கே ஒரு புகைப் படத்தைப் பார்த்திருக்கிறார். நாங்கள் எல்லோரும் இருப்பதுபோல ஒரு புகைப் படம். அந்த வீட்டு உரிமையாளரிடம், 'இந்தப் பொண்ணு யாரு?' என்று கேட்டிருக்கிறார்.

அவர் 'பக்கத்தில்தான் வீடு' என்று சொன்னதும் அப்படியே நடந்தே எங்கள் வீட்டுக்கு வந்தார்.

அவர் எங்கள் வீட்டுக்கு வந்தபோது, நான் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தேன். பாரதிராஜா சார் என் அம்மாவிடம் பேசினார். என்னை நடிக்க வைக்கலாம் என்று இருப்பதாகச் சொன்

நடிகை ராதிகா



னார். என்னிடம் அவர், 'சினிமாவில் நடிக்கிறயா?' என்று கேட்டபோது நான் அவரிடம் கேட்ட கேள்வி: 'என்னை யாரு பார்ப்பாங்க?'

ஆனாலும் அவர் ஏதேதோ சொல்லி என்னைச் சமாதானப்படுத்தினார். அவர் என்னிடம் பேசியபோது நான் நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் மகள் என்பது அவருக்குத் தெரியாது.



நடிகைன்னா இப்படித்தான் இருப்பாங்க என்கிற தீர்மானத்தை உடைத்துக்கொண்டு வருகிறவள் நான் என்று எனக்கு சமயத்தில் தோன்றும்.

என் அம்மா, 'கொஞ்சம் முயற்சி பண்ணிப் பாரு. முடியலையா, பேசாம வெளிநாட்டுக்கே திரும்பிப் போயிடு' என்று சொன்னதும், 'சரி நடிச்சுத்தான் பார்ப்போமே' என்கிற அசட்டு தைரியம் எனக்கு வந்தது. 'சரி' என்றேன். நடிப்புக்கான சீரியஸ்னஸோ, இம்பார்ட்டன்ஸோ, இம்பேக்டோ தெரியாத வயது அது.

நான் நடிக்க ஒப்புக்கொண்ட பிறகுதான், பாரதிராஜா சாருக்கு நான் எம்.ஆர்.ராதாவின் மகள் என்பதே தெரியும். கொஞ்சம் பயந்துகூடப் போய்விட்டார் என்றுதான் சொல்லவேண்டும். என் தந்தையும் நான் நடிக்க ஒப்புக்கொண்டதைக் கேள்விப்பட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். அதற்குக் காரணம் இருந்தது. எங்கள் வீட்டில் என் தங்கை நிரோஷாதான் நடிகையாக வருவாள் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவள்தான் பார்க்கக் கொஞ்சம் அழகாக இருப்பாள். எப்போதும் துறுதுறுவென்று இருப்பாள். பாடுவாள். நடனமாடுவாள். நான் இது எதையும் செய்ய மாட்டேன். எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படித்துக்கொண்டிருப்பேன். அதனால்தான் என் தந்தை மிகவும் ஆச்சரியப் பட்டார்.

'கிழக்கே போகும் ரயில்' படத்தில் பாஞ்சாலி என்கிற கதாபாத்திரம். அந்த வயதில் எனக்கு நடிப்பதற்குப் பயமாக இல்லை. ஆனால், இப்படித் தொல்லை பண்ணுகிறார்களே என்கிற ஓர் உணர்வு மட்டும் இருந்தது. ஷூட்டிங்கில் வெயிலில் நிற்கவேண்டும். அதுவும் காலில் செருப்பில்லாமல் நிற்க வேண்டும். இவையெல்லாம் எனக்கு மிகவும் தொந்தரவாக இருந்தன.

பாரதிராஜா சார் என்னை எப்படி எப்படியோ சமாதானப் படுத்தினார். ஒரு ஷாட்டில் நன்றாக நடித்தால் சாக்லெட் தருவார்.

அந்தப் படத்தில் 'பூவரசம்பூ பூத்தாச்சு' என்று ஒரு பாட்டு வரும். அந்தப் பாடல் படமாகிக்கொண்டிருந்தது. நான் அப்போது பெரிய நடிகை இல்லை. நடிக்க வந்த நான்காவது நாளோ, ஐந்தாவது நாளோ ஷூட்டிங்.

அந்தப் பாடலில், 'நாளெல்லாம் ஏங்கிக்கிட்டிருப்பேன். சாமிக்கு நேந்துக்கிட்டிருப்பேன்' என்று ஒரு வரி வரும். அந்த வரியைப் பாடும்போது, கதைப்படி ஒரு ரயில் கடந்து போகும். நான் கைகளைத்

தூக்கிக் காட்டிவிட்டு உட்காருவதுபோல நடிக்க வேண்டும்.

ரயில் கடந்துபோகும்போது பாடல் வரியே கேட்காது. ரயில் சத்தம் பாடல் சத்தத்தை அமுக்கிவிடும்.

அன்றைக்கு ரயில் போய்விட்டால், அடுத்த நாள்தான் ஷூட்டிங் எடுக்க முடியும். அந்தப் பக்கம் அந்த ஒரு ரயில், அந்த நேரத்துக்கு மட்டும்தான் கடந்து போகும். பாரதிராஜா சார் என்னை அழைத்தார்.

'இந்த ஷாட்ல பிரமாதமா நடிக்கறே!' என்று சொன்னார்.

'சார்! இதெல்லாம் எனக்கு பண்ணத் தெரியாது. சரியா வராது' என்றேன்.

'அதெல்லாம் ஒண்ணும் இல்ல. சரியா வரும். நீ மட்டும் சரியா இந்த ஷாட்டைப் பண்ணிட்டேன்னா உனக்கு ஒரு சாக்லெட் தர்றேன்' என்று சொன்னார். நான் அந்த ஷாட்ல நடிச்சேன். அவர்கிட்ட சாக்லெட் வாங்கினேன்.

'கிழக்கே போகும் ரயில்' படம் மிகப் பெரிய ஹிட். அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு என் நடிப்பைப் பற்றி அப்பா ஒன்றுமே சொல்லவில்லை. 'நீ எப்படி இப்படி நடிச்சே?' என்று மட்டும் கேட்டார். எனக்கு பரத நாட்டியம் தெரியாது, பாடத் தெரியாது, என்பதெல்லாம் அவருக்குத் தெரியும் இல்லையா? அதனால். ஆனால், பாரதிராஜா சாரை நிறையப் பாராட்டினார்.

அதற்குப் பிறகு, எனக்கு நடிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் வர ஆரம்பித்தன. ஆனாலும், எனக்கு என்னமோ இருட்டில் தள்ளிவிட்டதுபோல பயமாகவே இருந்தது. எனக்கு அப்போது எதுவுமே தெரியாது. உலகம் புரியாத வயது.

சமீபத்தில்கூட பாரதிராஜா சாரைப் பார்க்கும்போது, 'உன்னை இப்படிப் பார்க்க ரொம்பப் பெருமையா இருக்கு' என்று சொன்னார்: நான் விடாமல், 'என் வளர்ச்சிக்குக் காரணம் நீங்கதான் சார்' என்றேன். அவர் சொன்னார். 'நான் விதைதான் போட்டேன். மரமானதெல்லாம் நீதானே!'

ஆனால், நடிக்க வந்த ஆரம்ப காலத்தில் ரொம்பக் கஷ்டப்பட்டேன். இப்போது நினைத்தாலும் நான் படங்களில் நடித்த அனுபவங்கள் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கின்றன.



பாரதிராஜா சாரிடம் என் வளர்ச்சிக்குக் காரணம் நீங்கதான் என்றேன். அவரோ "நான் விதை தான் போட்டேன் மரமானதெல்லாம் நீதான்" என்றார்.


நடிப்பதில் விருப்பமே இல்லை. ஒவ்வொரு தடவை ஷூட்டிங்குக்குப் போகும்போது நடிக்கப் போகிறோம் என்கிற உணர்வே இருக்காது. ஏதோ ஒரு பிக்னிக்குக்குப் போவது போலவே இருக்கும்.

பாரதிராஜா சார் யூனிட்டில் நடித்தது வேறு அனுபவம். அதில் ஒரு பாதுகாப்பு உணர்வு இருந்தது. வெளி இடத்துக்குப் போகும்போது சின்னதா ஒரு பயம். யாரு, என்னவென்று தெரியாது. யாரிடமும் பேசுவதற்குக்கூட பயமாக இருக்கும். 1978-ல் நான் நடிக்க வந்தேன்.

1979-ல் அப்பா இறந்துபோனார்.

(ரயில் வரும்...)







சபாஷ்

இன்று இந்திய ரசிகர்களால் கொண்டாடப்படும் டெண்டுல்கர், ஒரு வருடத்துக்கு முன்பு பெரும் சுமையாக இருந்தார். 2007 உலகக் கோப்பையில் முதல் சுற்றிலேயே இந்தியா வெளியேறியதற்கு எல்லோருடைய கைகளும் சச்சினையே சுட்டிக்காட்டின. கொதிநிலையில் இருந்தார்கள் ரசிகர்கள். டெண்டுல்கர் அணிக்கு அவசியமா என்று முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் அத்தனை பேரும் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தனியார் தொலைக்காட்சி நடத்திய வாக்கெடுப்பு ஒன்றில், சச்சின் ஒருநாள் அணியில் இருந்து விலக்கப்படவேண்டும் என்று பெரும்பான்மையோர் திட்டவட்டமாக முடிவெடுத்திருந்தார்கள். 'சச்சினைப் பார்த்தால் காமெடியாக இருக்கிறது' என்று பேட்டி கொடுத்தார் முன்னாள் இங்கிலாந்து கேப்டன் மைக் ஆர்தர்டன். 'பேசாமல் சச்சின் ரிடையர் ஆவதுதான் சரி, எதற்காக சும்மா ஆடிக்கொண்டு?' என்று குட்டு வைத்தார் இயன் சேப்பல். களேபரங்கள் முடிந்து சில மாதங்கள் கழித்து அறிவிக்கப்பட்ட 20-20 உலகக் கோப்பை இந்திய அணியில் டெண்டுல்கர் இடம் பெறவில்லை.

மேலே சொன்னதில் கால்வாசிகூட கங்குலி அனுபவிக்கவில்லை. இராணி கோப்பைக்கான அணியிலிருந்து விலக்கப்பட்டவுடன், உடனே ஓய்வு பெறுவதாக உணர்ச்சிவசப்பட்டு அறிவிப்பு செய்தார். இவர் மட்டுமல்ல; கிட்டத்தட்ட எல்லா கிரிக்கெட் வீரர்களும் விமர்சனங்களுக்குப் பதில் சொல்லத் திணறும்போது, ஓய்வு அறிவிப்பையே கவசமாகப் பயன்படுத்துவார்கள். ஆனால் சச்சினின் ஆயுதம், கவசம் எல்லாமே அவர் மைதானத்தில் குவிக்கும் ரன்கள்தான். விமர்சகர்களுக்குக் காது கொடுத்து அவருக்குப் பழக்கமில்லை.

ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் 12,000 ரன்களைக் கடந்தபின், ஒருநாள் மற்றும் டெஸ்ட் மேட்ச் இரண்டிலும் அதிக ரன்களைக் குவித்த வீரர் என்கிற பெருமை இப்போது டெண்டுல்கர் வசம். ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிக செஞ்சுரி அடித்த தனிப் பெருமையும் சச்சினுக்கே. 2002ல் விஸ்டன்

ச.ந. கண்ணன்

சச்சின்! பெருமையின் ஆவணம்

இதழ், பிராட்மேனுக்கு அடுத்த மிகப் பெரிய கிரிக்கெட் வீரர் என்று இவரைப் புகழ்ந்தது. இந்திய அரசாங்கம் டெண்டுல்கருக்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, அர்ஜுனா விருது, பத்மஸ்ரீ மற்றும் பத்ம விபூஷண் விருதுகளை அளித்து கௌரவித்துள்ளது. காதைப் பொத்திக்கொண்டு வேலை செய்ததனால் உண்டான பலன்.

பதினாறு வயதில் சச்சின் பங்கேற்ற காட்சி ஆட்டம் ஒன்றில், 'என்ன தம்பி எங்க பந்தையெல்லாம் அடிக்க மாட்டியா?' என்று அவரைச் சீண்டி பயமுறுத்தினார் ஸ்பின்னரான அப்துல் காதர். அவர் அடுத்து வீசிய ஓவரில் 6, 0, 4, 6, 6, 6 என்று ஒவ்வொரு முறையும் பந்து எல்லைக்கோட்டுக்கு வெளியே போய் விழுந்தது. விளையும் பயிர் அங்கே முளைத்தது.



ஆரம்பத்தில் ஒரு வேகப்பந்து வீச்சாளராக ஆகவேண்டும் என்பது டெண்டுல்கரின் கனவு. இதற்காக, சென்னையிலுள்ள எம்.ஆர்.எஃப் வேகப்பந்து பயிற்சி நிலையத்தில் பயிற்சியும் எடுத்திருக்கிறார். ஆனால் 5 அடி 4 அங்குலம் இருந்து கொண்டு வேகப்பந்து வீச்சில் பெரிதாக எதுவும் சாதிக்கமுடியாது என்பதால், மனம் மாறி பேட்டிங்கில் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கினார். டெண்டுல்கரோடு ஆடத் தொடங்கிய மஞ்சரேக்கரும் காம்ப்ளியும் சிறிது காலத்தில் மங்கத் தொடங்கி, அணியை விட்டு வெளியேறினார்கள். ஆனால் இதுவரை ஐந்து உலகக் கோப்பைப் போட்டிகளைப் பார்த்துவிட்ட சச்சினை, அடுத்த (2011) உலகக் கோப்பையிலும் காண ரசிகர்கள் இப்போது பிரியப்படுகிறார்கள்.

பீலேவையோ, ஜெஸ்ஸி ஓவன்ஸையோ, ஜான் போர்க்கையோ நாம் பார்த்தது கிடையாது. ஆனால் சச்சின் சாதனைகளை நாம் அருகில் இருந்து பார்த்தது நம் பாக்கியம். கலைஞனும் விளையாட்டு வீரனும் வாழ்ந்த காலத்தில் பேசப்படுவதைவிட, மரித்த பின்னர்தான் அதிகமாகப் போற்றப்படுவர். நூறு ஆண்டுகள் கழித்துப் பார்த்தாலும் முக்கியமான ஆவணமாக சச்சினின் சாதனைகள் மெச்சப்படும்; பாதுகாக்கப்படும். ●

இருள் நீக்கும் ஞானஒளி

த.கி.நீலகண்டன்

அம்பிகை ஒருமுறை விளையாட்டாக ஈசனது இரு கண்களையும் தன் கைகளால் பொத்தினாளாம். முக்கண்ணனின் இரு கண்கள் சூரிய சந்திரர்கள் அல்லவா? இரண்டு கண்கள் மூடியவுடன் அக்னி சொரூபமான மூன்றாவது கண் திறந்துவிட்டது. அவ்வளவு தான்! இந்தப் பூவுலகின் உயிர்கள் எல்லாம் அந்த வெப்பம் தாங்காது தத்தளித்தன. அம்பிகையின் உடல்கூட அந்த வெப்பம் தாங்காமல் வியர்த்துவிட்டதாம்! அந்த வியர்வையில் இருந்து விகாரமான உருவத்துடன் ஓர் அசுரன் தோன்றினானாம்! பிரபஞ்சத்தில் அந்தகாரம் (இருள்) சூழ்ந்த நேரத்தில் தோன்றியதால் கரியநிறமும் பார்வையற்றவனுமாக விளங்கிய அந்த அசுரன் அந்தகாசுரன் என்று பெயர் பெற்றான்.

வழக்கமான புராணக் கதைகளின் போக்குப்படி, அந்த அசுரன் பிரம்மதேவனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து, அதன் பயனாக அழகிய உருவமும் கண்பார்வையும் பெற்றான். அதோடு, உடலில் கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரை அழிவில்லை என்ற வரத்தையும் பெற்றான். அதனால் அகந்தை மிகுந்து நல்லோரை வாட்டி வதைத்தான். அந்தப் பாவங்களின் உச்சமாக, அம்பிகையிடமே மையல் கொண்டான். அவன் அம்பிகையைக் கவர்ந்து செல்ல முற்பட்ட போது சிவபெருமான் பாசுபத விரதத்தில் இருந்ததால், பிரம்மா - விஷ்ணு ஆகியோர் அசுரனோடு போர் புரிந்தனர். அசுரகணம் அழிய அழிய மீண்டும் மீண்டும் தோன்றவே, தேவர்கள் திகைத்து நின்றனர். அசுர குருவான சுக்ராச்சாரியார் மிருத்யுஞ்சய மந்திரம் ஜபித்து மாண்ட அசுரர்களை உயிர்ப்பித்துக் கொண்டிருந்தார். அதே சமயம், விரதம் முடிந்து அங்கு தோன்றிய பெருமான் சுக்ராச்சார்யாரை எடுத்து விழுங்கிவிட்டாராம்! அந்தகாசுரன் மட்டும் அயராது போர்புரிந்துகொண்டிருந்தான். அவன் உடலில் இருந்து சிந்திய உதிரத்தில் இருந்து பல அந்தகாசுரர்கள் தோன்றவே, பெருமான் தனது வலது தோளில் இருந்து 'திரிபுர பைரவி' என்ற சக்தியைத் தோற்றுவிக்க, அவள் அந்தகனின் உடலில் இருந்து சிந்திய இரத்தத்தையெல்லாம் கபாலத்தில் ஏந்திக் குடித்துவிட்டாள்! கடைசியில் சிவபெருமானால் வீழ்த்தப்பட்ட அந்தகாசுரன் தன் தவறை உணர்ந்து சிவபெரு



அந்தகாசுரசம்ஹார மூர்த்தி

மானிடம் மன்னிப்புக் கேட்டானாம். அவரும் மனமிரங்கி, அவனை நல்வழிப்படுத்தி தன் சிவ கணங்களில் ஒருவனாக்கினாராம்!

மிக நீளமான இந்தப் புராணக் கதையில், அந்தகாசுரனை வீழ்த்தி தன் சூலத்தால் குத்தியெடுத்த வீரச்செயல் நிகழ்ந்த இடம் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள திருக்கோவிலூர். இது அட்டவீரட்டத்தலங்களில் ஒன்று. இந்தத் திருத்தலத்தில் அந்தகாசுர வதத்தை நினைவுகூறும் வகையில் ஒரு அழகான செப்புத் திருமேனி வடிவில் பெருமான் விளங்குகிறார். நின்றகோலத்தில் நான்கு திருக்கரங்கள் கொண்ட பெருமான் இவர். இரண்டு திருக்கரங்களில் மானும் மழுவும் ஏந்தியிருக்க, வலது கீழ்க்கரம் தலைக்கு மேல் உயர்ந்து நீண்ட சூலத்தைப் பிரயோகிக்கும் வகையில் அதன் அடிப்பாகத் தண்டைப் பிடித்திருக்க, இடது கீழ்க்கரம் சூலத்தண்டின் நடுப்பகுதியைப் பிடித்து அழுத்தமாக ஊன்றும் வகையில் அமைந்திருக்கிறது.

திரண்ட தோள்கள். அகன்று விரிந்த மார்பு. குறுகிய இடை. வலுவுள்ள சதைப் பற்று கொண்ட தொடை, முழந்தாள் கணைக்கால்கள். ஒரு வீர இளைஞனுக்குரிய அங்கலட்சணங்கள் அனைத்தும் கொண்டு விளங்குகிறது இந்தத் திருவுருவம்.

நிமிர்ந்த நோக்குடைய திருவிழிகள். எடுப்பான நாசி. போருக்கு நின்றிடும் போதும் உளப்பொங்கல் இல்லாத, அமைதி தவழும், புன்முறுவல் பூத்த திருவதனம். பெருமானின் திருவடிக் கீழ் அந்தகாசுரன் தலைகுப்புற வீழ்ந்து கிடக்கிறான். அவன் பிட்டத்தின் மீது வலது பாதமும், கழுத்தின் மீது இடதுபாதமும் ஊன்றியிருக்க, சற்றே மடித்து உயர்த்திய இடது முழந்தாள் இந்தக் கோலத்துக்கு ஒரு தனி அழகையும் கம்பீரத்தையும் கொடுக்கிறது. இடையில் அணிந்த இறுகிய கச்சமும், அங்கங்களை அழகு செய்யும் ஆபரணங்களும் நீண்ட ஜடாமகுடமும் மிக நுணுக்கமாக வடிக்கப்பட்டுள்ளன.



சிவபெருமான் அந்தகாசுரனை மன்னித்து, அவனை நல்வழிப்படுத்தி தன் சிவகணங்களில் ஒருவனாக்கினார்.

அளவற்ற பாவச் செயல்கள் புரிந்தவன், அதற்குரிய தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும் என்பதையும், அதன் பிறகு மனம் திருந்தி மன்னிப்புக் கேட்பவனுக்கு நிச்சயம் நல்ல கதியுண்டு என்ற நம்பிக்கையையும் ஊட்டுகிறார் அந்தகாசுர சம்ஹார மூர்த்தி. அஞ்ஞான இருள் நீக்கும் ஞான ஒளி! ●

டூயட் கதை - 11

கண்மணியே காதல் என்பது கற்பனையோ?

- மகேஷ்வரன் -

"மலர்... இந்த ஃபோட்டோவைப் பாருடி..." - பூரணம் அழாதகுறையாய்க் கெஞ்சினாள்

"வேணாம்மா... நான் எதையும் பார்க்கலை..."

மலர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"பிடிவாதம் பிடிக்காதே மலர்..."

"எனக்கு இப்ப கல்யாணம் வேணாம்..." அழுத்தமாய் உச்சரித்தாள்.

"முப்பது வயசு நெருங்கிடுச்சு. இந்த வரனையும் விட்டுட்டா... அப்புறம் ரொம்பச் சிரமம்..! இனி உன் குடிகார அப்பனை நம்பிப் பிரயோஜனமில்லை. வயசுப் பொண்ணை ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுக்கணும்ங்கற ஆசையே இல்லாத மரக்கட்டை ஜென்மம்."

பூரணம் தழுதழுத்தாள்.

தாயின் தவிப்பை லட்சியம் செய்யாமல், ஹேண்ட்பேக்கினுள் டிபன் பாக்ஸைத் திணித்தான் மலர்.

"எனக்கு ஆஃபீஸுக்கு நேரமாயிடுச்சும்மா..."

"மறக்காம நாளைக்கு லீவு சொல்லிடு..."

பின்னாலேயே ஓடிவந்தாள் பூரணம்.

தெருமுனையில் இருக்கிற பஸ் ஸ்டாண்டை நோக்கிச் சிட்டாய்ப் பறந்திருந்தாள் மலர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை பார்க்கும் எக்ஸ்போர்ட் கம்பெனி அது. மலர் அங்கேதான் வேலை பார்க்கிறாள். இருபதாவது வயதிலேயே இங்கே வேலைக்குச் சேர்ந்தவள். இத்தனை வருடச் சம்பாத்தியப் பணத்தையும் குருவி சேர்ப்பது மாதிரி பேங்கில் சேமித்து வைத்திருக்கிறாள் அம்மா.

எப்படியாவது மலரைக் கரையேற்றிவிட வேண்டும் என்பது அவள் கனவு.

அம்மாவுக்குத் தையல் தெரியும். தெருப்பிள்ளைகளுக்கு டியூஷன் நடத்துவாள். ஓய்வு நேரத்தில் அரிசி அப்பளம், வடகம் எனத் தயாரித்து விற்பாள். வருகிற சொற்பமான வருமானத்தில்தான் குடும்பத்தை நடத்துகிறாள். மலரின் சம்பளப் பணத்தில் ஒரு ரூபாய்கூட தொட மாட்டாள்.

மலர் ஒரே பெண்.

அவளுக்குக் கீழே தம்பியோ தங்கையோ இல்லாததுதான் சற்று ஆறுதலான விஷயம்.

"சொல்லிட வேண்டியதுதானே?"

மத்தியான உணவு இடைவேளையில்... சாப்பிட்டபடியே கேட்டாள் சுருதி.

''எதை...?''

தயிர்சாதத்தோடு இருந்த வடுமாங்காயை எடுத்து ஒரு கடிகடித்தாள் மலர்.

''உன் காதலை...''


''பயமாயிருக்குடி...''

''அப்போ மறந்துடு...''

''மறக்கறதுக்கா காதலிச்சேன்...?''

சுள்ளென்று கோபம் வந்தது மலருக்கு.

''உன்னை நீயே ஏமாத்திக்காதே மலர். சீக்கிரமா... ஆதவன்கிட்டே மனம் திறந்து



பேசிடு... உன்னோட காதலை கோடிட்டுக் காட்டிடு...''

அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை. தயிர்சாதமும், வடுமாங்காயும் தொண்டைக்குள் இறங்க மறுத்தன. பாதிச் சாப்பாட்டை மூடி வைத்துவிட்டுக் கைகழுவ எழுந்தாள் மலர்.

கண்களுக்குள் ஆதவன் தலையைச் சாய்த்துச் சிரித்தான்.

ஆதவன் அதே கம்பெனியில் மானேஜராக வேலை பார்க்கிறான். அழகன்; யாரையுமே சபலத்தோடு பார்க்காதவன்.

மலருக்கு அவனைப் பிடிக்கும். குறுகுறுப்பான அந்தக் கண்களைப் பிடிக்கும். தலையைச் சாய்த்து, தெத்துப்பல் காட்டிச் சிரிக்கிற சிரிப்பு பிடிக்கும். ராஜகுமாரன் மாதிரி தோள்களைக் குலுக்கியபடியே... நடக்கிற நடை பிடிக்கும். கண்களை உறுத்தாத விதத்தில் லைட் கலரிலேயே தினம் தினம் அவன் உடுத்தி வருகிற உடைகளைப் பிடிக்கும்.

எந்தப் பெண்ணோடும் வலியப் போய் பேசாத ஆதவன்... மலரோடு மட்டும் நன்றாகப் பேசுவான்.

மலர் இருக்கிற செக்ஷனுக்குள் அடிக்கடி வருவான்.

மலரோடு பேச வேண்டும் என்பதற்காக வருகிறானா...? இல்லை.. வேலை காரணமாக வருகிறானா...? மலருக்குக் குழப்பமாக இருக்கும்.

அருகில் வந்து அவன், ''மலர்'' என்று மென்மையாக அழைக்கும்போது, 'அப்படியே அவனுடைய தோள்மீது சாய்ந்து கொள்ளலாமா?' என ஏக்கம் படரும். தன்மீது எண்ணிக்கையில்லாமல் பட்டாம் பூச்சிகள் படபடத்து மொய்ப்பதுபோல் உணருவாள்.

ஆதவன் அவளுக்குள் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தான்.

பேருந்துக்காக பஸ் நிறுத்தத்தில் காத்திருக்கும் போது பக்கத்து டீக்கடையிலிருந்து,

''கண்மணியே காதல் என்பது
கற்பனையோ
காவியமோ கண் வரைந்த
ஓவியமோ...''

பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

அவளுக்குப் பிடித்த பாடலை மனம் முணுமுணுக்கத் துவங்கிவிட்டது.

வீட்டில் அம்மா பார்க்கிற வரன்களையெல்லாம் தட்டிக் கழித்து, புதையலைப் போல் காதலைப் பூட்டிப் பூட்டி வைத்தாள் தனக்குள்.

''ஆதவனுக்கு மூணு தங்கச்சிங்க. அப்பா கிடையாது. கடைசி தங்கச்சியோட கல்யாணத்தையும் இப்பத்தான் முடிச்சார். அவரோட ரூட் கிளியரா யிடுச்சு. இனியும் லேட் பண்ணாதே மலர்...'' சுருதி தவித்தான்.



''எனக்கு முப்பது வயசுடி. ஆதவன் ஏத்துப்பாரா?''

''ஆதவனுக்கு மட்டும் இருபத்தியேழா நடக்குது? அவருக்கு முப்பத்தி மூணைத் தாண்டிடுச்சு. அவரோட பி.எஃப். லிஸ்ட்ல பார்த்தேனே... செவன்டிஃபோர்ல பிறந்திருக்கார்...''

''தயக்கமா இருக்குடி...''

''நேர்ல சொல்ல வெட்கமா இருந்தா... ஃபோன் மூலமா சொல்லிடு...'' ஆதவனின் செல்ஃபோன் நம்பர் எழுதியிருந்த துண்டுக் காகிதத்தை மலரின் கையில் திணித்தாள்.



இந்த இதழில் இடம் பெற்ற காதல் தீபாவளி கவிதைகளை எழுதியவர்

- எஸ். நடராஜன்

அவனிடம் பேச, கருதி சொல்லிக் கொடுத்தாள்.

ஆதவன் அன்றைக்கு வேலைக்கு வரவில்லை.

இன்னும் இரண்டு நாட்களுக்கு வர மாட்டானாம். லீவு போட்டிருக்கிறானாம். பேசிக் கொண்டார்கள். கம்பெனி கேண்டீனுக்குப் போய், கூட்டம் இல்லாத இடமாய்ப் பார்த்து அமர்ந்து கொண்டாள்.

துண்டுக் காகிதத்தில் கருதி குறித்துக் கொடுத்த ஆதவனின் எண்களை செல்ஃபோனில் மெல்ல அழுத்தினாள்.

மறுமுனையில் ரிங்டோனாய் ஒலித்தது அந்தப் பாடல்.

'மலரே மௌனமா? மௌனமே வேதமா? மலர்கள் பேசுமா? பேசினால்...'

தொடர்ந்து ஆதவனின் குரல்... ''ஹலோ... யாரு... யாருங்க...?'' கேட்டது.

மலரால் பேச முடியவில்லை. வார்த்தை வரவில்லை. தொண்டைக்குள் வார்த்தைகள் சிக்கிக் கொண்டன.

சட்டென்று தொடர்பைத் துண்டித்தாள்.

மறுநாள் மத்தியானச் சாப்பாட்டு நேரத்தில் கருதியிடம் விஷயத்தைச் சொன்னபோது படபடத்தாள், கோபமாய்த் திட்டினாள்.

''மலரே மௌனமாங்கற பாட்டை ரிங்டோனா வெச்சிருக்காரே... இப்பக் கூடவா புரியலை உனக்கு? ஆதவன் உன்னைக் காதலிக்கிறார்... நீ மௌனம் கலைக்க மாட்டியான்னு ஏங்கறார்...''

''என்னை என்ன பண்ணச் சொல்றே?''

''பேசு...''

செல்ஃபோனைப் பிடுங்கி ஆதவனின் எண்களை அழுத்திக் கொடுத்தாள். 'மலரே மௌனமா' பாடல் ஒலித்தது. தொடர்ந்து ஒரு பெண்ணின் குரல்.

''நா ஆதவனோட அம்மா... நீங்க யாரு?''

''ஆதவன் சாரோட பேசணும்...''

''அவன் குளிச்சுட்டு இருக்கான்... இன்னைக்கு அவனுக்குப் பொண்ணு பார்க்கப் போறோம்... எதுவா இருந்தாலும் நாளைக்குப் பேசிக்கங்க.''

மறுமுனையில் தொடர்பு துண்டிக்கப்



"நேத்து ராத்திரி முழுக்க தூக்கத்தில என்னைத் திட்டிக்கிட்டே இருந்தீங்க"

"நான் எங்கே தூங்கினேன்?"

- ஜி. லட்சுமிபதி

பட்டது. மலருக்குக் கன்னத்தில் அறை பட்டது போல இருந்தது. சுருதியின் தோளில் சாய்ந்து கதறினாள்.

''நா ஏமாந்துட்டேன்டி... ஆதவன் என்னைக் காதலிக்கலை. அவர் மனசுல நானிருந்தா... பொண்ணு பார்க்கப் போறதுக்குச் சம்மதிப்பாரா? என்னை நானே... முட்டாளா ஆக்கிட்டு இருந்துட்டேன்...''

''ஆதவன் உன்கிட்டே மட்டும் வலிய வந்து பேசுவாரே... நீ ஒருநாள் லீவு போட்டிருந்தாலும்... மலர் வரலியான்னு துடிப்பாரே... அதுக்குப் பேரு காதல் இல்லையா?''

சுருதியின் முகம் நிறம் மாறியது.

''எல்லாமே கற்பனைடி...''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் மலர்.

'இன்னைக்கு அரை நாளாவது லீவு போட்டுட்டு வந்துடு மலர்.'

காலையில் அம்மா பின்னாலேயே ஓடிவந்து கெஞ்சியது நினைவுக்கு வந்தது.

லீவு சொல்லிவிட்டு அவசரமாய்க் கிளம்பினாள்.

''அதிசயமா நீ வந்துட்டே. ஆனா... அவங்க வரலை...'' - அம்மா வருத்தமாய்ச் சொன்னாள்.

''ஏம்மா...?''

''மாப்பிள்ளைப் பையனுக்கு விருப்பமே இல்லையாம். அவங்க ஆஃபீஸ்ல வேலை பார்க்கற ஒரு பொண்ணைக் காதலிக்கறானாம். கடைசி நேரத்துலதான் அவங்கம்மாகிட்டே உண்மையைச் சொல்லியிருக்கான்... சண்டாளன்... உன்னோட ஃபோட்டோவைக் கொடுத்தனுப்பியிருந்தேன். அந்தக் கவரை விரல் நுனியாலே கூட தொடலையாம். பொண்ணை நேர்ல போய்ப் பார்த்துக்கறேன்னு... அவங்கம்மாகிட்டே அவன் அப்பவே தட்டிக் கழிச்சிருக்கான். காரணம் என்னன்னு இப்பத்தான் எங்களுக்குப் புரியுது. அவன்தான் வரலையே... அவனோட ஃபோட்டோவை எதுக்கு வெச்சிருக்கணும். தரகர்கிட்டே கொண்டுபோய் வீசிட்டு வர்றேன்...''

அம்மா கோபத்தோடு கிளம்பினாள்.

திடீரென்று மலருக்குள் மின்னல் மின்னியது.

''அந்த ஃபோட்டோவைக் குடும்மா... பார்த்துட்டு தர்றேன்...''

வெடுக்கென்று பிடுங்கி, கவருக்குள் இருந்த புகைப்படத்தை வெளியே உருவினாள். பார்வையை வீசினாள்.

புகைப்படத்தில் ஆதவன் நேர்ப் பார்வை பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

'ஆயிரம் காலமும் நானுந்தன் மார்பினில்
தோரணமாய் ஆடிடுவேன்...'

மனதினுள் பாடல் ஒலிக்க... செல்ஃபோனில் ஆதவனின் எண்களை அழுத்தினாள் மலர்.

''சீக்கிரமா வாடா திருடா...'' என்றாள் கொஞ்சம் சத்தமாகவே. ●



விறுவிறு விற்பனையில்...
புதிய படத்தொடர்
கடி 'O' கடி
புதிய பகுதி
குழந்தைக் கடவுள்கள்!
8 மேஜிக் மன்னர்கள்!
கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...
கோகுலம்
நவம்பர் 2008 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!

குளிரூட்டப்பட்ட அறையின் கண்ணாடித் தடுப்புகளைத் தாண்டி, அம்மா அழைக்கும் குரல் கேட்டு ஆறுமுக ராஜா யோசனையிலிருந்து மீண்டார். கதவைத் திறந்து எட்டிப் பார்த்தால், மாடிப்படி வளைவில் மூச்சுத் திணறலுடன் அவரின் தாய் வள்ளி நின்றிருந்தார். வேகமாய்ப் படியில் இறங்கி, தாயின் கையைப் பிடித்து கீழே இறங்கிக்கொண்டே, ''ஆரும் இல்லியா? நீங்க எதுக்கு மாடி ஏறுனீங்க? இன்னுமா காலிங்பெல் ஸ்விட்ச் ரிப்பேர் செய்யலே? ரமேஷ் எங்கே?'' சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, வாசல் பக்கத்தில் இருந்து, ஐயன் குரல் பெரிதாய்க் கேட்டது.

''ஐயரு ஒருத்தர். அவரு பேரனுக்கு காலேஜ் அட்மிசன்னு நேத்தும் வந்திருந்தாரு. நான் பேசி அனுப்பிட்டேன். இன்னைக்குக் காலைல இருந்து கேட்டு வாசல்ல நின்னுக்கிட்டு இருக்காரு. பாவம்! ஐயன் ராவடி பண்ணிக்கிட்டு இருக்காரு. வெசையா வா.'' வேகமாய் வாசல்

போட்டிக்கதை 11



அட்மிஷன்

ராமசந்திரன் உஷா

பக்கம் போனால், கேட்டை பிடித்துக் கொண்டு ஒரு கிழவரும், கூடவே ஒரு பையனும் நின்றிருந்தனர். ஏனோ அவரின் கால்கள் தயங்கின. யோசனையுடன் நடந்தார்.

''காலேஜுல அட்மிஷன் சமாசாரமாம். வூட்டுப் பக்கம் வரக் கூடாதுன்னா, ரெண்டு நாளாய் வந்துக்கிட்டு இருக்காரு'' ஐயனின் குரல் புகார் கூறியது.

ஒல்லியான உருவம். உயரம் காரண மாய் கூன் விழுந்த உடல், கண்களில் ஒளி இல்லாமல், பஞ்சடைந்திருந்தது. கூட இருந்த பையனின் உருவத்திலும், உடை யிலும் ஏழைமை. கிழவனார் தடுமாற்ற மாய் கையைக் கூப்பினார்.

ராஜா யோசனையுடன் அவர்களைப் பார்த்தவர், ''முந்தாநாள் காலைல நீங்க ரெண்டு பேரும் ஆடிட்டர் கோபால கிருஷ்ணன் வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டு இருந்தீங்கதானே?'' என்று கேட்டார்.

கிழவர் தலையை ஆட்டிக் கொண்டே, ''இவன் என் பேரன். போன வருஷம் ஒரு ஆக்சிடெண்டுல எம் பொண் ணும், மாப்பிள்ளையும் தவறிட் டாங்க. தொண்ணூத்து மூணு பர்சண்டேஜ் வாங்கியிருக்கான். கவர்மெண்ட் கோட் டால உங்க காலேஜ்ல சீட் கெடச்சிருக்கு. ஆனா பணம் போறலை. எனக்குப் புரோ கிதம்தான் தொழில். அங்க இங்க உதவி கேட்டு, பாதிப் பணம் பொரட்டிட்டேன். ஆடிட்டர் மிஸஸ்தான், உங்களைப் பார்த் துப் பேசினா ஏதாவது வழி பொறக்கும்னு சொன்னாங்க.''

''ஐயருங்கதான் ஓஹோன்னு இருக் காங்களே. மொபெட் என்னா? மோட்டார் சைக்கிள் என்னான்னு கொழிக்கிறாங்க. நீங்க பஞ்சம் பாடுறீங்க?'' ஐயன் குரலில் நக்கல் வழிந்தது.

''எனக்கு சமஸ்கிருதம் எல்லாம் தெரி யாது. ஏதோ நாலு மந்திரம் உருப்போட்டு, நல்லது கெட்டது செஞ்சு வைப்பேன். வயசாச்சு. யாரும் என்னைக் கூப்பிடுற தில்லை. இவன் அத்தை வீட்டுல இருந்து படிச்சிண்டு இருந்தான். பாவம், அவனுக் கும் கஷ்ட ஜீவனம். இவனை காலேஜ்ல சேர்த்துட்டா என் கடமை முடிஞ்சது'' கிழவனார் தடுமாறி கீழே விழப் போனார். பேரன் அவரைப் பிடித்து ஓரமாய் உட்கார வைத்தான்.

துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, ''இவன் அம்மாவுக்கு பையனை இன்ஜினியர் ஆக்கணும்னு கொள்ளை ஆசை. பாவம்! சொல்லிக்கிட்டே இருந்தா. ஏதோ கடைசியா உங்ககிட்ட முயற்சி செஞ்சு பார்க்கலாம்னு கௌம்பிட்டேன். நீங்க ஏதாவது பார்த்து செஞ்சா உண்டு.'' அப்படியே சாய்ந்து உட்கார்ந்தார்.

''சார்! சீட் கெடைக்காதுன்னா பரவா யில்லை. கரஸ்ல பீ.காம். சேர்ந்துடுவேன். உங்களைத் தொந்தரவு செஞ்சதுக்கு ஸாரி சார்.'' பையன் குரலில் தயக்கம். அவன் கையில் இருந்த சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தார் ராஜா.

செல்பேசியை எடுத்து எண்ணைத் தட்டியவர், ''குமார்! குருபிரசாத்துன்னு



பேரு. நம்ம காலேஜ்ல அட்மிஷன் கிடைச்சிருக்கு. ஏழைப் பையன், ஆர்ஃபன் வேற. ஃப்ரீ சீட்ல அட்மிஷன் போட்டுடு. ஹாஸ்டலும்தான்! பையன்கிட்ட லெட்டர் தர்றேன்.'' செல்லை அணைத்தவர், ''ஐயா பெரியவரே, சந்தோஷம்தானே? கொஞ்ச நேரம் இந்த பெஞ்சுல ஒக்காந்து இருந்துட்டு, நம்ம வண்டியிலேயே காலேஜுக்குப் போய் சேர்ந்துடுங்க. நல்லா படிக்கணும் என்னா?'' என்று பையன் முதுகைத் தட்டிவிட்டு, தாயைப் பார்த்து, ''பாலு மோரு ஏதாவது குடுங்கம்மா'' என்றார். கிழவனார் கையெடுத்துக் கும்பிட்டவர், ஆகாயத்தைப் பார்த்தும் வணங்கினார். பையன் முகம் மலர்ந்தான்.

வீட்டில் நுழைந்த கவுண்டரின் முகம் கோபத்தில் கொதித்தது. ஆறுமுக ராஜா, தந்தையைச் சமாதானப்படுத்தும் வகையில் புன்னகை பூத்தார்.

''இதெல்லாம் நல்லா இல்லே. பணம் கட்டிச் சேர முடியலைன்னா, இவங்களுக்கு எதுக்கு நம்ம காலேஜ்ல ஸ்காலர்ஷிப், ஃப்ரீ ஹாஸ்டல் எல்லாம்? இந்த காலேஜ் ஆரம்பிச்சதே, நம்ம சாதி சனம் முன்னேறணும்னுதான்னு எம்.எல்.ஏ. சொல்லலை? அவரு காதுல விழுந்தா தப்பா நெனைக்கப் போறாரு.''

''நான் இந்த காலேஜ் நடத்த முழுப் பொறுப்பு எடுக்கும்போதே, என்னோட எந்தச் செயலுக்கும் குறுக்கே வர மாட்டேன்னு சொல்லியிருக்காரு. ஏழையில சாதி ஏதுங்கையா? அப்படி அவர் ஏதாவது சொன்னா, எம் பணத்துல கொடுக்கிறேன்.

இப்பத்தான் உங்க பேத்திகிட்ட இருந்து ஃபோன் வந்துச்சு. அமெரிக்காவுல ஒன் ஆஃப் த பெஸ்ட் யூனிவர்சிடில, எம்.பி.ஏ. படிக்க சீட் கெடைச்சிருக்கு. இப்ப சொல்லுங்க. படிப்பு சாதி சார்ந்த விஷயமா? அந்த அனாதைப் பையன் இடத்துல யாரு இருந்தாலும் அதைத்தான் செஞ்சிருப்பேன்.''

''அப்ப இந்த இட ஒதுக்கீடு வேணாங்

கிறயா? அப்படி இல்லாம இருந்திருந்தா, அந்தக் காலத்துல அண்ணா யூனிவர்சிட்டில சேர்ந்து நீ படிச்சிருக்க முடியுமா?''

''இல்லைன்னு சொல்லலையே. ஐயா, நீங்க எலிமெண்ட்ரி ஸ்கூல்ல ப்யூன், கையெழுத்துப் போடத் தெரியும்; அவ்வளவுதான் படிப்பு. ஆனா இன்னைக்கு எம் புள்ளைக்கு சாதி பேரு சொல்லி சீட் வாங்குறது சரியா? கையும் காலும் நல்லா இருந்து, ஒழைக்கத் தெம்பும் இருக்கிறவன் பிச்சை எடுத்துச் சாப்பிடுவதுபோல இருக்கும். இதை நான் சொல்லலை. உங்க பேத்தி தீபு ஒருமுறை, இட ஒதுக்கீடு பேச்சு வந்தப்போ சொன்னது. இட ஒதுக்கீடு ரொம்ப அவசியம். ஆனா, நம்ம மாதிரி நல்லா முன்னேறியவங்க. இன்னும் ஒதுக்கீடு கேட்பது சரியா?''

அவர் பதில் சொல்லவில்லை.

''ஐயா...'' என்று மீண்டும் துவங்கும் போது அவர் குரல் தழதழத்தது.'' ரெண்டு நாளு முன்னாடி இவங்க ரெண்டு பேரும் ஆடிட்டர் வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டு இருந்தாங்க. எதுக்குன்னு அன்னைக்குத் தெரியலை. இதே மாதிரிதானே முப்பது வருஷத்துக்கு முன்னாடி, பி.யு.சி ரிசல்ட் வந்ததும் நீங்களும் என்னை இழுத்துக்கிட்டு வீடு வீடா போனீங்க. எல்லா அவமானங்களையும் தாங்கிக்கிட்டு அம்மா கழுத்துல இருந்த தாலியைக்கூட வித்து என்னை பி.ஈ. சேர்த்தீங்க. பி.ஈ.க்கு அப்புறம், மேல் படிப்புக்கு அமெரிக்கா போயி, நல்ல வேலைல சேர்ந்து பணம், அந்தஸ்துன்னு வாழ்க்கையில இந்தளவு உயர்ந்ததுக்கு உங்க முயற்சிதானுங்க காரணம். வயசான காலத்துல உங்ககூட இருக்கணும்னு இருபத்தி அஞ்சு வருஷ அமெரிக்கா வாழ்க்கையை விட்டுட்டு வந்தாச்சு. இன்னைக்கு இவங்க ரெண்டு பேரையும் பார்த்ததும், ஏதோ முன் ஜென்ம ஞாபகம் மாதிரி பழசு எல்லாம் நினைவுக்கு வந்து மனசு என்னமோ மாதிரி ஆயிடுச்சு.'' குரல் தழும்பியது.

பிரமை பிடித்தது போலிருந்த ஐயன், ''வள்ளி, ரெண்டாயிரம் ரூபா பணத்தை எடுத்து அந்தப் பையன் கையில குடு. காலேஜுக்குப் போகும்போது, நல்ல பேண்ட் சட்டை வாங்கிக்கட்டும்'' என்றார். ''அதை நீங்களே எடுத்து தரக்கூடாதா?'' எழுந்த வள்ளியம்மை குரலில் பெருமிதம் ஒலித்தது... ○

நான் நீ தீபாவளி

நீ மத்தாப்பாய்ச்
சிரிக்க
நான் பூப் பூவாய்ச்
சிதற
நம்மைக்
கொண்டாடிக் கொண்டிருக்கிறது
தீபாவளி!



- அப்பாவிடமும்
அம்மாவிடமும்
பள்ளியில் பெற்ற 'வெரிகுட்'ஐ
பலமுறை சொல்லி
ஏதோவொன்று குறைந்தவளாய்
தன் பொம்மைகளிடம்
சொல்ல ஆரம்பித்தாள்
அச்சிறுமி.
தலையாட்டிக் கொண்டிருந்தன
பொம்மைகள்
அப்பாவாய், அம்மாவாய்.



குழந்தைகளின்



- மழையில் நனைந்து
விளையாடிக் கொண்டிருந்தார்கள்
அந்தச் சிறுவனும்
அவனது நாயும்.
அப்பாவிடம் அடியும்
அம்மாவிடம் திட்டும்
வாங்கிக்கொண்டு
தலைதுவட்டினான் சிறுவன்
அம்மா கொடுத்த
துவாலையால்.
''கவலைப்படாத அப்பா உன்னை
அடிக்க மாட்டார்'' என்றான்
தன் நாயிடம்.
உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு
அவனையே பார்த்தது
அச்சிறு நாய்!



உலகம்

- கூரையிலிருந்து
வழிந்துகொண்டிருக்கும்
மழைத்துளிகளைச் சேகரித்து
தங்கமீன்கள் இரண்டு
நீந்திக்கொண்டிருந்த
கண்ணாடித் தொட்டிக்குள்
விட்டுக்கொண்டிருந்தாள்
அச்சிறுமி.
மழை நிற்கும் வரை
இதைச் செய்தவள்
மழை நின்றபின்
கைகள் இரண்டையும் தேய்த்து
கன்னத்தில் வைத்துக்கொண்டு
கேட்டாள்
'ஸ்ஸ்ஸ் ரொம்ப
குளிருதில்ல?'
வாலாட்டியபடி ஆமோதித்தன
மீன்கள்.



"தீபாவளிக்கு அசரப்பட்டு 'ஸ்வீட்' ஏதும் செஞ்சிடாதே!"

"எதுக்குங்க?"

"தீபாவளிக்கு - வீட்டுக்கு ஒரு 'ஸ்வீட்' பாக்ஸ்ன்னோ, ரேஷன்ல 'மலிவு விலை ஸ்வீட்'னோ அரசாங்கத்திலே இருந்து அறிவிப்பு வந்தாலும் வரும்டி."

- கலை நண்பன்

கவர்மெண்ட் ஸ்வீட்ஸ்

"டாக்டர் இதுக்கு முன்பு ஜவுளிக்கடை வெச்சிருந்திருப்பார் போலிருக்கு."

"என்னாச்சு?"

"தீபாவளிச் சிறப்புத் தள்ளுபடி பத்து சதவிகிதம்னு விளம்பரம் பண்ணியிருக்கிறாரே!"

- எம். அசோக்ராஜா



"உங்க மாப்பிள்ளை கோபித்துக்கொண்டு போகிறார். கூப்பிடுங்க!"

"போகட்டும் விடு. ஐந்து வருடத்துக்கு முன்னாடி தீபாவளிக்கு வந்தவர் இப்பத்தானே போறார். போயிட்டுப் போறார்!"

- அ.ராதா



அருள்வாக்கு



காவேரி ஸ்நானம்

தீபாவளிக்கு கங்கையோடு காவேரி ஸம்பந்தமும் இருக்கிறது. அன்றைக்கு ஒருநாள் மட்டும் எல்லா வெந்நீரிலும் அருணோதயத்திலிருந்து ஸூர்யோதயம் வரை ஒரு முஹூர்த்தம் - அதாவது இரண்டு நாழிகை - கங்கை இருக்கிறாளென்றால், துலா மாஸம் முழுக்கவே அருணோதயத்தில் ஆரம்பித்து ப்ராதக்காலம் முடிகிறவரை, அதாவது ஸூர்யன் உதித்து ஆறு நாழிகைவரை காவேரியில் கங்கை உள்பட ஸகல தீர்த்தங்களும் இருக்கின்றன.

அதனால் தீபாவளியன்று முதலில் நாம் அருணோதயத்தில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு கங்கா ஸ்மரணத்தோடு வெந்நீர் ஸ்நானம் பண்ண வேண்டும். அப்புறம் ஸூர்யோதயமான பின், ஆனால் ஆறு நாழிகைக்குள், பச்சை ஜலத்தில் இன்னொரு ஸ்நானம் செய்ய வேண்டும். இந்த ஸ்நானத்தின்போது துலா காவேரியை ஸ்மரித்துக்கொண்டு பண்ண வேண்டும். முதல் ஸ்நானத்தால் நரகாஸுரன், பூமாதேவி, ஸத்யபாமா, கிருஷ்ணர் எல்லார் நினைவும் வரும். இரண்டாம் ஸ்நானத்தில் பரமேச்வரன் நினைவும் வந்துவிடும்.

இந்தப் புண்ய ஸ்மரணம்தான் பெரிய ஸ்நானம். உள் அழுக்கையெல்லாம் அகற்றி ஜீவனைக் குளிப்பாட்டிப் பரிசுத்தி பண்ணுவது அதுதான்.

- ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

சினிமாவில் இருந்து தொலைக்காட்சி மெகா சீரியலுக்கு என்ட்ரி ஆகும் நடிகைகள் லிஸ்ட்டில் சங்கவியும் சேர்ந்துள்ளார். 'கோகுலத்தில் சீதை' தொடரின் படப்பிடிப்பின் போது சங்கவியைச் சந்தித்தோம்...

சங்கவி என்றாலே கிளாமர்தானே? எப்படி 'கோகுலத்தில் சீதை'யாக நடிக்கிறீர்கள்?

''இல்லை; இதை மறுக்கிறேன். நான் கிளாமராக மட்டுமே நடித்ததில்லை. பத்தாண்டுகளுக்கு முன்பே 'பொற் காலம்' படத்தில் கேரக்டர் ரோல் செய்திருக்கிறேன். இந்த நம்பிக்கை யில்தான் 'கோகுலத்தில் சீதை'யின் இயக்குநர் சி.ஜே.பாஸ்கர் எனக்கு வாய்ப்பை அளித்திருக்கிறார். கதையில் என் கேரக்டர் நேம் சீதா. மற்றபடி செட்டில் நான்தான் தேவதை.''

இது உங்களுக்கு ரீ-என்ட்ரியா?

''நான் சினிமாவை விட்டுப் போய், மீண்டும் நடிக்க வந்தால்தானே ரீ-என்ட்ரி என்று சொல்ல முடியும்? இடைப்பட்ட காலத்தில் தெலுங்கிலும், கன்னடத்தி லும் பிஸியாக இருந்தேன். பிதாமகனின் கன்னட ரீமேக்கான 'அனாதரு'வில், சங்கீதா செய்திருந்த கேரக்டரில் நான் நடித்தேன். கன்னடத்தில் பெரிய வரவேற்பைப் பெற்ற படம் இது.

பதினைந்து வருட சினிமாவில் நீங்கள் சாதித்தது...?

''நான் பதினான்கு வயதிலேயே நடிக்க வந்துவிட்டேன். இந்தப் பதி னைந்து ஆண்டுகளில் நடிப்பு அனுபவத் தின் மூலம் சினிமா நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன். திரையுலகம் பள்ளிக்கூடம் போல. இன்னும் கற்றுக் கொண்டேயிருக்கிறேன்.''

நடிகைகளுக்கு சமூக அங்கீகாரம் கிடைத்துள்ளதா?

''நிச்சயமாகக் கிடைத்துள்ளது. தமிழ் நாட்டின் குக்கிராமத்துக்குச் சென்றால் கூட, அங்குள்ள மக்கள் அவர்களின் வீட்டுப் பெண் போல நடத்துகிறார்கள். வேறு எந்தத் துறையில் இருந்தாலும், இந்த அங்கீகாரம் கிடைத்திருக்காது. இது பெருமைப்பட வேண்டிய விஷயம் தானே.''

குஷ்பூ, சுஹாசினி போல் அறிவு பூர்வமான நிகழ்ச்சிகள் நடத்தும் எண்ணம் உண்டா?

''இதுவரை இந்த ஐடியாக்களுடன் என்னை யாரும் அணுகவில்லை. அப்படி அணுகினால் யோசிக்கலாம். ஆங்கில சேனல்களில் வருவது போல தமிழில் காமெடி சீரியல் வந்தால், அதில் நடிக்க ரொம்ப ஆசை.''

காவிரிப் பிரச்னை, இலங்கைத் தமிழர் பிரச்னை போன்றவற்றில் திரையுலகினர் நடத்தும் போராட்டம்

கோகுலத்து

சரவெடி சங்கவி

பற்றி...

''ரசிகர்கள், திரைக் கலைஞர்களை அவர்களில் ஒருவராகப் பார்க்கும்போது ரசிகர்களின் துன்பத்தைத் துடைக்க வேண்டியதும் எங்களைப் போன்ற கலைஞர்களின் கடமைதானே?''

அரசியல்?

அரசியலா..(!?), ஸாரி, எனக்கு ஆர்வ மில்லை.

- ராகவ்குமார்



தேவதை!

நேற்றைய தினம் ஸ்ரீ பொதுஜன ஸ்வாமி அவர்கள் நம்மிடம் வந்து கொரியா யுத்த நிறுத்தம், காஷ்மீர் மத்தியஸ்தம், ஈரான் புகைச்சல் முதலியவைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது இடை நடுவிலே நாம், ''உலக விஷயங்கள் இருக்கட்டும்; வரப்போகும் பொதுத் தேர்தலில் உமது வோட்டை யாருக்குக் கொடுப்பதாக உத்தேசம்?'' என்று கேட்டோம்.

''சந்தேகம் என்ன? எமது வோட்டு நமது நேரு மகாராஜாவுக்குத்தான்!'' என்றார் ஸ்ரீ பொதுஜன ஸ்வாமி.

''நேருஜியின் பெயரோடு மகாராஜா என்ற பட்டத்தைச் சேர்த்துச் சொல்கிறீரே? இது நேருஜியின் காதில் விழுந்தால் உமது சிண்டைப் பிடித்து உலுக்கி விடுவாரே?'' என்றோம்.

''சிண்டு இருந்தால்தானே அதைப் பிடித்து உலுக்குவார்? நிதி மந்திரி, ரயில் மந்திரி, தபால் மந்திரி எல்லாருமாகச் சேர்ந்துதான் என் தலையை மழுங்க மொட்டை அடித்துவிட்டார்களே?'' என்று சொல்லி ஸ்ரீ பொதுஜனம் தமது காந்திக் குல்லாவை எடுத்துவிட்டு மொட்டைத் தலையைச் சுட்டிக்காட்டினார்.

''அப்படியிருந்துமா நீர் நேருஜிக்கே உமது வோட்டைக் கொடுப்பதாகச் சொல்கிறீர்?'' என்றோம்.

''அதனால் என்ன? தமயந்தியின் சேலையில் பாதியைக் கிழித்து எடுத்துக்கொண்டு, அவளைக் காட்டிலே பரிதவிக்க விட்டுவிட்டு நள மகாராஜன் ஓடிவிட்டான்! அப்படியும் தமயந்தி அவளுடைய வோட்டை நள மகாராஜனுக்கே கொடுக்கவில்லையா?''



''ரொம்பச் சரி! அந்த உதாரணத்தை நெடுகிலும் நீட்டிவிட வேண்டாம். நளனைப் போல் நேரு ஒரு நாளும் ராஜ்யத்தைச் சூதாட்டத்தில் பணயம் வைத்து இழந்துவிட மாட்டார். தெரியுமல்லவா?''

''மாட்டவே மாட்டார்! காஷ்மீரை எப்படிக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார், பாருங்கள்! கொரியா யுத்த சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ள முடியாது என்று எவ்வளவு கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்? அப்படிப்பட்டவருக்கு என் வோட்டைக் கொடாமல் வேறு யாருக்குக் கொடுப்பது?''

''இந்திரன்-சந்திரன் வந்து கேட்டாலும் கொடுக்கமாட்டீராக்கும்!''

''இந்திரன் - சந்திரன் மட்டும் என்ன? பிரம்மா - விஷ்ணு - சிவன் ஆகிய மும்மூர்த்திகளே வந்து கேட்டாலும் கொடுக்க முடியாது...!'' என்று ஸ்ரீ பொதுஜனம் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, வான விமானத்தில் யார் வந்து இறங்கினார்கள் என்று நினைக்கிறீர்கள்? சாக்ஷாத் பிரம்மா - விஷ்ணு - சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் வந்து இறங்கினார்கள்!

மூன்று பேரும் ஒரே குரலாக ''ஐயா, பொதுஜன ஸ்வாமி! உம்முடைய வோட்டை எங்களில் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும்! யாருக்குக் கொடுத்தாலும் சரி!'' என்றார்கள்.

''மும்மூர்த்திகளே! இந்தக் காரியத்தில் உங்களுடைய ஒற்றுமையை ரொம்பவும் மெச்சினேன். ஆனால் என்னுடைய வோட்டை நேருஜிக்கே கொடுப்பதென்று தீர்மானித்திருப்பதால் உங்களில் யாருக்கும் கொடுக்க இயலாது!'' என்றார் பொது ஜனம்.

''நேருவுக்கா கொடுக்கப் போகிறீர்? அவருடைய நாலு வருஷ நிர்வாகத்தில் அப்படி என்னத்தைச் சாதித்து விட்டார்? அவரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே, தமது ஆட்சியில் குற்றங்குறைகள் ரொம்ப உண்டு என்று! சில நாளைக்கு முன்பு வந்த அவருடைய அறிக்கையை நீர் படிக்கவில்லையா?''

''பிரம்ம தேவரே! உம்முடைய காரியம் மட்டும் எப்படி? இந்தப் பூலோகத்தை நீர் படைத்தீரே, இதில் குற்றங்குறைகள் இல்லையா?'' என்று பொதுஜனம் கேட்டதும், பிரம்மா திணறிப் போய்விட்டார்.

''உம்முடைய தந்தை மகாவிஷ்ணு மட்டும் தமது காத்தல் தொழிலைச் சரியாகச் செய்கிறாரா? செய்கிறதென்றால் மரத்தை நடுங்கள்; வனத்தை வளருங்கள் என்று கனம் முன்ஷி எங்கள் பிராணனை ஏன் வாங்குகிறார்? இன்னும் பரமசிவன் விஷயந்தான் என்ன? அவர் சம்ஹாரத் தொழிலைச் சரிவரச் செய்கிறாரா? செய்திருந்தால் கொரியாவில் இன்னும் சில கொரியர்கள் உயிரோடு மிச்சம் இருப்பது

உங்கள் வோட்டு யாருக்கு?



''கல்யாணமான புதுசுல எனக்கும் என் மனைவிக்கும் வருஷத்துக்கு ஒரே ஒரு சண்டைதான் வரும்...!''

''இப்ப...?''

''ஒரே சண்டைதான்...!''

- லட்சுமி

எப்படி? அணுகுண்டைப் போட்டுக் கொரியர்களைக் கூண்டோடு கைலாசம் கொண்டு போயிருந்தால் அல்லவா பரமசிவனுடைய வேலை சரிவர நடந்தது என்று சொல்லலாம்? மும்மூர்த்திகளாகிய உங்களுடைய நெடுநாளைய காரியங்களிலேயே இவ்வளவு குறைகள் இருக்கும் போது, நேருஜியின் நாலு வருஷ நிர்வாகத்தில் குறைகள் இருப்பதில் வியப்பு என்ன? ஆனால், உங்களுக்கும் நேருஜிக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அவர் தம் நிர்வாகத்தில் நன்மை நடந்திருப்பதாகவும் சொல்கிறார்; குற்றங் குறைகள் இருப்பதாகவும் ஒப்புக் கொள்கிறார். நீங்களோ குறைகளை ஒப்புக் கொள்ள மாட்டீர்கள். மக்கள் அனுபவிக்கும் துன்பத்துக்கு விதியின் பேரில் பாரத்தைப் போட்டுப் பொறுப்பைக் கழிக்கப் பார்ப்பீர்கள். மேலும் பேசினால், பரமசிவன் நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்துவிடுவேன் என்பார். ஆகையால், எது எப்படியிருந்தாலும் நேருஜிக்கே என் வோட்டு! வேறுஜிக்கு கிடையாது!'' என்று ஸ்ரீ பொதுஜனம் கண்டிப்பாகச் சொல்லிவிடவே, மும்மூர்த்திகள் அவசரமாகத் தங்கள் டிக்கட் இல்லாப் பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.

அவர்கள் சென்றபிறகு நாம் பொது ஜனத்தைப் பார்த்து, ''உம்மிடம் மும்மூர்த்திகளே இந்தப் பாடுபட்டுப் போனார்களே? கிருபளானி - பிரகாசம் முதலியோர் உம்மிடம் வந்து வோட்டுக் கேட்டுப் பிழைப்பது ஏது?'' என்ற சொன்னோம்.

''அதைப் பற்றிக் கவலை வேண்டாம்! அவர்களுக்கு அபாயம் ஒன்றும் நேராது. பேஷாக வந்து வோட்டுக் கேட்கட்டும். கேட்பதற்குத் தடை ஒன்றுமில்லை. பூரண உரிமை உண்டு. ஆனால் எமது வோட்டு நேருவுக்குத்தான்!'' என்றார் பொதுஜனம்.

''சுவாமிகளே! நேருவின் அறிக்கையை நீர் நிஜமாகவே படித்தீரா?''

''படிக்காமல் - என்ன? படித்தேன். சுதந்திரம் வந்ததும் வராததுமாய் நேரு சர்க்கார் எவ்வளவு பிரம்மாண்டமான பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டி வந்தது என்பதைப் படித்தபோது, எனக்கு மூச்சே நின்று போய்விட்டது. எப்படியோ சமாளித்துக் கரையேற்றி விட்டார்கள். ஆகையால், அடுத்த ஐந்து வருஷத்தில் தேச க்ஷேமத்திற்குரிய முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தலாம் அல்லவா?''

''செலுத்தலாம். நேருஜி அப்படிக் கவனம் செலுத்துவார் என்றும் எதிர்பார்க்கலாம். ஆனால், நேருஜியின் அறிக்கையில் கடைசிப் பகுதியைப் படித்தீரல்லவா?''

''யோக்யர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே, அதை நன்றாக நாலு தடவை படித்தேன்.''

''அந்த மாதிரி நடந்தால் விசேஷந் தான். நடக்கும் என்று தோன்றுகிறதா?''

''அது விஷயத்திலேதான் மும்மூர்த்திகளைப் போல் நாமும் தலைவிதியின் பேரில் பாரத்தைப் போட

வேண்டியதாயிருக்கிறது. எந்தத் தொகுதிக்கு எந்த அபேட்சகர் வந்து லபிக்கிறாரோ, நமக்கு என்ன தெரியும்?''

''அதுதான் நாமும் யோசித்தோம். 'நேருஜிக்கே நமது வோட்டு' என்று சொல்லிக் கொண்டிருக்கிறீரே? நேருஜி ஒரு தொகுதியில்தானே அபேட்சகராக நிற்க முடியம்? பாக்கி மூவாயிரத்துச் சொச்சம் தொகுதிகளிலும் மற்றவர்கள்தானே நின்றாக வேண்டும்?''

''நேருஜி ஒப்புக்கொண்ட காங்கிரஸ் அபேட்சகர் யாராயிருந்தாலும், அந்த அபேட்சகருக்குக் கொடுக்கும் வோட்டு நேருஜிக்குக் கொடுக்கும் வோட்டுத்தான். அந்த அபேட்சகரிடம் நேருஜி குறிப்பிடும் குணாதிசயங்களும் தகுதியும் இருந்துவிட்டால் நம்முடைய அதிர்ஷ்டம். இல்லாவிட்டால் நம் தலைவிதி...!

''பொதுஜன ஸ்வாமி! அப்படித் தலைவிதியின் பேரில் அடியோடு பாரத்தைப் போட்டுவிட வேண்டாம். அது ஜனநாயகக் கொள்கைக்கே விரோதம்.''

''இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் ஜனங்கள் கட்சி அபேட்சகர்களுக்கே வோட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் கட்சி அபேட்சகர்கள் நியமனம் ஆவதற்கு முன்பே, அந்தத் தொகுதி வோட்டர்கள் தங்களுக்குப் பிடித்த கட்சி அபேட்சகர்கள் யார் என்பதை மேலேயுள்ள தலைவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்து விடுவது வழக்கம். ஒரு தொகுதியில் முன் தடவை பிரதிநிதியாயிருந்தவர் தம் கடமையைச் சரிவர செய்திராவிட்டால், அவர் பேரில் ஏதேனும் புகார் இருந்தால், மறு தடவை அவரைக் கட்சித் தலைவர்கள் அபேட்சகராக நியமிக்க முடியாது. நமது நாட்டிலும் இத்தகைய ஜனநாயக முறை அமுலுக்கு வர வேண்டும். அந்தந்தத் தொகுதியில் காங்கிரஸ் அபிமானமுள்ள வோட்டர்கள் அபேட்சகர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை வற்புறுத்தித் தெரிவிக்க வேண்டும். சோம்பேறி ராமர்களையும், ஊழல் நாதர்களையும், லஞ்ச கேசரிகளையும் காங்கிரஸின் பெயரால் அபேட்சகர்களாக நியமிக்க அனுமதிக்கக் கூடாது. இதற்குரிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.''

''நாம் என்ன முயற்சி செய்து என்ன பிரயோஜனம்? நேருஜியின் காதில் போய் எட்ட வேண்டாமா?''

''அவர் காதில் எட்டும் அளவுக்குப் பலமாகச் சத்தம் போட வேண்டியதுதான்.''

''அப்படி மூவாயிரத்துச் சொச்சம் தொகுதிகளிலும் சேர்ந்து சத்தம் போட்டால் நேருஜியின் காது செவிடுபட்டுப் போய்விடும். வேண்டாம், வேண்டாம். அதைக் காட்டிலும் தலைவிதியின் பேரிலும் மாகாணத் தேர்தல் கமிட்டியின் பேரிலும் பாரத்தைப் போட்டுவிடுவதே நல்லது. எது எப்படியானாலும், நேருஜிக்கே நமது வோட்டு! நம்பினார் கெடுவதில்லை, நாலு மறை தீர்ப்பு!'' என்று சொல்லிவிட்டுப் பொது ஜனம் போய்ச் சேர்ந்தார்.

அவருடைய கொள்கை சரியில்லையென்று யார் சொல்ல முடியும்?

- கல்கி, 15.7.1951



''நர்ஸ்! அந்த எட்டாம் நம்பர் பேஷண்ட்டோட பல்ஸ் செக் பண்ணியாச்சா?''

''பண்ணியாச்சு டாக்டர்...பல்ஸ் நார்மலா இருக்கு... பர்ஸ்தான் வீக்கா இருக்க...!''

- வரத. சண்முக சுந்தர வடிவேலு

சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி. வர்ண தேவதை காதலோடு வரைந்துவிட்டுப் போன வானவில் பிரதேசம். திட்டுத்திட்டாய்ப் புல்வெளிகள், ஆங்காங்கே உறைந்துபோய் நிற்கும் மனிதர்களென சிலைவார்ப்புகள், எழுந்து நிற்கும் சுவர்களில் அப்பிக் கிடக்கும் ஓவியங்களென... இதயத்தை இனிப்பாக்கும் ஏற்பாடுகள் நிறைய... ஓவிய மாணவர்கள் ஓவியம் தவிர்த்து கேஷுவலாகப் பேசினர்...



''என்ன... தீபாவளி கொண்டாட்டம் எல்லாம் எப்படி இருக்கு?''

''சூப்பரோ சூப்பர்! முதல் வேலையா நம்ம சூப்பர் ஸ்டாருக்கே இமயமலை நோக்கி ஒரு ராக்கெட் அனுப்பிடணும்னு முடிவு பண்ணியிருக்கோம்'' என்று ஆரம்பித்தார் சுஜீத்.


''அதென்ன இமயமலை, அவர் எந்திரன் ஷூட்டிங்குக்காக வெளிநாட்டுக்குப்

கல்லூரிச் சாலை

ட்டணி வெடி!

போயிருப்பார்...'' என்றார் ஜெரால்ட்.

''கடயவே கடயாது நிச்சயம் இமய மலைலதான் இருப்பார்'' என்ற சுஜீத்தைத் தொடர்ந்து, ''கடயவே இல்லேடா. கிடையவே கிடையாது அப்படிச் சொல்லணும்''



என்ற கார்த்திக்,

''யாரு வேணா எந்த ஊர்ல போய் வேணா உட்காரட்டும். நம்ம பாடுதான் பேஜாரா இருக்கு. தீபாவளிக்குக் கூடச் சொந்த ஊருக்குப் போக முடியலியே...

ஒரு பெரிய ட்ராயிங் போர்டுல விதவிதமா பட்டாசுகளை வரைஞ்சு இது வெடிக்காதுன்னு எழுதிட்டு வேடிக்கை பார்க்க வேண்டியது தான்'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''ஆடித் தள்ளுபடி, மார்கழி மட்டை யடின்னு ஏதேதோ போடறாங்களே, நம்மள மாதிரி ஊர் விட்டு ஊர் வந்து படிக்கும் காலேஜ் பசங்களுக்கு, இலவசமா டீ, காஃபி, டிஃபன், தீபாவளி ஸ்வீட்ஸ் எல்லாம் வழங்கப் படும்னு ஒரு



போர்டை மாட்டி விட்டா காலேஜ் பசங்க எல் லாம் அவங்கள மனசார வாழ்த்திட் டுப் போவோம்ல... அத விட்டுப் புட்டு ஏதேதோ விளம்பரங்கள் லாம் பண்றாங்களே!'' என்று கார்த்திக்கை ஆதரித்தார் ரகுவீரன்.

''இந்த வருஷ தீபாவளிக் குன்னே எங்க காலேஜ்ல ஏகப் பட்ட பட்டாசுகளை புதுசா ரிலீஸ் பண்ணிருக்கோம். அந்தப் பட்டாசுகளோட பட்டியல் இதோ... சரவெடி நம்ம டி.ஆரு. விஷால் சவுண்டு வெடி; ஏன்னா சும்மா சவுண்டுதான் விடுவார். பரத் சேவல் வெடி. அஜீத் டைம்பாம். அது வெடிக்க நேரமானாலும் நல்லா ஜம்முன்னு வெடிக் கும். சீனி வெடி சாந்தனு; அவர்தான சக்கர கட்டி. எஸ்.ஜே. சூர்யா ஓலைவெடி. வாரணம் ஆயிரம்னு பாட வர்றாரே சூர்யா, அவர் நாட்டுப்பற்று வெடி. ஏன்னா அவரோட அப்பா சிவகுமார், இந்த காலேஜ்லதான் படிச்சார். அதனால அவருக்கும் அவரோட வாரிசுக்கும் இந்த காலேஜ் மேல நாட்டுப்பற்று மாதிரி ஒரு ஃபீலிங்'' என ரொம்பவே ஃபீல் பண்ணி பட்டாசு பட்டியலைக் கொளுத்தி முடித்தார் ராஜீவ் பிரகாஷ்.


''எப்பவும் அதிக அளவு வண் ணங்களைப் பயன்படுத்தறவங் களாச்சே. வண்ணமயமான ஜோக் ஒண்ணு சொல்றோம். ஒரு சர்தார்ஜி தீபாவளி தள்ளுபடில ஒரு கலர் டி.வி. வாங்கலாம்னு நெனைச்சு டி.வி. கடைக்குப் போறார். 'சார் இங்க கலர் டி.வி. கிடைக்குமா?'ன்னு கடைக்காரரைப் பார்த்துக் கேட்க, 'ஓ தாராளமா... உங்களுக்கு எந்த பிராண்ட் வேணும்?'னு கடைக்காரர் கேட்க, 'எனக் குப் பச்சை கலர் டி.வி. கொடுங்க'ன்னு கேட்டாராம் சர்தார்ஜி. இது எப்படி இருக்கு?''

''தௌசன்வாலா, வெங்காய வெடி, சீனி வெடி, அணுகுண்டுன்னு எல்லா வெடிகளையும் ஒரே திரியில் இணைச்சு வெடிக்க வைப்போம். அதுக்குப் பேர்தான் கூட்டணி வெடி'' என்றவர்கள் திரியைப் பற்றவைக்கும்முன் கிளம்பி விட்டோம்.

- நளினி சம்பத்குமார்

படங்கள் : **குமார்**





"தலைவர் பந்தா தாங்கல."

"ஏன்?"

"தலைவர் தீபாவளி ராக்கெட் விடறத கட்சிக்காரர்கள் கூடி நின்னு கை தட்டி விழாவா கொண்டாடுறாங்க பாரு!"

- தா.ஆறுமுகம்

ராக்கெட் திருவிழா

"இவ்வளவு பெரிய பர்ஸை மட்டும் வாங்கிட்டு கடன் கேட்கறியே... வெட்கமா இல்ல?"

"அட! அதுல வைக்கத் தாம்பா. உன்கிட்ட கடன் கேட்கறேன்!"

- அம்பை தேவா





"என்னைப் புகழ்ந்து பாடிய புலவர் தற்போது சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்காராமே...?"

"பின்னே... பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காதுன்னு சும்மாவா சொன்னாங்க மன்னா...!"

- பூ.மகுடபதி

கதைசொல்லி

- பாரதி பாலன் -

தொட்டியநாயக்கர் கதை சொல்ல ஆரம்பித்துவிட்டால் போதும்! இந்த உலகமே மறந்துவிடும். அவரும் தன்னை மறந்து விடுவார். அப்படியே அந்தக் கதையிலே கரைந்து விடுவார். இதற்காகத் தான் பிறப்பெடுத்தாற்போல் கதை சொல்வார். அவர் கதை சொல்கிற அழகே தனி. அப்படியே அவர் வாய் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். சோறுதண்ணி இல்லாமல் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். வாயில் வெல்லக்கட்டி ஊறினாப்பிலே இருக்கும். அட என்ன அற்புதம்!

அந்த முகத்தில்தான் எத்தனை அபிநயம்! இந்த அப்புராணி முகத்தை வைத்துக் கொண்டா, அதில் இத்தனை வித்தை காட்டுகிறார்? அந்த முகபாவங்களையும் குரலில் ஏற்படும் மாய வினோதங்களையும் அப்படியே நெஞ்சில் நிறைத்துக் கொள்ளும் வாண்டுகள், வாய் பிளந்து உட்கார்ந்துவிடும்! சிரிப்புக்கும் குறைவிருக்காது. பயத்துக்கும் திகிலுக்கும் கூட குறைவிருக்காது. பயந்து ஒன்றோடு ஒன்று இறுகிக்கொண்டு கேட்கும்படியாகக் கதை சொல்வார்.

பள்ளிக்கூடத்தைத் துறந்து, வீட்டுக்குக் கஞ்சி தண்ணிக்குப் போகாமல் கதை கேட்க உட்கார்ந்துவிடும் வாண்டுகளும் உண்டு. இதற்கெல்லாம் நேரம் காலம் தெரியாது. காலை, மாலை, இரவு என்று எந்தக் கணக்குமில்லை. பகவதியம்மன் கோயிலில் அவருக்கென்று அப்படி உட்கார்ந்து கொள்ள ஓர் இடம் உண்டு. சாய்மானத்துக்கும் காற்றுக்கும் தோதான இடம் அது. அவர் வந்து உட்காருவதுதான் தாமதம். கூட்டம் கூடிவிடும். குடியான தெருப்பசங்களும் குடும்பமார் தெருப்பசங்களும் கூட்டுச் சேர முடியாது. விளையாட முடியாது. ஆனால் தொட்டியநாயக்கரிடம் கதை கேட்க உட்காரலாம். அப்போதுதான் எல்லாம் மறந்து ஒண்ணுமண்ணாகக் கிடக்கும்.

அப்போதெல்லாம் செல்லாயிக்கு அது பிரமிப்பாக இருக்கும். கதை கேட்கும் சுவாரஸ்யத்தில், குடியான தெருப் பிள்ளைகளைத் தொட்டுப் பார்ப்பாள். ஆவல் மிகுதியில் தொட்டியநாயக்கர் தோளில் கை வைத்துப் பார்ப்பாள். இதையெல்லாம் அவளால் நம்பவே முடியாது. அந்தப் பகவதியம்மன் கோயில் ஊருக்குப் பொதுதான். என்றாலும் அப்படிச் சொந்தம் கொண்டாடிவிட முடியாது. குடும்பமார்கள் வாசலோடு சரி; இப்படி திண்ணைக்கெல்லாம் வந்துவிட முடியாது. இப்படிக் கதை கேட்கிற சாக்கில், அதுவும் இந்த இருட்டில் வந்து உட்கார்ந்து கொண்டால்தான் உண்டு. அவளுக்கு ஏனோ தொட்டியநாயக்கர் மீது அலாதிப்பிரியம். அவர் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் கோயில் பக்கம் வரவில்லை என்றால் எல்லோருக்கும் காய்ச்சல் கண்டுவிடும்.

"ஏ பெருசு... இங்கெல்லாம் வந்து

படுக்கக் கூடாது. மூட்டை முடிச்ச தூக்கிக் கிட்டுக் கௌம்பு...''


''எதுக்குடாப்பா?''

''எதுக்கு நொதுக்குனா? கிளம்புன்னா கிளம்பணும்...''

''என்னைய எங்கடாப்பா போவச் சொல்றவன்?''

''அங்கிட்டு எங்கிட்டாவது போ. இப்படி கோயில்ல எல்லாம் வந்து படுக்கப்படாது.''

''இத்தனை நாளா இங்கதான்டா நொடக்கிக் கெடந்துச்சு..''



''கவர்மெண்டிலிருந்து டீ.வி. பெட்டி வருது. நாலு மனுசமக்க வந்து பொளங்கணும்.''

''நானும் மனுசந்தாண்டா...''

''போன்னா போயிடணும்...''

''நாம் பாட்டுக்கு சூசுவான்னு நொடக்கிக் கெடக்குறவன். ஏன்டா வம்புக்கு இழுக்கிற..?''

''பஞ்சாயத்து போர்டு டீ.வி. யைக் கொண்டாந்து வெக்கணும்னா...''

''அதுக்கு எடமாடா இல்லெ?''

''இனிப்பொறவு எவனாவது இங்க வந்து படுங்க. அப்புறம் பேசிக்கிறேன்.''



தொட்டியநாயக்கர் இடுப்பு வேட்டியை இறுக்கிக்கொண்டே நடந்தார். கைத் தடியை சற்று அகட்டி, அகட்டி, ஊன்றி தாறுமாறாகக் கால்களை எடுத்து வைத்தார். பதற்றத்தில் நிதானம் தப்பி, அவர் உடல் இலேசாக நடுங்கிற்று. அழுக்கேறி அழுக் கேறி பழுத்துப் போன வேட்டி இடுப்பில் நிலைகொள்ளாது சுருண்டு, புரண்டு கொண்டிருந்தது. அதைச் சரிசெய்வதிலும் கைத்தடியை இறுக்கிப் பிடித்துக் கொள் வதிலும்தான் அவர் கவனம்.

பெரிய உழைப்பாளி இல்லை அவர். ஆனால் உழைப்பால்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தோட்டங்களுக்குப் பாத்தி கட்டப் போவார். வீடுகளுக்குச் சுவர் எழுப்பப் போவார். கமலையில் நீர் இறைக் கப் போவார். திடீரென்று இப்படி எங்கும் போகாமல் பகவதியம்மன் கோயிலில் வந்து உட்கார்ந்து கொள்வார். மணிக்கணக் கில்லை. நாள் கணக்கு!

இதோ இப்போ இவரை வெரட்டு கிறானே, இவனோட அப்பன் அப்ப சின்னப் புள்ளயா இருக்கும்போது இவ ரிடம் கதை கேட்க வருபவன்தான். இவரும் பதினாறு பெத்து வளர்த்து ஆளாக்கிய மனுசன்தான். போதாக் குறைக்கு மூணு மாடுகள், ரெண்டு எருமைகள், ஏழு எட்டு கெடாக் குட்டிகள் என்று வாழ்ந்தவர்தான். பெத்ததுக அது, அதுக பாட்டுக்கு தலை யெழுத்து, தன் குடும்பம் பிள்ளை குட்டிகனு பொளப்பு தளப்புகளைத் தேடிச் சிதஞ்சு ஓடியிருச்சுக. இவர்தான் கட்டியவளைத் தூக்கிப் போட்டுட்டு இப்படி வந்து கிடக்கார்.

பகல் பொழுது என்றால் அவருக்குப் பாதகமில்லை. மெல்ல நடந்து போய் எவன் தோட்டத்துலயாவது உட்கார்ந்து கொள்வார். காக்கா விரட்டுறேன், காவக் காக்கிறேன்னு எதையாவது சொல்லி வயித்தை நிறைத்துக் கொண்டு, பொழுது மசங்கவும் பகவதியம்மன் கோயிலில் வந்து படுத்துக் கொள்வார்.

''ஏ பெருசு... ஒம்பாட்டுக்குப் போனீன்னா எப்படி?''

''ஏண்டா இப்படி என்னோட தொரட் டுப் பண்ணிக்கிட்டு நிக்கிற?''

''மூட்டை முடிச்சத் தூக்கிட்டுப் போன்னா...''

''அது ஒன்னைய என்ன செய்யுதாம்?''

''இப்ப தூக்குறியா? இல்லையா?''

''ஒஞ்சோலியப் பாத்துட்டுப் போடா...''

''ஒரு எத்து விட்டேன்னா அம்புட்டுத் தேன். அப்படியே பறந்திடும். டி.வி. வருது. நாலு மனுச மக்க வர்ற எடம்கிறேன்னா...''

''நாங்க என்னடா செய்யுறோம்.''

''வேற எங்கனா போய்ப் படுக்க வேண்டியதுதானே...''

''போ... போன்னா? எங்கடா போகட்டும்? மானாங்கன்னியாப் பேசுறவே...''

''ஒரே அசிங்கமாவுல்லெ இருக்கு.''

''நாங்களாடா அசிங்கம்?''

''பின்னே?''

''கோயிலைச் சுத்தி நாசம் பண்ணி வெச்சி நாறுது. அதைச் சுத்தம் செய்வானா எங்களை வந்து வெரட்டுறான்...''

''இம்புட்டுப் பேச்சா பேசுறா! இரும்னா நாளைக்கு வந்து வெச்சுக்கிறேன்...''

விருட்டென்று கிளம்பிவிட்டான் அவன். தொட்டியநாயக்கர் கண்களை இடுக்கிக் கொண்டே ஒருகணம் அவனைப் பார்த்தார். இப்படி விட்டா நாங்க எங்க போய்த்தான் படுக்கிறதாம்? ஊருக்குக் கிழக்கே ஓடையை ஒட்டி சாஸ்தா கோவில் இருக்கிறது. அது திறந்தவெளிப்பீடம். இந்தப் பகவதியம்மன் கோவில் மாதிரி வராது. இது ஊருக்கு மையமாக இருக்கிறது! இடமும் வலமுமாக இரண்டு திண்ணைகள் படுக்க வசதியாயிருக்கும்.

''என்னங்கய்யா இங்க வந்து படுத்துட்டீக?''

''யாரது?''

''என்னத் தெரியுதா?''

''யாரு?''

''தெரியுதான்னேன்.''

''வெளக்கு வெச்சுட்டா ஒரு வடியாத்தேன் தெரியும். சட்டுனு வரலெ...''

''செல்லாயி!''

''செல்லாயியா?''

''ம். சுப்பன் மவ. குடும்பமாரு தெரு.''

''கோட்டையூர்லெ கொடுத்தாகளே...''

''ஆமா. ஏ பேத்திக்கு பேறு காலம் பார்க்க வந்தேன். நம்ம அய்யா கணக்கா இருக்கேனு பார்த்தேன்.''

''புருசே நல்லா இருக்கானா?''

''அவுகதேன் போயிச் சேந்துட்டாகளே. நாந்தேன் புள்ளைகளெக் கட்டிக் கொடுத்து அதுகளுக்குப் பண்டுதம் பாத்துக்கிட்டுக் கெடக்கேன்.''

''சொகமா இருக்கேலெ?''

''ஒங்க புண்ணியத்துலெ இருக்கோம்யா. ஒங்க மக்களெல்லாம் எப்படி இருக்காக?''

''எல்லாம் அசலூர்ப் பக்கம் போயிட்டதுக. மேற்க ஒருத்தி இருக்கா. நான் தொந்தரவு பண்றதில்லெ.''

''இப்படி வந்து தெருவுலெ கெடக்கீகளே!''

''போக்கத்துப் போயித்தேன். பகவதியம்மா கோயில்லெதேன் கெடப்பேன். அங்க டி.வி. பெட்டி வெக்கப் போறானுங்களாம்.''

''அதுக்கு?''

''தொந்தரவா இருக்குங்கறான்.''

''அந்தக் காலத்துலெ நீங்க எம்புட்டுக்



கத சொல்லுவீக. கேட்டுக்கிட்டே இருக்கலாம்னு இருக்கும். டீவிலெ என்ன வாழுதாம்.''

''அம்புட்டுத்தேன். காலத்துக்கு தக்கத்தான்.''

''அதுக்காக?''

''போங்குறான்.''

''அவனச் சும்மாவா விட்டீக?''

''என்ன செய்யச் சொல்றே!''

''மக வூட்டுக்குக் கூட போயி, நல்லது பொல்லத தின்னு போட்டு இருக்கலாமுல்லெ.''

''எவே காணங்குறான்?''

''எங்க வூட்டுப் பக்கம் வர்றீகளா?''

''சொன்னதே போதும். நல்லா இரு தாயி!''

''குடும்பமாருங்க தெருவுக்கு வருவீகளா? சுத்த பத்தமாத்தேன் இருக்கோம். கட்டிலு இருக்கு. சொகமா படுப்பீக.''

அவர் கைகள் அவளை நோக்கிக் கூப்பியது. அவர் கண்கள் பளபள வென்று திரண்டு விட்டன.

''சும்மா வாங்க.''

''..........''

''வந்தீகன்னா ஒரு கதை கேக்கலாம்னு பாத்தேன்.''

அவர் கண்கள், அந்த அரை இருளில் அவள் முகத்தைத் தேடிற்று. அவர் உதடுகளும் புருவமும் லேசாகத் துடித்தன.

''வாங்கய்யா... வந்து ஒரு கத சொல்லுங்க...''

''சொல்லலாம்மா.''

''நெசமாத்தேன்யா கூப்பிடுறேன்.''

''சொல்றேம்மா.''

''அப்பச் சொல்றாப்புலெ கதகதயாச் சொல்லுங்க. சாகப் போற நாள்லெயாவது நிம்மதியாச் சாகலாம்.''

''அப்படி எதுக்குச் சொல்றே? வேற யாருமில்லையா?''

''பேரக்குட்டிக இருக்குக. தெரு முழுக்க வாண்டுங்க இருக்குக. மருமகக்காரிக இருக்குதுக. கத சொல்ல வேறென்ன குறைச்சல்?



''அங்க டி.வி.பொட்டி இல்ல போலிருக்கு. அப்படின்னா... வந்துட்டாப் போச்சு''

''அட அம்புட்டு புள்ளைங்க உண்டா? அங்க டிவி பொட்டி இல்ல போலிருக்கு. அப்படின்னா வந்துட்டாப் போச்சு.''

''பேச்சுக்குக் கூப்பிடுறதா நினைக்கப்படாது. ஒரு பிரியத்துலெதேன் கூப்பிடுறேன்.''

''அப்படினாச் சரித்தேன்... வா போவலாம்.''


தொட்டியநாயக்கர் விசுக்கென்று எழுந்தார். அவர் எழுந்த விசையில் உற்சாகம் தெரிந்தது. செல்லாயிக்கும் மனக் குதூகலம் கூடிற்று. ஒருகணம் நம்பாமல் பார்த்தாள். அவர் எழுந்த வேகமும் தன்னாட்டமான நடையும் நம்பும்படியாகவே இருந்தது.

அவர் நடந்தார். தெரு விளக்குகள் எல்லாம் செத்துக்கிடந்தன. பகவதியம்மன் கோயிலில் பஞ்சாயத்து போர்டு டி.வி. ஓடிக் கொண்டிருந்தது. வாண்டுகள் கூட்டம் ஒன்று அரவமின்றி மண்டியிட்டுக் கிடந்தது. தொட்டியநாயக்கரும் செல்லாயியும் அவர்களைக் கடந்து சென்றனர். டி.வி. தொடர் சுவாரஸியத்தில் தொட்டியநாயக்கரை ஒருவரும் கவனிக்க வில்லை. ●

வாழ்க்கை ஒரு மேஜிக்!

மாணவர்களுக்கான இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரலாறு, முக்தா சீனிவாசன், திருக்குடந்தைப் பதிப்பகம், 161/1, வி.எம்.தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.

பகத்சிங், போஸ், சாவர்க்கார், வாஞ்சிநாதன், வ.உ.சி. அம்பேத்கார் ஆகியோர் வாழ்வில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு. சுருக்கமாகவும், சுவையாகவும் அமைந்த நூல். படங்களே இன்றி பாடநூல் வடிவில் அமைந் திருப்பது, மாணவர்களுக்கான வரலாறு என நினைவூட்டு கிறது. பொருளடக்கம் இணைத்தால், விரைவான நோக் கிட்டுக்கு உதவியாக அமையும்.



பிரசாத் என்றொரு தாய், ராணி மைந்தன், கலைஞர் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, சென்னை - 600 017.

மனவளம் குன்றிய மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக் கான மறுவாழ்வு மையம், 'பாத்வே'. அதன் நிறுவனர் பிரசாத்தின் வாழ்க்கை வரலாறு இந்நூல். பாத்வே அமைப் பின் பல்வேறு செயல்பாடுகளையும், அதன் மூலம் மறு வாழ்வு பெற்றவர்களின் செய்திகளையும் கூறுகிறது. சமூகத்துக்கு நமது பங்களிப்பை மறுபரிசிலனை செய்யத் தூண்டும் நூல்.




மந்திரப்புன்னகை, எஸ்.சந்திரமௌலி, கிழக்கு பதிப்பகம், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 18.

மேஜிக் கலைஞர் லாலின் வாழ்க்கைக் குறிப்புகள், அவருடைய பார்வையிலேயே தொகுக்கப்பட்டுள்ள நூல். மேஜிக்கைத் தொழிலாக ஏற்க, தான் சந்தித்த போராட்டங் களை சுவாரஸ்யமாக விவரிக்கிற லால், திருப்பங்கள் நிறைந்த தன் வாழ்க்கையும் ஒரு மேஜிக்தான் என்கிறார்.



\- நேயமுகில்



''பிள்ளைங்க படிப்புக்கும் சரி, கல்யாணத்துக்கும் சரி... தனியார் கடனோ வங்கிக் கடனோ வாங்கத் தேவையில்லை. நீங்க வளர்க்கிற மரங்கள், உங்களைப் பொருளாதாரத்துல உயர்வடைய வைச்சுடும்!'' என்கிறார் மரம் தங்கசாமி.

புதுக்கோட்டை மாவட்டம் கொத்தமங்கலம் அருகே சேந்தன்குடியில் அமைந்துள்ளது செழிப்பான கற்பக சோலை.

''மத்த விவசாயி போல ஆரம்பத்துல நானும் நஞ்சையில நெல்லு, புஞ்சையில கடலை, துவரைன்னு சாகுபடி செஞ்சேன். உழுதவன் கணக்கு பார்க்கக்கூடாதுன்னு சொல்வாங்க. கணக்குப் பார்க்காமப் போய்த்தான், நான் கடனாளியானேன். கொஞ்சம் காட்டை வித்துக் கடனை அடைச்சேன். ரொம்ப சோர்ந்து போய்ட்டேன். அப்பதான் ரேடியோவுல பேராசிரியர் சீனிவாசன் மரப்பயிரும் ஒரு வகை பணப் பயிரேன்னு விரிவாப் பேசினார். அதைக் கேட்டேன். மறுநாள் காலையிலேருந்து மரக்கன்று நட ஆரம்பிச்சேன். அதே சமயத்துலதான் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், மரங்கள் வளர்ப்பு பற்றி நெறைய விஷயம் சொன்னாரு. இங்க வளர்ந்திருக்கற ஒவ்வொரு மரத்தின் மீதும், நம்மாழ்வாரோட கை விரல்கள் அவசியம் பதிஞ்சிருக்கும்!'' என்கிறார்.



காடு

மரங்கள் வளர்ப்பில் பறவைகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது. பறவைகள் இங்கு படையெடுத்து வர வேண்டும் என்பதற்காகவே, பழங்கள் தரும் மரங்களும். அவற்றின் தாகம் தணிப்பதெற்கென ஆங்காங்கே தண்ணீர்த் தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன. வரிசை கட்டி அணிவகுத்து நிற்கும் மரங்களுக்கிடையே இயற்கை எருக் குழிகள். மரங்களிலிருந்து உதிரும் சருகுகளைக் கூட்டிப் பெருக்கி வெளியே கொட்டுவதில்லை இங்கு. அந்த இலைச் சருகுகளும் மரக் கழிவுகளும் மண்ணோடு மண்ணாகி



கற்பகச் சோலைக்கு இயற்கை உர மாகின்றன.

''சந்தோஷம்னாலும் மரக்கன்னு நடுவேன். துக்கம்னாலும் மரக்கன்னு நட்டிடுவேன். 1967ல எனக்குக் கல்யாணம். கல்யாணத்தன்னைக்கு பதினாறு மரக்கன்னு நட்டுட்டு வந்துதான், தாலி கட்டினேன். இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்ட அன்னைக்கு ஒரு தேக்கு மரக்கன்னு நட்டேன். வந்து பாருங்க... அந்தம்மா மாதிரியே ரொம்ப உறுதியா வளர்ந்தோங்கி நிக்குது!'' தேக்கு மரத்தைக் காண்பிக்கிறார்.

பதினைந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது கற்பகச் சோலை. இருநூறு வகை மரங்கள். சுமார் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில். ''பூமி சூடாகிட்டு வருதுன்னு சொல்றாங்க. காடுகள்

சாகுபடி!

கொறைஞ்சு போச்சு. மரங்களை எல்லாம் மானாங்கானியா வெட்டி வனப் பகுதியே ரொம்பவும் சுருங்கிடுச்சு. அப்புறம் மழை எப்படி பெய்யும்? இப்பவும் நான் கற்பகச் சோலையில் ஒரு மரம் வெட்டணும்னா, அதுக்கு முன்னாடி நாலைஞ்சு மரக்கன்னு நட்டு வெச்சு அதுக கொஞ்சம் வளர்ந்ததுக்கப்புறம்தான், அந்த ஒரு மரத்தையே வெட்ட ஆள் விடுவேன். இதைக் கண்டிப்பா கடைப்பிடிக்கறதால இங்கன மரங்கள் கொறையாம ஒவ்வொரு வருசமும் மரங்களோட எண்ணிக்கை அதிகமாகிட்டே போவுது. ஒரு வீட்டுல ஒரு குழந்தை பொறக்கும்போது நாலு சந்தன மரம், நாலு தேக்கு மரம் நட்டு வைச்சா போதும். அதுங்களோட கல்யாணச் செலவு களை அந்த மரங்கள் பணமா மாத்தித் தந் துடும்'' என்கிறார் அந்தக் கற்பகச் சோலை யின் காவல் தெய்வம்.




நடக்குமென்பார்;



மேஷம்:
இந்த வாரம் பூர்வீக வழியில் ஆதாயமும் எதிர்பார்த்த காரியங்களில் வெற்றியும் கிட்டும். ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர நற்பலன் மிகுதி ஆகும்.

ரிஷபம்:
உத்தியோகத்தில் இருந்து வந்த சிக்கல்கள் விலகும். மன உளைச்சல் தீரும். வழக்கு வியாபாரம் வெற்றி பெறும். பணக் கஷ்டம் தீரும். சனி/குரு வழிபாடு செய்துவர நற்பலன் மிகுதி ஆகும்.



மிதுனம்:
திருமண முயற்சி பலன் அளிக்கும். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் வாக்குவாதம் தவிர்க்கவும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. ராகு/கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



கடகம்:
எதிர்ப்புத் தொல்லைகள் விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்தநிலை தீரும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.



சிம்மம்:
ரொம்பவும் சந்தோஷமான வாரம். சுப காரியப் பேச்சு வார்த்தை பலிதமாகும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.



கன்னி:
வைத்தியச் செலவிலிருந்து விடுதலை கிடைத்து உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். சுப காரியம் கைகூடும். வியாபாரம் சூடு பிடிக்கும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.



தஞ்சை பரத்வாஜ்

"இது யோக ஜாதகம்!"
"எப்படிச் சொல்றீங்க?"
"உங்களுக்குக் கல்யாணமே ஆகாதுன்னு சொல்லுதே!"
- அம்பை தேவா

நடக்கும்!

26.10.2008
முதல்
01.11.2008
வரை



துலாம்:
வேலையில் இடமாற்றம் ஏற்படும். புதிய தொழில்முயற்சி பலன் அளிக்கும். கடன்சுமை தீரும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். சுபமான செலவுகள் ஏற்படும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



விருச்சிகம்:
பத்திரிகைகளில் பெயர் வரும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும். எதிர்ப்புகள் விலகும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.



தனுசு:
வாக்குவாதம் தவிர்க்கவும். பணக் கஷ்டம் தீரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



மகரம்:
எதிர்ப்புகள் நிறைந்து இருக்கும். கடன்சுமை கொஞ்சம் குறைய ஆரம்பிக்கும். வீடு மாற்றம்/தொழில் மாற்றம் ஏற்படும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர நற்பலன் ஏற்படும்.



கும்பம்:
உல்லாசமான வாரம். பண வரவு அதிகரிக்கும். தடை விலகி திருமணம் கைகூடும். கடன் சுமை குறையும். வேலையில் உயர்வு ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



மீனம்:
மன உளைச்சல் அதிகரிக்கும். யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



ஆயிரம் ரூபாயை மட்டும் முன் பணமாக வாங்கிக் கொண்டிருக்கிறார் அந்தக் கடைக்காரர். மீதியை டெலிவரியின் போது கொடுக்கச் சொல்லிவிட்டார். ஆர்டர் செய்த மரச்சாமான்கள் அன்று மாலை வந்து சேர்ந்தன. ஏற்றி, இறக்கி உள்ளே கொண்டு வந்து வைத்திருக்கிறார் மெலிந்த, வயதான ஒரு மனிதர். மிச்ச பணத்தை அவரிடம் கொடுத்திருக்கிறார் அரவிந்த் அடிகா. கூடுதலாக, டிப்ஸ் பத்து ரூபாய்.

மகிழ்ச்சியுடன் அந்த முதியவர் கிளம்பிச் சென்ற பிறகு, யோசித்திருக்கிறார் அரவிந்த் அடிகா. இவருக்கு என்ன சம்பளம் இருக்கும்? ஆயிரம் ரூபாய்? அதைவிடக் குறைவு? கசங்கிய ஆடைகள்; வாரப்படாத தலைமுடி; வியர்வை பொங்கி வழியும் உடல். ஐந்துக்கும், பத்துக்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்.

திடீரென்று அந்தக் கேள்வி எழுந்திருக்கிறது. இவ்வளவு பணத்தையும் இந்த முதியவர் ஒழுங்காகக் கொண்டு வந்து விடுவார் என்று எப்படி அந்த முதலாளியால் நம்ப முடிந்தது? அப்படியே



விருது பெற்ற

வண்டியை இவர் ஓட்டிக் கொண்டு போய்விட்டால்? இன்னொரு ஆச்சரியம் அந்த முதியவரின் நேர்மை. தனது ஏழைமையைச் சாக்குக் காட்டி இவர் தவறு செய்திருந்தால் யாரால் என்ன செய்திருக்க முடியும்?

அன்று தொடங்கி இந்தியாவின் ஆச்சரியமூட்டும் மறுபக்கத்தை சிரத்தையுடன் வேடிக்கை பார்க்க ஆரம்பித்திருக்கிறார் அரவிந்த். பதினைந்து வயது வரை இந்தியாவில் இருந்திருக்கிறார் (சென்னையிலும்). பிறகு, ஆஸ்திரேலியாவில் குடியேறியிருக்கிறார். டைம் பத்திரிகையின் செய்தியாளராக, மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி வந்தவர், உத்தரப்பிரதேசம், பீகார் என்று சுற்றியலைந்திருக்கிறார்.

சில விஷயங்கள் பளிச்சென்று அவர் கண்ணில் சிக்கியிருக்கின்றன. ஏழைமை; ஏழையாக இருந்தாலும் வளைந்து கொடுக்காத கண்ணியம்.

இன்னொன்றையும் கவனித்திருக்கிறார் அரவிந்த். நியூயார்க்கிலோ, தென் ஆப்பிரிக்காவிலோ, லத்தீன் அமெரிக்க நாடுகளிலோ உள்ளது போன்ற வன்முறை விகிதாசாரம் இங்கே இல்லை. ஏழைமை எங்கெல்லாம் பரவியிருக்கிறதோ, அங்கெல்லாம் வன்முறையும் பரவியிருக்கும் என்னும் கருத்தாக்கம் இந்தியாவால் உடைபட்டுப் போகிறது.

அந்த முதியவரால் பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடியிருக்க முடியும். ஆனால், அவரால் பத்திரமாக வீட்டுக்குப் போயிருக்க முடியுமா? இந்தா ஜமாய் என்று பணத்தைத் தூக்கி, தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு உல்லாசமாக இருந்துவிட முடியுமா? திருடன் வீடு, திருடன் குடும்பம் என்று முத்திரை குத்திப் பரிகசிக்க மாட்டார்களா?

பயம். இது ஒன்றுதான் ஊழியர்களை ஊழியர்களாக வைத்திருக்கிறது. இந்தப் பயம் விட்டுப் போனால் என்ன ஆகும்? தன் முதலாளியைக் கொல்லும் நிலைக்கு ஒரு ஊழியன் தள்ளப்படுவது எப்போது? எஜமானனுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்றே கற்பிக்கப்படும் இந்தத் தேசத்தில், கிளர்ச்சி வெடிக்க ஆரம்பித்தால் என்ன ஆகும்? The White Tiger நாவில் அப்படியொரு கதாபாத்திரத்தை உருவாக்கி நடமாட வைத்திருக்கிறார் அரவிந்த். இந்த ஆண்டுக்கான புக்கர் பரிசைத் தட்டிச் சென்றுள்ளது இந்நூல்.

''இந்தியாவுக்கு எதிரான புத்தகம் என்று இது முத்திரை குத்தப்படலாம். மேற்குலகம் என்னைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே இப்படியொரு புத்தகத்தை நான் எழுதினேன் என்று எல்லோரும் சொல்லலாம். இது நாவல் அல்ல, ஒரு எச்சரிக்கைப் புத்தகம்'' என்கிறார் அரவிந்த்.

''இப்போதிருக்கும் நிலை நீடித்தால் இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைத்தான் நான் யூகித்து எழுதியிருக்கிறேன். இந்தியாவின் இருண்ட முகத்தை நான் அருகில் சென்று பார்த்திருக்கிறேன். என்ன பார்த்தேனோ அதைத்தான் எழுதியிருக்கிறேன்'' என்று கூறும் அரவிந்தின் முதல் புத்தகம் இது.

'மெலிதான நகைச்சுவையும் கோபமும் கிண்டலும் கொண்ட புத்தகம்' என்று 'வெள்ளைப் புலி'யைப் பாராட்டியுள்ளது புக்கர் கமிட்டி. ●

வெள்ளைப்புலி



மருதன்



✱ சாதித்த மாணவர்கள்



✱ துவக்க விழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம்

முழுமையற்ற வார்த்தைகள் அறை முழுக்க எதிரொலிக்கின்றன. அதில் சாதனைக்கான, எதிர் நீச்சலுக்கான வல்லமை தெரிகிறது. அந்த வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர்கள் அத்தனை பேரும் வாய் பேச இயலாத, செவித்திறன் குறைவுடைய மாணவ - மாணவிகள். விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்வியான பி.டெக். பயில்கின்ற இம் மாணவர்கள் பத்தாம் வகுப்பு நிறைவு செய்தவர்கள். இதெல்லாம் அவர்களுக்குச் சாத்தியமா என்கிற கேள்விக்குறியினை, முயற்சித்தால் முடியுமென, செயலில் இறங்கி ஆச்சர்யக் குறியாக மாற்றிக் காட்டியுள்ளது கலசலிங்கம் பல்கலைக் கழகம். இதுபோன்றவர்களுக்கு தெற்காசிய நாடுகளிலேயே இங்கு மட்டும்தான் பி.டெக். படிப்பு தரப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே கிருஷ்ணன் கோயில் என்னுமிடத்தில் முன்னூற்று அறுபது ஏக்கர் பரப்பளவில் பசுமைச் சூழலில் அமைந்துள்ளது கலசலிங்கம் பல்கலைக்கழகம்.

''தங்களால் பேச முடியவில்லை; கேட்க முடியவில்லை என்பதால், இவர்கள் எதுவாக இருந்தாலும் கூர்ந்து கவனிக்கிறார்கள். தாங்கள் உணர்வதை மிகச் சரியாக உடனே வெளிப்படுத்துகிறார்கள். எப்போதுமே நாங்கள் இவர்களிடம் சைகை மொழி உபயோகிப்பதில்லை. பேசிப் பேசியே அவர்களுக்கு எதனையும் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றலை வளர்க்க வேண்டும் என்பதுதான் நோக்கம். நாங்கள் பேசப் பேச எங்களின் உதட்டசைவு மற்றும் முகபாவங்களை வைத்தே எளிதில் புரிந்து கொள்கிறார்கள். இத்தனைக்கும் இதுவரை அவர்களுக்கான சிறப்புப் பள்ளிகளில் படித்தவர்களுக்கு ஆங்கிலப் பாடமே இருந்தது கிடையாது!'' எனக் கூறி ஆச்சர்யப்பட வைக்கின்றனர் வாய் பேச இயலாத செவித்திறன் குறைந்தவர்களுக்கான பி.டெக். துறைப் பேராசிரியர்கள்.



மௌனப் புரட்சி

வாய் பேச இயலாத செவித்திறன் குறைவுடைய பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்கள், அகில இந்திய அளவிலான நுழைவுத் தேர்வின் மூலமாக பி.டெக். வகுப்புகளில் இங்கு சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கு மட்டும் ஆறு ஆண்டுகள் பி.டெக். பாடத் திட்டம் இப்பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது பி.டெக். முதல் ஆண்டில் எண்பத்தைந்து பேரும், இரண்டாம் ஆண்டில் தொண்ணூற்று மூன்று பேரும் கல்வி பயின்று வருகிறார்கள். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, பீகார் போன்ற மாநிலங்களிலிருந்து வந்து மாணவ மாணவிகள் பயில்கின்றனர்.

இவர்களுக்கான பி.டெக். வகுப்புகளை, கடந்த ஆண்டு பல்கலைக்கழக வளாகத்துக்குள் துவக்கி வைத்தவர் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம்.

''**இ**து எங்கள் பல்கலை நிர்வாகத்தினரின் உள்ளங்களில் உருவான சமூக சேவை அர்ப்பணிப்புத் திட்டம். இவர்களை இயல்பான மாணவர்களுக்குச் சமமாகக் கொண்டு வருவதே எங்கள் இலட்சியம்!'' என்கிறார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் தங்கராஜ்.

''அமெரிக்காவின் நியூயார்க் அருகே ரோசெஸ்டர் என்னுமிடத்தில் வாய் பேசாத காது கேளாதவர்களுக்கான உயர் தொழில்நுட்பக் கல்வி நிலையம் இயங்கி வருகிறது. அங்கு சென்று தங்கியிருந்து இதுகுறித்து வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று வந்தோம். பி.டெக். படிப்பினை அடுத்து, எம்.டெக். மற்றும் ஆய்வுப் படிப்புகள் வரை கொண்டு செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளது!'' எனக் குறிப்பிடுகிறார் கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் டி.கே.ஸ்ரீதரன்.

''கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் போன்றவற்றைப் பல்கலைக்கழக நிர்வாகமே ஏற்றுக்கொள்கிறது!'' எனக் கூறுகிறார் பல்கலைக் கழகவேந்தர் டி.கலசலிங்கம்.

– புதியவன்

படங்கள் :

ஸ்ரீரங்கம் திருநாவு



✱ துணைவேந்தர் டாக்டர் தங்கராஜ்

"கறை படிந்தவர்கள்

சமீபத்தில் நடந்து முடிந்த தே.மு.தி.க. இளைஞரணி மாநாடு, தி.மு.க - அ.தி.மு.க. இரண்டு தரப்பையும் உற்றுக் கவனிக்க வைத்திருக்கிறது. லட்சக்கணக் காகத் திரண்டிருந்த இளைஞர்களில் ஒருசிலரிடம் பேசினோம். ''நீங்க, விஜய காந்த்திடம் என்னதான் எதிர்பார்க்கறீங்க?'' -என்றவுடன், பருவ மழைக்கு இணை யாகக் கொட்டித் தீர்த்துவிட்டனர்...

''கேப்டன், கட்சியை அடிமட்டம் வரை கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும். மற்ற கட்சிகளில் 'கறை' கண்டவர்களைச் சேர்க்கக்கூடாது. நிர்வாகி களை நியமிக்கும்போது, சிபாரிசு, பாரபட் சம் ஆகியவற்றுக்கு இடம்கொடுக்கக் கூடாது. மக்கள் எங்களுக்கு வோட்டுப் போடத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அவர்களை பூத்துக்குக் கொண்டுவர, படை பலம் தேவை'' என்கிறார் மதுரை இளமாறன்.

ஊர்வலம் வரும் வழியில் இருந்த டாஸ்மாக் கடைகளை இளைஞர்கள் மொய்த்ததுதான் மனத்தை மிகவும் நெருடி யது. ''கவர்ச்சித் திட்டங்களைவிட வளர்ச் சித் திட்டங்களை வரவேற்போம் என்று பிரகடனம் செய்கிறார் கேப்டன். ஆனால், புகை மற்றும் மதுவுக்கு எதிராகவும் அவர் தீவிரமாகப் பிரசாரம் செய்யவேண்டும். ஐம்பது சதவிகிதம் இளைஞர்கள் இன்று குடிப்பழக்கத்துக்கு ஆளாகிவிட்டார்கள்'' என்கிறார் வேலூர் கோபால்.

''விஜயகாந்த், எதிர்வரும் பாராளு மன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட வேண்டுமா... தனித்து நிற்க



கட்சிக்கு வேண்டாம்”

வேண்டுமா?'' என்று வடசென்னை கிருஷ்ணனிடம் கேட்டோம். ''சென்ற சட்டமன்றத் தேர்தலில் விருத்தாசலத்தில் மட்டும் வெற்றி பெற்றோம். ஆனால், 28 லட்சம் வாக்குகள் பெற்றோம். அதன்பிறகு எங்கள் செல்வாக்கு வளர்ந்திருக்கிறது. எனவே கேப்டன், இடதுசாரிகள் மற்றும் காங்கிரஸுடன் இணைந்து கூட்டணி கண்டால், எங்களுக்கு 70 சதவிகித வெற்றி கிடைக்கும். பின்னர் சட்டமன்றத் தேர்தலில், இதே கூட்டணியுடன் ஆட்சியைப் பிடிக்கலாம்'' என்கிறார் கிருஷ்ணன்.

கிட்டத்தட்ட ஆறு மணி நேரத்துக்கு மேல் ஊர்வலம் போய்க்கொண்டேயிருந்தது. மன்றோ சிலை அருகே ஊர்வலத்தைப் பார்த்து, உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த விஜயகாந்த், எட்டரை மணிக்கு தீவுத்திடல் பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார். அதற்குள் அவரது மனைவி பிரேமலதா உட்பட, பெரும்பாலான கட்சிப் பிரமுகர்கள் பேசி முடித்துவிட்டார்கள். கூட்டம் மேடையை நோக்கி நெருக்கியடித்து முன்னே வர முயன்றதால், கடுமையான தள்ளுமுள்ளு; பெண்கள் மாட்டிக் கொண்டார்கள். இதைப் பார்த்த பிரேமலதா, ''நமது மாநாட்டுக்குக் காவல் துறை உரிய பாதுகாப்புக் கொடுக்காது; எனவே நமக்கு நாமே கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்'' என்று பலமுறை கேட்டுக் கொண்டார். தே.மு.தி.க.வுக்குக் கிடைத்திருக்கும் நல்ல பேச்சாளர் பிரேமலதா. தே.மு.தி.க. பற்றிய லேசர் காட்சி எல்லோரையும் அசத்தியது. கூட்டத்தைப் பார்த்த சந்தோஷப் பெருமிதத்தில், விஜயகாந்துக்குத் தொடர்ச்சியாகப் பேச்சு வரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அவ்வப்போது சிலிர்த்தவாறு இடைவெளிவிட்டார். ''தனித்தனியாகப் போட்டியிடத் தயாரா?'' என்ற வழக்கமான அவரது சவாலை, அந்த மேடையிலும் வைத்தார் விஜயகாந்த். கணிசமான இளைஞர் கூட்டத்தை, தன்வசம் ஈர்த்து வைத்திருக்கும் விஜயகாந்துக்கு அவர்களை வழிநடத்தும் பெரிய பொறுப்பிருக்கிறது. சிலர் அவருக்கு அழுத்தமான அழகான பேச்சு நடை வரவில்லை என்கிறார்கள். ''எதுக்கு அடுக்கு மொழியும் அழகான நடையும்? அப்படிப் பேசித்தானே இன்று ஆட்சிக்கு வந்து ஏமாற்றுகிறார்கள். அது வேண்டாம் ஸார். மக்களின் கஷ்டங்களை, கேப்டன் புரிந்துகொண்டிருக்கிறார். அவற்றைத் தீர்ப்பதற்கு இதய சுத்தமாக முயற்சி செய்கிறார். அது போதும்'' என்கிறார் சேலத்தைச் சேர்ந்த இளங்கோவன்.

- ஸ்ரீநி

படங்கள் : ராஜன்

விஜயகாந்துக்கு தொண்டர்கள் வேண்டுகோள்



பகீர் தொடர் 1

ஹாஸ்பிடல்

அறுவைச் சிகிச்சை அவசியம் அதற்கு உடனடியாக

அவர் ஓர் இளம் பெண். இன்னும் இரண்டு மாதங்களில் கல்யாணம். அதற்கான நிச்சயதார்த்த விழா அடுத்த நாள் நடக்கவிருக்கிறது.

ஆனால், கல்யாணக் கனவின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. வயிற்றுப் பகுதியில் கடுமையான வலி ஏற்பட்டது. தாங்க முடியாமல் துடித்தாள்.

''என்னம்மா கல்யாணக் கனவா?'' என்றபடி சிரித்துக்கொண்டே அறைக்குள் நுழைந்த அவள் அப்பா திகைத்தார்.

வீட்டின் அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு அவளை அழைத்துக் கொண்டு போனார்.



உடனடியாக அவளுக்கு ட்ரிப்ஸ் ஏற்றினார்கள். மூக்கில் 'சக்ஷன் ட்யூப்' செருகப்பட்டது.

''உடனடியாக அபென்டிஸிடிஸ் ஆபரேஷன் செய்தாகணும். இல்லேன்னா உயிருக்கே ஆபத்து'' என்றார் அங்கிருந்த டாக்டர்.

அடுத்தநாள் நிச்சயதார்த்தம். இன்று அறுவைச் சிகிச்சையா? மாப்பிள்ளை வீட்டில் என்ன நினைத்துக்கொள்வார்கள்? 'ஒரு நிமிடம்' என்று கூறிவிட்டு வெளியே வந்த அந்த அப்பா, தனக்கு ஏற்கனவே அறிமுகமான ஒரு டாக்டரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

இந்த நிலையில் ஒரு கேள்வி. ஸாரி. சங்கிலித் தொடராய் தொடர்புள்ள சில கேள்விகள்.

அறுவைச் சிகிச்சை அவசியம் என்று ஒரு ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் கூறினால், அதற்கு உடனடியாக ஒத்துக்கொள்வது நல்லதா? அல்லது இன்னொரு டாக்டரின் கருத்தைக் கேட்பது நல்லதா?

இப்போது அடுத்த தவிப்பு. இந்த இரண்டு டாக்டர்களும் நேர் எதிரான கருத்துக்களைச் சொன்னால் என்ன செய்வது?

தவிப்பு நமக்கு மட்டுமல்ல. இரண்டாவது டாக்டருக்கும் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஒருவேளை முதல் டாக்டர் தப்பான முடிவு எடுத்திருந்து, 'சக டாக்டர் ஒருவரின் பலவீனத்தை வெளிப்படுத்தக் கூடாது' என்பதற்காக இரண்டாவது டாக்டர் தனது மாறுபட்ட கருத்தைச் சொல்லாமல் இருந்துவிடவும் கூடும்!

அல்லது வேண்டுமென்றே (தொழில் பொறாமைகூடக் காரணமாக இருக்கலாம்!) முதல் டாக்டரின் கருத்து சரி என்றுபட்டால்கூட அதைத் தவறு என்று மாற்றிச் சொல்ல வாய்ப்பு உண்டா?

என்று ஒரு ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் கூறினால், ஒத்துக்கொள்வது நல்லதா?


* ஜி.எஸ்.எஸ்.

எண்ணற்ற சந்தேகக் கேள்விகளுடன் டாக்டர் என்.ஏ.ஜெயவேலனை அணுகினோம். சென்னை ஐ.ஐ.டி. முதன்மை மருத்துவராக விளங்கி, சமீபத்தில் ஓய்வு பெற்றவர்.

பூசி மெழுகாமல் தம் கருத்துக்களைத் தெளிவாகவே பகிர்ந்துகொண்டார். தமக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளம்பெண் குறித்துப் பேசத் தொடங்கினார். இந்த அத்தியாயத் தொடக்கத்தில் வயிற்று வலியால் துடித்த பெண் அவர்தான்.

''பதற்றத்துடன் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அந்தத் தந்தையிடம் பலவித கேள்விகளைக் கேட்டேன். 'குடல்வால் அழற்சி' என்றால் தொடர்ந்து வலி இருக்கும். பலவித கோணங்களில் உடலை அசைக்கும்போது இந்த வலி அதிகமாகும். ஆனால், 'என் மகளுக்கு வயிற்றுவலி விட்டு விட்டு வருகிறது' என்றார் அவர். நடந்தே அந்த கிளினிக்குக்கு அவளால் செல்ல முடிந்தது என்றும் சொன்னார். இதையெல்லாம் அறிந்ததும் அது அபெண்டிஸைட்டிசாக இருக்காது என்று என் மனதுக்குப் பட்டது.

'ஆபரேஷன் வேண்டாம். உங்க மகளை என்னிடம் அழைச்சிட்டு வாங்க' என்றேன்.

* என்.ஏ.ஜெயவேலன்


வந்தார்கள். அந்தப் பெண்ணைச் சோதித்துப் பார்த்ததில் அபெண்டிஸிடிஸ் இல்லை என்று பட்டது. பின்னர் ஸ்கேனிலும் குடல்வால் பாதிப்பு எதுவும் இல்லை என்பது தெரிய வந்தது. கிருமிகளால் ஏற்பட்ட தொற்று அது. அவ்வளவே. அதற்கான மருந்துகளை உட்கொண்டதும் வலி மறைந்தது.

நல்லவேளையாக, அடுத்த நாள் நிச்சயதார்த்தம் என்பதால் அறுவைச் சிகிச்சையைத் தவிர்க்க நினைத்தார் அந்தத் தந்தை. இல்லையென்றால் தேவையே இல்லாமல் ஓர் அறுவைச் சிகிச்சை நடந்திருக்கும்.



அறுவைச் சிகிச்சை

எத்திக்ஸ்

ஜி.எஸ்.எஸ்.

செய்ய வேண்டுமென்று எந்த டாக்டர் கூறினாலும் (அது மிகவும் உடனடியாக செய்ய வேண்டிய எமர்ஜென்சி ஆபரேஷனாக இருந்தால் ஒழிய) நிச்சயம் அந்தத் துறை தொடர்பான இன்னொரு ஸ்பெஷலிஸ்டின் கருத்தைக் கேளுங்கள்.

ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட மருந்தை, தேவைப்படாமலேயே ஒரு டாக்டர் பரிந்துரைத்தால்கூட, அதனால் பெரும்பாலும் நிரந்தரப் பாதிப்பு இருப்பது இல்லை. ஆனால் அறுவைச் சிகிச்சை



''ஞாபக மறதி வியாதிக்கு நீங்க ஒரு வருஷமா மருந்து சாப்பிடறீங்களே, இப்ப எப்படி இருக்கு?''

''நீங்க கிளினிக் திறந்தே நாலு மாசம்தானே ஆகுது டாக்டர்...''

- வி.சாரதி டேச்சு

ஒருமுறை செய்தால் செய்ததுதான்.

இரண்டு ஸ்பெஷலிஸ்டுகளும் நேரெதிரான கருத்துக்களைக் கூறினால், அவற்றை உங்கள் குடும்ப டாக்டர் அல்லது உங்களுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான ஒரு டாக்டரிடம் எடுத்துக்கூறுங்கள். பிறகு, அவர் சொல்கிற ஆலோசனையைக் கேட்டு நடப்பதே நல்லது. ஏனென்றால் அந்த ஆலோசனையினால் அவருக்குப் பொருளாதார லாபம் கிடையாது என்பதோடு, 'நாளைக்கே இவரை மறுபடியும் சந்திக்கும் வாய்ப்பு உண்டு' என்பதால் உங்கள் நலனை மட்டுமே மனத்தில் கொண்டு அவர் ஆலோசனை அளிப்பார்'' என்றார் டாக்டர் ஜெயவேலன்.

''இது பற்றிப் பேசும்போது எனக்கு என் குரு பேராசிரியர் கே.வி.திருவேங்கடம் நினைவுக்கு வருகிறார். அவ்வப்போது எனக்கு ஃபோன் செய்வார். 'உங்களிடம் செக்கப்புக்கு வந்த ராம்பாபு இப்போ என்கிட்ட வந்திருக்கிறார். உங்களுடைய சிகிச்சை பற்றி எனக்குச் சில சந்தேகங்கள்' என்றபடி அடுக்குவார். அதேபோல் என் விளக்கங்களையும் கேட்டுக்கொள்வார். இதுதான் சரியான முறை.



ஆனால், இப்படிப் பட்ட டாக்டர்கள் மிகவும் குறைந்துவிட்டார்கள் என்பதுதான் வருத்தமான உண்மை'' என்றார்.

'எதிக்ஸ்' என்பதை எப்படி அர்த்தமாக்கிக் கொள்ளலாம்? நல்லொழுக்கம், தொழில் தர்மம் இரண்டும் இணைந்தது எனலாம்.

ஒவ்வொருவருக்குமே இது முக்கியம்தான் என்றாலும், டாக்டர்களிடம் அதிகமாக எதிர்பார்ப்போம்.

தவறான ஒருவருக்கு நீதிபதி தூக்கு தண்டனை அளித்தால்கூட கருணை மனு இருக்கிறது. அவர் காப்பாற்றப்படலாம். ஆனால் மருத்துவர்? அவரின் சில நிமிட அலட்சியம் அல்லது ஒரு அதீத வியாபார நோக்கு, ஒருவரது உயிரையே பறித்துவிடுமே!

தவிர, மருத்துவர்களுக்கு மனச்சாட்சியின் வலிமை மகத்தானதாகத்தான் இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட உதாரணம், நீருக்குள் மறைந்துள்ள பெரும் பனிப்பாறையின் ஒரு சிறுமுனைதான். அப்படியானால் அந்த அபாயகரமான பாறை எவ்வளவு பெரிசு...? தொடர்ந்து படியுங்கள்.

(தொடரும்)

அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று எந்த டாக்டர் கூறினாலும் நிச்சயம் அந்தத் துறை தொடர்பான இன்னொரு ஸ்பெஷலிஸ்டின் கருத்தைக் கேளுங்கள்.

நியூ [ஸ்] ஃபாஷன்





விஜயகாந்த்... வேலை வாய்ப்பு ரகசியம்!

எதிர்க்கட்சிகளிடம் கை நழுவிப் போக இருந்த இலங்கைத் தமிழர் பிரச்னையை, மிகச் சாணக்கியமாக, தன்னை முன்னிலைப்படுத்தி முதல்வர் திருப்பிவிட்டதை எண்ணி வியக்கிறார்கள் தி.மு.க. உடன்பிறப்புகள். ''இனி இதைச் சுற்றியே தமிழக அரசியல் இருக்கும்'' என்று பெருமூச்சு விடுகிறார் தி.மு.க. பிரமுகர் ஒருவர். இதற்கிடையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா, மனிதச் சங்கிலி என்று அதிரடியாகச் செயல்படும் முதல்வரின் செயல்பாடுகளை காங்கிரஸ் மேலிடம் ரஸிக்கவில்லை என்கிறார்கள். ''இல்லையில்லை... இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் செயல்படுவதே, இந்திய அரசாங்கம் கொடுத்த ஆலோசனைப்படிதான். நமது வெளிவிவகார உளவு அமைப்பின் (RAW) யுக்தி இது'' என்றும் ஒரு பேச்சு இருக்கிறது. எது எப்படியோ... மக்கள் அன்றாடப் பிரச்னைகளை மறந்துவிட முடியுமா?

● பா.ம.க., தி.மு.க. கூட்டணியை விட்டுப் போனபின்பு வன்னியர் வாக்குவங்கியை அள்ளி எடுக்க ஆளும் கட்சி நாற்பதுக்கும் மேற்பட்ட சிறிய வன்னிய அமைப்புகளின் கூட்டத்தை சென்னையில் கூட்டியது. தீரன், ராமதாஸ் (ராமசாமி படையாச்சி மகன்), ஏ.கே. நடராஜன் மற்றும் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும், நீதிபதிகளும் கலந்து கொண்டார்கள். 'நாளை பா.ம.க. மீண்டும் கூட்டணியில் இணைந்துவிட்டால் எங்களை அப்படியே கைகழுவி விடுவார்கள் என்பதும் எங்களுக்குத் தெரிந்ததுதான்'' என்கிறார், கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பிரமுகர். அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!

● ''ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவேன்'' என்று சொன்னாலும் சொன்னார் விஜயகாந்த். ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்து குவிகின்றனவாம். தவிர கட்சிப் பிரமுகர்கள் வேறு விண்ணப்பங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். விஜயகாந்த் எப்படி வேலை வாங்கித் தருவார்? இந்த விஷயத்தில் அவருக்கு உதவிக்கரம் நீட்டுபவர் மாஃபா பாண்டியராஜன். இவர் தே.மு.தி.க.வின் மத்திய சென்னை தொகுதி மேடைப் பார்வையாளர். தனது நிறுவனத்தின் மூலம் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை பெற்றுத் தந்தவர் இவர். இவரை நம்பித்தான் சொல்லியிருக்கிறார் விஜயகாந்த். கட்சி வித்தியாசம் பார்க்காமல் வாய்ப்பு வழங்குவார்களாம். சபாஷ்!

– ஸ்ரீநி

எட்டாவது படிக்கையில் நண்பர் கிறிஸ்டோபரை ஒருமுறை சந்தித்த போது, கதைக்கான சில ஓவியங்களைக் காண்பித்தார். அவர் என்னைவிட ஒரு வருடம் சீனியர்; நல்ல ஓவியரும்கூட. ''இதெல்லாம் என்ன?'' என்றேன். ''துப்பறியும் நாவல்களுக்கு இங்கிருந்தே வரைஞ்சு சென்னைக்கு அனுப்புகிறேன்'' என்றார். எனக்கு அதிர்ச்சியும் ஆச்சர்யமும்! ''இங்கிருந்தே வரைய முடியுமா?'' என்றேன். ''எனக்குக் கதையை அனுப்பிருவாங்க... நான் வரைஞ்சு அனுப்பிடுவேன்!'' என்றார். அடடா... நாம் இதை மிஸ் பண்ணிவிட்டோமே என நினைத்து, உடனே களத்தில் இறங்கினேன். கபில்தேவ் ஓடி வருவது மாதிரி, ஒருவர் சிகரெட் பிடிப்பது மாதிரி, அப்புறம் ஒரு போலீஸ்காரர் என பல கார்ட்டூன்களை வரைந்து ரெடி பண்ணி 'விகடன்' ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினேன். 'ஐயா, நான் பெரிய ஓவியன் இல்லை; சின்ன ஓவியன்தான்! விரைவில் வளருவேன் என்றாலும், நான் தற்போது கேலிச் சித்திரங்களும், நல்ல சித்திரங்களும் (?) நன்கு வரைவேன். நான் மதுரையில் இருந்துகொண்டே தங்கள் இதழ்களுக்கு வரைய விரும்புகிறேன். தாங்கள் வாய்ப்பளித்தால் நான் வளருவேன்!' என கம்பீரமும், கெஞ்சலுமாக வேலை கேட்டு ஒரு கடிதம் எழுதி, ஓவியங்களோடு விகடனுக்கு அனுப்பி வைத்தேன்.



அதன்பின் எனக்குத் தபால்காரரைத் தவிர, வேறு யாருமோ எதுவுமோ கண்ணுக்கே தெரியவில்லை. என்ன ஆச்சர்யம்... ஒரு வாரம் கழித்து விகடனிலிருந்து பதில் வந்தது. எனக்கு இதயமே நின்றுவிட்டது. பதைபதைக்க தபாலைப் பிரித்தேன். உள்ளே எனது ஓவியங்களும் ஒரு சின்ன ப்ரிண்ட் செய்யப்பட்ட பேப்பரும் இருந்தன. அதில், 'உங்கள் கதை/கவிதை/கட்டுரை/ ஓவியம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. என்றாலும் மனம் தளராது தொடர்ந்து அனுப்புங்கள்!' என்றிருந்தது. அதில் ஓவியம் என்பது மட்டும் பேனாவால் டிக் செய்யப்பட்டிருந்தது. இந்த ப்ரிண்டட் பேப்பர் எனக்கு முதல் அனுபவம்; குழம்பிவிட்டேன். என்னைத் தொடர்ந்து வேலை கேட்டுக் கடிதம் எழுதச் சொல்கிறார்களோ என! படைப்புகள் தேர்வாகாத போது இந்தப் பேப்பரும் உடன் வரும் எனப் பின்னால்தான் தெரிந்தது. நான் வேலை கேட்ட விஷயமே புரியாமல், யாரோ இந்தப் பேப்பரை எனக்கும் அனுப்பிவிட்டார்கள் போல! ஆனால் நண்பர்களிடம் காட்டியபோது, நான் வேலை கேட்டு எழுதியதையே மிகப் பெரிய சாதனையாக எண்ணி எண்ணி வியந்தார்கள்.

கல்லூரி படிக்கும்போது, விகடன் நடத்திய 'மாணவ எடிட்டர் திட்டத்'துக்காக சென்னை விகடன் அலுவலகம் வந்திருந்தேன். மாநில அளவில் 161 கல்லூரிகளில் இருந்து இறுதியில் தேர்

மலையும்...

வான எட்டு கல்லூரிகளில் எங்கள் தியாகராசர் கல்லூரியும் ஒன்று. அதன் சார்பில் ஒரு சிறு இதழ் (supplimentary) தயாரிக்கவே, நானும் நண்பர் செல்வமும் சென்னை வந்திருந்தோம். எழுத்தாளர் சௌபா அண்ணன்தான் என்னைத் தைரியப்படுத்தி தயார்ப்படுத்தி அனுப்பியிருந்தார்.

மாங்குமாங்கென உழைத்தோமே தவிர தலையும் புரியவில்லை. காலும் புரியவில்லை. இதழ்த் தயாரிப்பு முடிந்த பின், எம்.டி. எனப்படும் ஆசிரியர் ரூமுக்கு அழைத்துச் சென்றார்கள். முதன்முறையாக எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களைச் சந்தித்தேன். எளிமையாகவும் அன்பாகவும் இருந்தார் அந்த மரியாதைக்குரிய பெரியவர். பத்து நிமிடம் சக நண்பன் போல உற்சாகமாகப் பேசினார். என்னிடம், ''உங்க கார்ட்டூன் ஐடியா நல்லா இருக்கு. ஆனால், கார்ட்டூன் வரையறதுக்கு நீங்க இன்னும் பயிற்சி எடுக்கணும். மார்க்கெட், ரயில்வே ஸ்டேஷன்னு நேரே போய் மனுஷங்களைப் பார்த்து நோட்டில் வரைஞ்சு பாருங்க. அதைத்தான் மாலி, கோபுலு தொடங்கி எல்லா கார்ட்டூனிஸ்டுகளும் பண்ணாங்க. நல்ல கலைஞனுக்குக் கடைசி வரை பயிற்சியும், உழைப்பும்தான் இரண்டு கண்கள்!'' என்றார்.

இறுதியில் மாணவ எடிட்டர் திட்டத்தில் எங்கள் கல்லூரி முதலாவதாக வர, நான் தனிப்பரிசும் பெற்றேன். அந்த வருடம் கல்லூரி முடித்ததும், விகடனில் வேலை கேட்டு எம்.டி.க்கு நான் எழுதிய ஆறு பக்கக் கடிதத்தை, சௌபா அண்ணனிடம் காண்பித்தேன். ''எம்.டி என்ன பொழுதுபோகாம தாயக்கட்டை விளையாடுறவர்னு நெனைச்சியா? பயங்கர பிஸியானவர். அரைப் பக்கத்தில் ஷார்ப்பா எழுது! மிகச் சுருக்கமா எழுதறது தான் ஜர்னலிசத்தோடு அடிப்படையே!'' என பரேடு விட்டார். இறுதியில் விகடனில் நிருபராக வேலை கிடைத்தது.

வேலையில் சேர அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டரை எம்.டி.யிடம் வாங்கினேன். ''நல்லா பசிச்சவன் சாதத்தை



மழையும்!

எப்படிச் சாப்பிடுவானோ... அப்படி ஒவ்வொரு நிமிஷமும் அனுபவிச்சு வேலையைப் பாருங்க. மிச்ச எல்லாம் தானா வரும்!'' என்றார். அவர் சொன்னது போலவே நான் பணிபுரிய ஆரம்பித்தேன். விகடன் ஒரு குடும்பம் மாதிரி. ஆஃபீஸுக்கான பயமே யாரிடமும் இருக்காது. நாம் ஏதாவது தப்பாகச் செய்தாலும், சரியாகச் செய்தாலும் யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள். ஆறு மாதத்துக்கு ஒருமுறை வரும் மேனேஜ்மெண்ட் லெட்டரில்தான் தெரியும், நாம் எத்தனை தீர்க்கமாகக் கவனிக்கப்பட்டுள்ளோம் என. பக்கா ஜட்ஜ்மெண்ட் வரும்! நான் முதல் ஆறு மாதத்திலேயே டபுள் புரமோஷனாகி சப் எடிட்டர் ஆனேன். ஜெ.எம்.டி, மதன், ராவ், வீயெஸ்வி, அசோகன், சுபா, கண்ணன், ரவி பிரகாஷ், உபைதுரர், விகேஷ், ம.கா.சி... என அற்புதமான சீனியர் டீம் இருந்தது. இவர்களிடமிருந்து என்னால் நிறைய கற்றுக்கொள்ள முடிந்தது.

விகடனில் சேர்ந்த பின் எம்.டி. சொன்னதுபோல, விடாமல் பொது இடங்களில் போய் நேரடியாகப் பார்த்து வரைய ஆரம்பித்தேன் (Live sketches). அது அற்புதமான அனுபவம். உச்சி வெயிலில் ரோட்டில் நின்றுகொண்டு வரையும்போது, ஏதோ நமக்கு உள்ளே ஏறுவதுபோல் இருக்கும். சைக்கிள் பழகுவதுபோல்தான். ஆரம்பத்தில் வராது. கண்ணுக்குத் தெரியாத அந்தச் சக்தி பிடிபட்டுவிட்டால் பிரமாதமாக வரையலாம். இருபது இருபத்தைந்து நோட்டுக்கள் வரைந்திருப்பேன். அதுதான் உண்மையான சொத்து!

ஒருமுறை எம்.டி.யைப் பார்க்கப் போனேன். ரொம்பத் தயங்கியவுடன், ''ஆஃபீஸ்க்குள்ள ஏதும் பிரச்னையா?'' என்றார். ''இல்ல சார்! ஊருக்குப் போக பதினைஞ்சுநாள் லீவு வேணும்!'' என்றேன். ''பதினைஞ்சு நாள் எதுக்கு...? டைஃபாய்டு வந்தாலே பத்துநாள்தானே? இல்ல கல்யாணம் ஏதும் ஆகப் போகுதா? ஹனிமூன் போறீங்களா?'' என்றார். ''இல்ல சார். நாலு பேப்பர் அரியர். காலேஜ் போய் கிளியர் பண்ணணும்!'' என்றேன். புருவம் சுருக்கியவர், ''ஆரம்பத்துல உங்க பயோடேட்டாவில் டிகிரி முடிச்சுட்டதா இருந்ததே?'' என்றார். ''இல்ல சார். டிகிரி முடிஞ்சுருச்சு. வேலை குடுங்கன்னுதான் கேட்டிருந்தேன். டிகிரி முடிச்சுட்டேன்னு எழுதலை!'' என்று விகடம் ரேஞ்சுக்குச் சமாளித்தேன். புன்னகைத்தவர், ''இந்த நுணுக்கத்தை வொர்க்லயும் காட்டுங்க. போய் ஒரேயடியா முடிச்சுட்டு வாங்க. வருஷா வருஷம் போற மாதிரி வைச்சுக்காதீங்க!'' என பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.



''நல்லா பசிச்சவன் சாதத்தை எப்படிச் சாப்பிடுவானோ...

ஒருநாள் தாமதமாகிவிட்டதால் அவசர அவசரமாக ஆஃபீஸுக்குள் நுழைந்தேன். எதிரே எம்.டி. நின்றிருந்தார். வணக்கம் சொல்லிவிட்டு நானே முந்திக்கொண்டு, ''ஸாரி சார். மலை பெய்ஞ்சது. அதான் லேட்டு!'' என்றேன். சில வினாடி அமைதியாகப் பார்த்தவர், ''மலை பேய்ஞ்சதா? இமயமலையா?' திருவண்ணாமலையா?'' என்றார். நான் முழிக்க... ''ஏன் 'ழ'கரம் வராதா? 'மழை'ன்னு சொல்றதுக்குப் பதில் 'மலை'னு சொல்றீங்களே?'' என்றார். நான் தொடர்ந்து முழித்தேன்.

அன்று எடிட்டோரியல் மீட்டிங்கில் 'மழை' மேட்டரைச் சொல்ல எல்லாரும்

சிரித்தார்கள். உடனே எல்லோரையுமே 'மழை' என சொல்லச் சொன்னார். பாவம், பலர் பரிதாபமாக மாட்டினார்கள். சிரித்தவர்களில் பாதிப் பேருக்கு மேல் 'ழ' வரவில்லை. எனக்கோ மட்டற்ற சந்தோஷம். கொடுமை என்னவென்றால் 'ழ' வராத எல்லோருமே மதுரைக்காரர்கள்! சொல்ல வராதவர்களையெல்லாம் ஒருபுறமாக உட்கார வைத்து, ''நாக்கு மடங்கி மேலே அண்ணத்தைத் தொடணும். அதான் 'ழ' சொல்லுங்க!'' எனச் சொல்ல, ஆளாளுக்கு 'ழ' 'ழ' என தவளை போல் கத்திக் கொண்டிருந்தோம். ''பேச்சும், எழுத்தும்தான் பத்திரிக்கையாளனின் சொத்து. எழுத எழுத எழுத்துத் திறன் டெவலப் ஆகற மாதிரி, கூடவே நம் பெர்சனாலிட்டியையும் டெவலப் பண்ணிக்கணும்'' என்பார்.

...அப்படி ஒவ்வொரு நிமிஷமும் அனுபவிச்சு வேலையைப் பாருங்க. மிச்ச எல்லாம் தானா வரும்!''

ஜூனியர் விகடனில் அரசியல் கார்ட்டூன் வரைய ஆரம்பித்தபோது, எம்.டி.தான் கார்ட்டூனைப் பார்த்து ஓ.கே. பண்ணுவார். அவரிடம் 'ஓ.கே.' வாங்குவதற்குள் மூச்சு முட்டிப்போகும். சம்பந்தப்பட்ட பிரச்னையை நன்கு யோசித்து கரெக்ஷன் சொல்வார். சிலசமயம் நன்றாக இருந்தாலும், ''ரிபீட் ஐடியா! வேண்டாம்'' என்பார். ''எளிமையாகவும், ஆழமான அர்த்தத்தோடும் இருக்கணும்... அதான் நல்ல அரசியல் கார்ட்டூன்!'' என்பார்.

எம்.டி. ஒரு ஸ்பெஷல் கம்ப்யூட்டர் மாதிரி. யாருக்குமே தெரியாத தவறுகள் அவருக்குத் தெரியும். பல கோணங்களில் யோசிப்பார். நாம் டென்ஷனாக இருக்கும் போது நகைச்சுவையாகப் பேசி நம்மை ரிலாக்ஸ் ஆக்குவார். தந்தையாகவும், தலைவனாகவும் அமைந்த அற்புதக் கலவை அவர்.

'கி.மு.வில் சோமு' படக்கதைக்கு ஒவ்வொரு அத்தியாயத்தையும், அந்தந்த வாரம் ஸ்டோரி போர்டாகக் காண்பிப்பேன். மிகமிக நுணுக்கமாகப் பார்ப்பார். ''படக்கதை சினிமாவைவிடக் கஷ்டம்!'' என்பார். ஃப்ரேம் பை ஃப்ரேமாகப் பார்த்து, ''இந்த க்ளோசப் தேவையில்லை'' எனத் தூக்கிவிடுவார். ''கதையை நகர்த்தாத ஒரு ஃப்ரேமும், ஒரு டயலாக்கும்கூட உள்ளே இருக்கக் கூடாது'' என்பார். ரிபீட் டயலாக்கைத் துல்லியமாகக் கண்டுபிடித்துத் தூக்குவார். அவர் மேற்பார்வையில் அந்தப் படக்கதையை நான் உருவாக்கியது என் மிகப் பெரிய கொடுப்பினை! சினிமாவின் அடிப்படையை எம்.டி.யிடம்தான் கற்றுக் கொண்டேன் எனலாம்.

எனக்கு எல்லாம் தந்த எம்.டி.யிடம், நான் சினிமாவுக்குப் போக விரும்புவதாக அனுமதி கேட்டபோது, சில வினாடிகள் அமைதியாக இருந்தவர்... ''ஓயெஸ். சந்தோஷமாப் போயிட்டு வாங்க. வரையறது அபூர்வமான பிறப்பு. கார்ட்டூன் வரையறது அதைவிட அபூர்வம். எங்க போனாலும் வரையறதையும் விட்டுடாம ஒரு பழக்கமா வெச்சுக்கோங்க. ஆல் த பெஸ்ட்!'' என்றார்.

விகடனில் நான் இருந்த இரண்டரை வருடங்களை, முதுநிலைக் கல்லூரி வாழ்க்கையாகவே உணர்கிறேன். வெறும் களிமண்ணாக இருந்த எனக்கு, உருவம் கிடைத்தது இங்குதான். எம்.டி.யின் முதல் சந்திப்பில் அவர் சொன்ன பயிற்சியையும், உழைப்பையும் சினிமாவிலும் தொடர்கிறேன்.

(பேசுவோம்)



கடவுளின் அதிகாரம் யாருக்கு?


அமெரிக்க வேட்பாளர்களின் பின்னணி

வீதிக்கு வீதி போஸ்டர், நிமிடத்துக்கு ஒரு விளம்பரம், காதைக் கிழிக்கும் பேரிரைச்சல், தொண்டர்களின் ஆரவாரம் இந்த அலம்பல்கள் இன்றி, என்ன செய்வோம், எப்படி செய்வோம் என்கிற விவாதங்களை மட்டும் முன்வைத்து ஒரு தேர்தல். உலகத்தின் பார்வை முழுதும் இந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை நோக்கியே உள்ளது.

நாற்பத்தேழு வயதாகும் பாரக் ஹுசைன் ஒபாமாவுக்கும், நாற்பது வருடங்கள் ராணுவத்திலும் பொதுச் சேவையிலும் பணிபுரிந்த ஜான் மெக்கேனுக்கும் போட்டி.

பாரக் ஹுசைன் ஒபாமா இந்தப் பதவிக்கு வரும் முதல் கறுப்பினத்தவர். பாரக் என்றால் சுவாகிலி மொழியில் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று பொருள். பள்ளி மாணவனாக இருந்தபோது சுய பரிசோதனை முயற்சியாய் போதைப் பொருட்களோடு தொடர்பு கொண்டு, பிறகு மனம் திருந்தி படிப்பில் கவனம் செலுத்தினார். 'பொலிடிகல் சயன்ஸ்'

ஜனநாயகக் கட்சி	கட்சி	குடியரசுக் கட்சி
ஒபாமா	வேட்பாளர்	மெக்கேன்
யானை	சின்னம்	கழுதை
எதிர்ப்பு	ஓரினச்சேர்க்கை	ஆதரவு
எதிர்ப்பு	கருக்கலைப்பு	ஆதரவு
போர்நிறுத்தம் மற்றும் வீரர்களைத் திரும்பப் பெறுதல்	ஈராக் தொடர்பான நிலைப்பாடு	100 வருடமானாலும் வெற்றி பெறாமல் விலக மாட்டேன்
சூரிய ஒளி, காற்றாலை	இனி வரும் கால எரிபொருள்	அணு சக்தி
அமெரிக்கர்களுக்கும் முன்னுரிமை	வேலைவாய்ப்பு	5 மில்லியன் அமெரிக்கர்களுக்கே முன்னுரிமை
ஏழைகளின் உதவிக்காக மட்டுமே	வரிச்சலுகை	2 லட்சம் டாலர் வருமானம் உள்ளவர்களுக்கும்
?	மக்களின் வாக்கும் முடிவும்	?



பட்டம் பெற்றவர். பின் ஹார்வேர்டு பல் கலைக்கழகத்தில் சட்டம் பயின்று முதல் ஆப்பிரிக்க அமெரிக்க மாணவர் தலைவ ரானார். பேச்சும் செயலும் ஒன்றான தலை வராயிருக்கிறார். இரண்டு பெண்களுக்கு அப்பாவான ஒபாமாவுக்கு இளைஞர் ஆதரவு அமோகம்.

1936-ல் பிறந்த ஜான் மெக்கேன் கடற் படையில் சேர்ந்து 'அட்மிரல்' வரை உயர்ந் தவர். போரில் வியட்நாமில் சிறைப்பட்டு ஐந்து வருட சிறை இன்னலுக்குப் பின் இரு பத்து மூன்று கிலோ எடை குறைந்து வெளி வந்தவர். பின் அரசியலில் நுழைந்து அரி சோனா மாகாண செனட் சீட் வென்று, காங்கிரஸ் உறுப்பினராகவும் ஆனவர்.

மேலோமா என்ற தோல் புற்றுநோய்க்கு உள்ளானவர். இவர் தத்தெடுத்து வளர்க்கும் பங்களாதேஷ் பெண் குழந்தை, முறை தவறிய உறவில் பிறந்தது என்ற வதந்தியும் உண்டு. எட்டு வருடத்துக்கு முன், ஜனாதிபதி



புஷ்ஷை எதிர்த்து நின்று, பிறகு வாபஸ் பெற்று ஆதரவு அளித்தவர். இப்போது புஷ்ஷின் ஆதரவு இவருக்கு. இவரோடு இணைந்து போட்டியிடும் சாரா பேலினின் தனது குறைபாடுள்ள (அஞ்சலி பாப்பா போல) ஐந்தாவது குழந்தையைக் கலைக்காமல் பெற்றுக் காப்பாற்றி, மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளார்.

பல விஷயங்களில் இந்தியாவுக்கு ஆதரவான எதிர்ப்பான அம்சங்களை, இவர்கள் எப்படிக் கையாள்வார்கள் என்பதில் பெரும் ஆவலோடு, இந்தியாவும் இந்தத் தேர்தலை உற்றுக் கண்காணித்தபடியே உள்ளது. அமெரிக்காவை ஆளும் அதிகாரத்தைக் கடவுள் (மக்கள்தான்) யாருக்கு அளிப்பார்? நவம்பர் 4-ல் தெரிந்துவிடும்.

- சௌஜன்யா

ரிங்டோன் புடவையில்

ரகங்களை உருவாக்கி மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டிருக்கிறது கோ-ஆப்டெக்ஸ். இரண்டு வருடங்களுக்கு முன் 1,64,492 வண்ணங்களில் நெய்யப்பட்டு உலக அதிசயங்கள் ஏழினையும் உள்ளடக்கி கின்னஸ் சாதனையில் இடம்பெறப் பரிந்துரைக்கப்பட்டது மயில் தோகை சேலை. இவ்வருடத்தின் புது வரவான ஒலியும் ஒளியும் பட்டுச் சேலைகளும் மக்களின் அமோக ஆதரவைச் சட்டெனப் பெற்றுவிட்டன. அது எழுபத்தைந்து ஆண்டுகளாக தமிழக மக்களின் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சாதனைதான்.

''இந்தத் தீபாவளிக்கென அங்கயற்கண்ணி பருத்திப் பட்டுச் சேலைகள், கோதை பருத்திச் சேலைகள், இரங்கா பருத்திச் சேலைகள், சிறுமுகை பருத்திச் சேலைகள், பரமேஸ்வரி பருத்திச் சேலைகள், தணிகை பருத்திச் சேலைகள், மாங்கனி பருத்திச் சேலைகள், வண்ண மயில் பட்டுச் சேலைகள், தீபம் பருத்திப் பட்டுச் சேலைகள்; இவற்றோடு ஒலியும் ஒளியும் பட்டுச் சேலைகள் மற்றும் ஒலியும் ஒளியும் பட்டுப் பாவாடைகளையும் அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். இதில் ஒலியும் ஒளியும் பட்டு அனைவரையுமே வெகுவாகக் கவர்ந்துள்ளது. இந்த ஒலியும் ஒளியும் பட்டு ரகப் பாவாடைகள் ரிங்டோன் பாவாடைகள் என்றழைக்கப்படுகின்றன. பாட்டரிகள் பொருத்தப்பட்டுள்ள இந்தப் பாவாடையில் செல்ஃபோனைப் போல ரிங்டோன் சத்தம் வரும். அந்த இசைக்கேற்ப வண்ண விளக்குகளும் அதில் ஒளிரும்.

'எல்லாமே பெண்களுக்குத்தானா எங்களுக்கு ஒன்றுமே கிடையாதா?' என்று கேட்கும் ஆண்களுக்காகவே கடந்த இரண்டு ஆண்டுகளில், ஆண்களுக்கான சட்டை ரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். கலப்படமே இல்லாத நூறு சதவிகிதம் கிளாசிக் காட்டன் சட்டைகள் மற்றும் வாசம் வீசும் அரோமா சட்டைகள், ரசாயன கலப்பில்லா லினன் இழைகளால் தயார் செய்யப்பட்ட எக்கோ லினன், ஜியோ சட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



தலைமுறைகளாய்த் தொடரும் பந்தம் என்று கோ-ஆப்டெக்ஸ் கவர்களில் இருக்கும் வாசகங்களுக்கேற்ப, தலைமுறை தலைமுறையாய் எங்களிடம் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வருவதற்குத் தரம்தான்



...ரீங்காரத் தீப ஒளி!

முக்கியமான காரணம். கலப்பில்லாத தூய ஜரிகை இழைகளால் மட்டுமே நாங்கள் பட்டுப் புடைவைகள் தயாரிக்கிறோம்.

இந்தியாவிலேயே எத்தனையோ மாநிலங்களில் கைத்தறித் தொழில் நொடிந்து போய்விட்டாலும் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் அதன் தரமே'' என்கிறார் வானவில் கோ-ஆப்டெக்ஸின் மானேஜர் ஆறுமுகம்.

''பவர் லூம்களும், மில்களும் நெசவாளர்களின் வேலை வாய்ப்பைப் பாதிக்கிறதா?'' என்று நாம் கேட்டதற்கு, ''ஆம். எட்டு நெசவாளர்கள் செய்யக்கூடிய வேலையை ஒரு பவர் லூம் செய்துவிடும். சில நூறு நெசவாளர்கள் செய்கிற வேலையை ஒரு மில் செய்துவிடும். ஆனால் பட்டுப் புடைவை என்று எடுத்துக் கொண்டால் அதைப் பவர் லூம் கொண்டு நெய்வது சட்டப்படி குற்றமாகும். அதனால் நாங்கள் எப்பொழுதும் கையால் நெய்த பட்டுப் புடைவைகளைத்தான் விற்கிறோம். ஆனால் அதை எல்லாம் மறந்துவிட்டு ஜரிகைகளோடு பட்டைப் போலவே காட்சி தரும் பாலியெஸ்டரைக் கலந்து ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டுப் புடைவை எனப் பல ஜவுளிக் கடைகளில் விற்கிறார்கள். மக்களுக்கு எது கையால் நெய்த பட்டு எது மெஷின் பட்டு என மெல்லத் தெரிய ஆரம்பித்திருக்கிறது'' என்கிறார் கோ-ஆப் டெக்ஸின் மேலாண்மை இயக்குநர் திருமதி நிர்மலா தேவி.



* நிர்மலா தேவி

- நளினி சம்பத்குமார்



அஞ்சலி

செங்கல்பட்டிலிருந்து சிகரத்துக்கு...

செங்கல்பட்டு செயின்ட் ஜோசப் பள்ளிக்கூடத்தில் எஸ்.எஸ்.எல்.சி. வரையே படித்தவர் ஸ்ரீதர். மின்சார ரயிலில் தினமும் செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு வந்து படித்த மாணவர்களுடைய ரயில்வே சீசன் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு, வார விடுமுறை நாட்களில் சென்னை வந்து நிறைய சினிமா பார்த்து, சினிமாவைக் கற்றுக்கொண்டவர். அதன் பிறகு திரையுலகில் நுழைந்து சாதனை இயக்குநராக முத்திரை பதித்தவர். அந்தக் காலத்திலேயே அவருக்கு சினிமா நட்சத்திரங்களுக்கு இணையான ஸ்டார் அந்தஸ்து இருந்தது. படத்தின் டைட்டிலில் 'கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்' என்று





தோன்றுகிறபோது, தியேட்டரில் ரசிகர்கள் கைத்தட்டுவார்கள்.


ஸ்ரீதரின் ஞாபக சக்தி அபாரமானது. ஒருமுறை அவர் பேசியதை டேப் ரெகார்டரில் பதிவு செய்ததில் சின்னப் பிரச்னை. எதுவுமே பதிவாகவில்லை. பிரச்னையைச் சொன்னதும், ''அதனால் என்ன! மறுபடியும் ஒருமுறை பேசி விடுகிறேன்; பதிவு செய்துவிடுங்கள்'' என்று சொல்லி, முன் சொன்னதையே கூட்டல் குறைத்தல் இல்லாது மறுபடியும் ஒருமுறை பேசினார்.

'மீண்ட சொர்க்கம்' படத்தின் ரிலீஸின்போது, ஸ்ரீதரைக் கேட்காமலேயே படத்தின் போஸ்டர்களில் 'கலைஞர் திலகம் ஸ்ரீதர்' என்று போட்டிருப்பதைப் பார்த்துக் கோபப்பட்டார் ஸ்ரீதர். இத்தனைக்கும் தஞ்சையில் நடந்த 'கல்யாணப் பரிசு' வெற்றிவிழாவில் தரப்பட்ட பட்டம் அது. அதன் பிறகு பட்டம் எதுவும் இல்லாமல் அவரது பெயரைப் போட்டுப் புதிதாக போஸ்டர் அச்சிடப்பட்டது. ஸ்ரீதருக்குப் பட்டமெல்லாம் பிடிக்காது என்பதால்தானோ என்னவோ, மத்திய அரசு அவருக்கு ஒரு 'பத்மஸ்ரீ' கூட தராமல் விட்டு விட்டது.

சில வருடங்களாக மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அவரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். கடைசி முறையாகப் பார்த்தபோதுகூட, ''நல்ல கதை ஒண்ணு வெச்சிருக்கேன். தனுஷை வெச்சு எடுத்தா பெரிய ஹிட் ஆகும்!'' என்றார்.

மேலுலகம் சென்ற கையோடு, சிவாஜியைப் பார்த்து, 'நல்ல லவ் சப்ஜெக்ட் இருக்கு; நீங்க ஹீரோ; பத்மினி ஹீரோயின்; கதை கேட்கிறீங்களா?' என்று கேட்டாலும் கேட்பார் ஸ்ரீதர். காரணம் ஸ்ரீதருக்கு 'கிரியேடிவிடி' மூளையில் இல்லை; அவரது ஆன்மாவில் இருந்தது.

– எஸ்.சந்திரமௌலி



✱ ருஷ்ய பலம்

போர் நிறுத்தம் கிடையாது என்கிறாரே ராஜபக்சே?

● த.புகழேந்தி, கூகூர்

? இந்தியாவில் உள்ள அரசியல் தலைவர்களின் கோரிக்கையை ஏற்று, போர் நிறுத்தம் செய்ய முடியாது என்று அதிபர் ராஜபக்சே அறிவித்திருப்பது பற்றி...?

! இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. பயங்கரவாதிகளை ஒடுக்கும் போரில், இலங்கை அரசுக்கு ருஷ்யாவின் வெளிப்படையான ஆதரவும் இருப்பது கூடுதல் பலம். தாங்கள் மிரட்டினால் யுத்தம் நின்றுவிடும் என்று பல தமிழகத் தலைவர்களும் நினைப்பதுதான் பரிதாபம்.

● கே.எல்.கந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்

? ''தமிழ் உணர்வு இல்லாததால்தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் புறக்கணித்தார் விஜயகாந்த்'' என டி.ராஜேந்தர் குற்றஞ்சாட்டியுள்ளாரே?

! ''தமிழ் உணர்வுடன் ஜனநாயக உணர்வும் இருந்ததால்தான், பயங்கரவாதத்துக்குத் துணை போன அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் புறக்கணித்தார்'' என்பது பண்ருட்டியார் கூறவேண்டிய பதில்.

● கே.வி.ராமன், சென்னை-73

? ரயில்வே நுழைவுத் தேர்வு எழுத வந்த வட இந்தியர்களை, எம்.என்.எஸ். தொண்டர்கள் எழுத விடாமல் செய்து, தாக்கிய சம்பவம் குறித்து...?

! கண்டனத்துக்குரிய போக்கு. மக்களிடையே பிரிவினை உணர்வுகளைத் தூண்டி வளரச்செய்யும் அரசியல், நாட்டையே துண்டாடி விடும். ராஜ் தாக்கரே கைது, தாமதமானாலும், வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கை.

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? ''தமிழகத்தில், குடிப் பழக்கத்தால் இறந்தவர்களின் குடும்பத்துக்கு, தமிழக அரசு மாதம்

நீங்கள் கேட்டவை
—துராகு

மூவாயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டும்'' என்று டாக்டர் ராமதாஸ் கூறு கிறாரே?

! இது வீர மரணமும் அல்ல; விபத்து மரணமும் அல்ல. மனிதனின் மன பலவீனத்தால் ஏற்பட்ட, தற் கொலைக்குச் சமமான நிகழ்வு. உதவித் தொகை அளிக்க ஏற்ற தல்லதான். ஆனால், அரசாங் கமே மதுக்கடை நடத்தி, மனி தனின் பலவீனத்தைக் காக்கும் போது, நஷ்ட ஈடு கோரிக்கை நியாயப்பட்டுப் போகிறது.

● பி.தர்ஷினி, குடந்தை - 1 ❒

? கிறிஸ்துவர்களுக்கான 3.5 சதவிகித தனி ஒதுக் கீட்டைத் தமிழக அரசு வாபஸ் பெற்றுள்ளதே?

! தனி ஒதுக்கீடு பெறு வதால் 3.5 சதவிகிதத்தில் நின்று போகும் வாய்ப்புகள், பொது ஒதுக்கீட்டில் கூடும் என்று தலித் கிறிஸ்துவர்கள் முறையிட்டதால் வாபஸ் பெறப்பட்டது! இட ஒதுக்கீட் டின் உள்ளார்ந்த முரண் பாட்டை உணர்த்தும் சம்பவம் இது. ஒதுக்கீடுகள் பெருகப் பெருக, வாய்ப்புகள் குறையும்! தகுதியானவர்கள் பாதிக்கப் படுவார்கள்.

● ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி - 8

? ம.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்ட எல்.கணேச னுக்கு, 'விருப்புரிமை' திட் டத்தின் கீழ், சென்னை முகப் பேர் ஏரி வட்டத்தில் வீட்டு மனை ஒதுக்கியுள்ளதே தமிழக அரசு?

! அது ம.தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்டதற்காக அல்ல; தி.மு.க.வில் சேர்ந்ததற்காக!

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? தமது மகனால் மதுரை யில் தேவையற்ற பிரச்னை ஏற்படு கிறது என்பதால், அவரைச் சென்னையில் குடியேறச் சொல்லி, முதல்வர் அன்புக் கட்டளையிடலாமே?

! உங்களுக்குச் சென்னை மீது அப்படி என்ன சார் கோபம்?

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? மதுக்கடைகளைப் பகலில் மூட வேண்டும் என்று யோசனை கூறுகிறாரே சரத்குமார்?

! பாதி கிணறு தாண்டுகிறார்! 'பகை, கடன், விஷம்- இவற்றை அடியோடு தவிர்க்காவிட்டால் ஆபத்து' என்றொரு சுலோகம் உண்டு. மதுவை விடக் கொடிய விஷம் எதுவுமில்லை.

● என். காளிதாஸ், சிதம்பரம்

? ''ராய் பரேலியும் அமேதியும் எனக்குக் கர்ம பூமி. இப்பகுதியினரின் வளர்ச்சித் திட்டங்களுக்காகச் சிறை செல்லவும் தயார்'' என சோனியா முழங்கி யுள்ளாரே?





* தாமத நன்மை

! அப்படியொரு நல்வாய்ப்பைக் கொடுத்து, சோனியா பக்கம் அனுதாப அலை அடிக்க அனுமதித்து விடவாரா மாயாவதி! ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கான நிலத்தைத் திரும்பக் கொடுத்து, தமக்கு எதிராகப் பிரசாரம் செய்யக் கூடிய ஒரு மிகப் பெரிய' வாய்ப்பையும் சோனியாவிடமிருந்து தட்டிப் பறித்து விட்டாரே!

● எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர். ★

? தமது ராஜினாமா கடிதத்தைக் கனிமொழி தமிழக முதல்வரிடம் தாக்கல் செய்திருப்பது வேடிக்கையாக இருக்கிறதே?

! பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற ஸ்டன்ட் தொடர்பாக, எம்.பிக்களின் ராஜினாமாவைக் கோரியவர் தி.மு.க. தலைவர்தான் என்பதால், அவர் கருத்துக்கு உடன்பாடு தெரிவித்து, தி.மு.க. எம்.பி.க்கள் அவரிடமே ராஜினாமா கடிதத்தை வழங்கியதில் தவறேதுமில்லை. அவசியம் நேர்ந்தால், மக்களவை மாநிலங்களவைத் தலைவர்களுக்கு, கடிதங்களை அவர் அனுப்பலாம். ஆனால், அவசியம் நேராதபடிக்கு மத்திய அரசின் இலங்கை தொடர்பான நடவடிக்கைகள் தமக்குத் திருப்தி அளிப்பதாக முதல்வர் கூறிவிட்டாரே! இனி ராஜினாமா கடிதங்களைக் கப்பல் செய்து விட வேண்டியதுதான்!



★ தியாகப்படும் நஷ்ட ஈடு



★ தாண்டும் கிணறு!



★ வழக்கமான வசவு!

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? டெண்டுல்கரின் நீண்ட கால ஏக்கம் தணிந்துவிட்டதே?

! லாராவின் சாதனை முறியடிக்கப்பட்டுவிட்டது பெருமைதான் என்றாலும், லாரா 131 மாட்சுகளில் சாதித்ததை விஞ்ச, சச்சினுக்கு 152 மாட்சுகள் தேவைப்பட்டன. இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் இதை மறந்தாலும் சச்சின் மறக்க மாட்டார். அவர் அடக்கம் மிக்கவர்.



★ எக்ஸ்ட்ரா 21!

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்: பி.தர்ஷினி, குடந்தை

★ ரூ.50/- பரிசு பெறுபவர்: எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

ரஹோ யாக க்ரமாராத்யா என்ற திருநாமத்தை அடுத்து வருவது **ரஹஸ் தர்ப்பண தர்பிதா** என்கிற திருநாமம்.

தர்ப்பணம் என்றாலே திருப்தி ஏற் படுத்தக்கூடியது என்றுதான் அர்த்தம். அமாவாசை தர்ப்பணம், பித்ருக்களுக்குத் திருப்தியைத் தரக்கூடிய க்ரமம். ரகஸ் தர்ப்பணம் - ரகசியமாகத் திருப்தி ஏற் படும்படியாகச் செய்யக்கூடிய ஆராதனை. இதுவும் முந்தைய (ரஹோ யாகம்) ஆராதனை மாதிரிதான். குண்டலினியைக் கொண்டுபோய் சஹஸ்ரார கமலத்தில் நிறுத்துகிற க்ரமம். அப்போது அம்பாள் அந்த ஸ்தானத்தில் ஆனந்த நடனம் ஆடு கிறாள்.

மூப்பு (சிறியது - பெரியது) என்கிற பேதம் கிடையாது.

இதையே ஆசார்யர் ஆதிசங்கரர் சொல் லுவார்: ''அம்மா, நீ நடனமாடுகிறாய்! எங்கே...? உன் பதியோடு சேர்ந்து சஹஸ்ரார கமலத்தில் ஆடுகிறாய் **(சஹ ரஹஸி பத்யா)**'' இதையே அபிராமி பட்டர் 'நீயும் நின் கணவரும் நிங்கள் திருமணக் கோலமும்' என்று பாடுகிறார்.

இப்படி சிவ-சக்தி ஐக்கிய நிலையை தங்களுள்ளேயே உணர்ந்து, ரகசியமாக ஆராதனை செய்வது, ரஹஸ்தர்ப்பணம். இங்கே ரகசியமாக என்றால் ஏதோ யாருக் கும் தெரியாமல் மறைத்துச் செய்யப் படுவது என்று அர்த்தமில்லை...

ஸ்ரீ லலிதா | மூன்றாம் பாகம் | சுதா சேஷய்யன்

எட்டியும் எட்டாதிருப்பவள்!

குண்டலினி என்பது பரமாத்மாவாகிய அளப்பரிய ஆற்றலின் ஒரு சின்ன கீற்று தான். அதுவே நமக்குள் குண்டலினியாக இருக்கிறது. அந்த சிறு கீற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே கொண்டுபோய் சஹஸ்ரார கமலத்தில் நிறுத்தினால், அது பரமாத்மாவோடு சேர்ந்துவிடும். இதைத் தான் பாரதி 'தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?' என்று பாடி னார். அக்னிக் குஞ்சாகிற குண்டலினி சக்தி, சஹஸ்ரார கமலத்தில் உள்ள பர மாத்மா என்னும் பேராற்றலோடு சேர் கிறபோது, அவை இரண்டும் இணைகிற கணத்தைத்தான் 'தத்தரிகிட தத்திரிகிட தித்தோம்' என்ற ஆனந்த நடனமாக விவரிக்கிறார். அந்த இடத்தில் குஞ்சு -

இந்த முறையிலான ஆராதனையைச் செய்பவர்கள், தங்கள் அனுபவத்தை வெளிப்படுத்தி, சுலபத்தில் சொல்ல முடியாது என்பதே அர்த்தம்.

பொதுவாகவே, ஒரு முக்கியமான வேலை செய்ய வேண்டுமானால், அதைப் பற்றி அதிகமாகப் பேசிக் கொண் டிருப்பதால் பயனில்லை. பேசுகிற நேரத் தைச் செயலில் செலவிடுவது முக்கிய மாகிவிடும். அம்பாள் குறித்த ரஹஸ்ய க்ரமங்களும் இப்படித்தான். அவற்றைக் குறித்து அதிகமாகப் பேசிக்கொண் டிருப்பதைவிட செயல்படுத்துவதே முக் கியம். மேலும், 'விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர்' என்று சொல்லு வதற்கேற்ப, இந்த வழிபாட்டு முறை


ஸ்ரீ காமாட்சி அம்மன்
முன்னூர்
6

யினால் விளையக்கூடிய அனுபவத்தை எடுத்துரைப்பது என்பது இயலாத காரியம்.

ரொம்பப் பிடித்த இனிப்புப் பொருளின் சுவையை நம்மால் விவரிக்க முடியுமா? ஜாங்கிரி, மைசூர்பா, லட்டு, அவற்றைச் செய்வதற்குப் பயன்படும் சர்க்கரை - என எல்லாவற்றையும் 'இனிப்பு' என்று நம்மால் கூற முடிகிறது. ஆனால், ஜாங்கிரியின் இனிப்பும், மைசூர்பாகின் இனிப்பும், சர்க்கரையின் இனிப்பும் ஒரே சுவையா என்றால், இல்லை! சொல் என்பதைக் கொண்டு இந்தச் சுவையை இவ்வளவுதான் விவரிக்க முடியும். சாப்பிட்டுப் பார்த்தால் தான் வேறுபாடும் தெரியும்; இனிப்பும் புரியும். ரொம்பத் துருவிக் கேட்டால், 'நீயே சாப்பிட்டுப் பார் புரியும்!' என்று பதில் சொல்லி விடுவோம்.

ஆகவே, சொல் என்பதற்கு ஓர் எல்லை உண்டு. எல்லைக்கு உட்பட்ட ஒரு விஷயத்தைக் கொண்டு எல்லையற்ற ஓர் அனுபவத்தை விவரிப்பது என்பது இயலாத காரியம். அந்த அனுபவம் கை வருகிற போதுதான் அதன் தன்மையை ஒருத்தர் உணர முடியும். இப்படிப்பட்ட அனுபவமாக இருக்கிற பரமாத்மாவை அனுபவித்து மட்டுமே உணர்கிற வழிபாட்டு முறையைத்தான் 'ரஹஸ்தர்ப்பண' என்று சொல்கிறது ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம்.

ஸத்ய பிரஸாதினி - ஸத்யமாகிற பிரசாதத்தை - உண்மையான அருளை - எல்லோருக்கும் வழங்கக்கூடியவள்.

சாக்ஷி வர்ஜிதா - எல்லாவற்றையும் பார்க்கக்கூடிய சாக்ஷியாக இருக்கிறவள். ஆனால் அவளுக்கு முழுமையான சாட்சி என்பது கிடையாது. அம்பாளை அப்படியே பார்த்துவிட முடியுமா? எல்லாமாக இருக்கக்கூடியவள் அல்லவா அவள்! ஒன்றும் வேண்டாம். ஒரே ஒரு தெய்வத் திருமேனி - அதை முழுவதுமாக நாம் பார்த்து விட்டோமா என்று கேட்டால், 'இல்லை!' என்பதுதான் பதிலாக இருக்கும். பார்க்கப் பார்க்க, அதில் புதிதாக நமக்கு ஏதேனும் தென்பட்டுக்கொண்டே இருக்கும். இன்னும் பார்க்க வேண்டும் என்று தோன்றும். கண்ணை மூடிக்கொண்டு நினைவு கூர்ந்து பார்க்க முயன்றால், முழுசாக உள்ளே தெரியாது! ஆனால், இன்னும் பார்க்க வேண்டும் என்று மட்டும் ஆவலும் ஏக்கமும் பெருகும். இப்படியாக நம் பார்வைக்கும் புலனுக்கும் சாக்ஷிபடாதவளாக, அவற்றை மிஞ்சி நிற்பவளாக விளங்கும் அம்பிகை **சாக்ஷி வர்ஜிதா.**

ஷடங்க தேவதா யுக்தா - ஆறு அங்கங்களான தேவதைகளால் ஆராதிக்கப் படக்கூடியவள். அந்த தேவதைகள் சூழ இருக்கிறவள் அம்பாள்.

அம்பாள் வேதங்களை தனது ஆக்ஞையா உருவாக்கினாள். அந்த வேதங்களுக்கு ஆ அங்கங்கள். ஆறு தேவதைகள். அந்த ஆறு தேவதைகள் புடை சூழ பண்டாஸுர வதத்துக்குப் போகிறாள் லலிதாம்பிகை!

ஷடங்கங்கள் பலவிதமாக உள்ளன. வேதங்களுக்கு ஆறு அங்கங்கள் உண்டு. வேத அத்யயனம் என்பது இந்த ஆறையும் உள்ளடக்கிச் செய்வது. அம்பாள், வேதங்களைத் தனது ஆக்ஞையால் உருவாக்கினாள். அந்த வேதங்களுக்கு ஆறு அங்கங்கள், ஆறு தேவதைகள். அந்த ஆறு தேவதைகள் புடை சூழ பண்டாஸுர வதத்துக்குப் போகிறாள் லலிதாம்பிகை.

போருக்குப் போகிறபோது, முக்கியமாகக் காக்கப்படவேண்டிய ஆறு அம்சங்கள் விவரிக்கப்படுகின்றன: கவசம், அஸ்திரம், நேத்திரம் (கண்), ஹ்ருதயம், சிரஸ், சிகை.

கண் ரொம்பப் பிரதானமான உறுப்பு. எதிரிகள் எங்கே இருக்கிறார்கள் என்று முதலில் பார்ப்பதற்குக் கண்தானே அவ

சியம்.

சிரஸ் - தலை. சண்டையின்போது பிரதானமாகக் காப்பாற்றப்பட வேண்டியது.

சிகை என்பது தலைமுடி. சிகையை ஏன் முக்கிய அங்கமாகச் சொல்லியிருக்கிறது என்றால், ஒருத்தரை அவமானப்படுத்த வேண்டும் என்றால், அவரது சிகையிலோ அல்லது முகத்திலோ ஓர் இழப்பை ஏற்படுத்தி விட்டால் போதும். கொல்லவே வேண்டாம்; முகத்திலே அரூபம் ஏற்படுத்தினாலே கொன்றதற்குச் சமானமாகக் கருதப்பட்டது. ருக்மிணியின் சகோதரனான ருக்மியை அவமானப்படுத்த வேண்டும் என்று கிருஷ்ண பரமாத்மா நினைத்தபோது, அவனுடைய ஒரு பக்கத்துச் சிகையை மட்டும் நீக்கினார்.



இதே போல் ஓர் அரூபத்தை ஏற்படுத்திவிட்டால் வெளியில் தலை காட்ட முடியாத அளவுக்குத் தோல்வியுற்றவராகி விடுகிறார் எதிரி. இதையொட்டி எழுந்ததுதான் 'முகத்தைக் கொண்டுபோய் எங்கே வைத்துக் கொள்வேன்!' என்கிற வாக்கியம். நாம் பேச்சு வழக்கில் அவமானம் அல்லது தலை குனிவு ஏற்படுகிறபோது இப்படிச் சொல்வதுண்டு. நம் முகம் மாறிப் போனதாலோ காயமுற்றதாலோ இப்படிச் சொல்வதில்லை. போரில் முகம் வெட்டுப்பட்டதற்கு அல்லது சிதைக்கப்பட்டதற்கு நிகரான அவமானம் ஏற்படுகிறபோது எழும் வழக்கு இது. ஆகவே போரில் முகம் சேதப்படாமல் காக்கப்படுவது ரொம்பவும் முக்கியமாகக் கருதப்பட்டது. முகத்தில் சேதம் ஏற்படுத்துவதே கொல்வதற்குச் சமானம் என்று கருதப்பட்டதால்தான், சூர்ப்பனகையின் மூக்கைச் சிதைத்து விட்டார் இளையபெருமாள். பெண்ணான அவளைக் கொல்ல முடியாது; ஆனால், அப்புறப்படுத்தியாக வேண்டும் என்கிறபோது அவ்வாறு செய்தார்.

நம் நாட்டு வரலாற்றிலே மூக்கறு போர் என்றே ஒன்று நடந்தது! திருமலை நாயக்கர் காலத்தில், மதுரை நாயக்கர் மன்னர்களுக்கும் மைசூர் சாம்ராஜ்ய அரசர்களுக்குமிடையே சண்டை ஏற்பட்டபோது நடந்தது இந்தப் போர்!

வரலாற்றுப் பதிவாக இந்தப் பழக்கம் திருமலைநாயக்கர் காலத்தில் முதன் முதலில் காணக் கிடைத்தாலும், அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முன்பாகவே இம்முறை புழக்கத்தில் இருந்திருக்கிறது. இதற்கு ஆதாரம், நம் பாரம்பரியத்தின் மூத்த மருத்துவ ஞானியான சுஷ்ருதர் நிகழ்த்திய 'பிளாஸ்டிக் சர்ஜரி'. அந்தக் காலத்திலேயே அதில் நிபுணராக இருந்த சுஷ்ருதர் செய்த அறுவைச் சிகிச்சைகளிலேயே மிக முக்கியமானது, மூக்கை மீண்டும் பொருத்தும் சிகிச்சை தான்!

(வளரும்)

இலங்கை விவகாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா, மனிதச் சங்கிலி என்று தி.மு.க. அதிரடியாகச் செயல்பட தமிழக காங்கிரஸின் நிலைமை சிக்கலாகியிருக்கிறது. போதாததற்கு புதிய தலைவலியாக புலிகள் ஆதரவுப் பிரசாரமும் தலை தூக்கியிருக்கிறது. இந்தச் சூழலில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு நம்மோடு பேசினார்...

புலிகளை ஆதரிக்காதே!

ராஜினாமா உண்டா இல்லையா?

''இலங்கைத் தமிழர் பிரச்னையில் இரண்டு வாரத்துக்குள் நடவடிக்கை இல்லாவிட்டால் தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்ய நேரிடும்' என்றுதான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், மத்திய அரசு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டது. வெளியுறவுத் துறைச் செயலாளர், இலங்கைத் தூதரை அழைத்து, இப்போது அங்கே நடைபெற்று வரும் மோதல்களால் தமிழர்களுக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாதென்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை செய்தார். இதற்கெல்லாம் உச்சகட்டமாக, நமது பிரதமரே இலங்கைப் பிரதமரைத் தொலைபேசியில் அழைத்து, தமது கவலையைப் பகிர்ந்துகொண்டார். மத்திய அரசு தொடர் நடவடிக்கைகள் எடுத்துவரும் நிலையில், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்த முடிவை செயல்படுத்தும் அவசியம் ஏற்படவில்லை.''



* தங்கபாலு

தி.மு.க. இயற்றிய 'ராஜினாமா' தீர்மானத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் இணைந்ததன் அர்த்தம் என்ன? உங்கள் தலைமையையே நீங்கள் மிரட்டுகிறீர்களா? பொதுவாக மூச்சுவிடக் கூட தலைமையின் ஆணையை எதிர்பார்க்கும் நீங்கள், இவ்விஷயத்தில் மட்டும் சுதந்திரமாகச் செயல்பட்டது எப்படி?

''இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நானும் சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் சுதர்சனும் மேலிடத்தின் ஒப்புதலுடன்தான் கலந்துகொண்டோம். இந்தப் பிரச்னையில் உடனே ராஜினாமா செய்ய வேண்டும் என்று பலர் பேசினார்கள்.

ஆனால், நான் பேசும்போது 'காங்கிரஸ் கட்சி அனைத்திந்தியக் கட்சி ஆதலால், அப்படியொரு முடிவை எடுக்க உடனடியாக சம்மதிக்க முடியாது' என்பதைத் தெளிவாக எடுத்துச்சொன்னேன். அதன் பிறகே 'மத்திய அரசு நடவடிக்கை இல்லாவிட்டால் விலக நேரிடும்' என்று தீர்மானம் போட்டனர். இந்த வாசகத்தின் அடிப்படையில் நாங்கள் கையெழுத்துப் போட்டோம். ஆக இவ்விஷயத்தில் மேலிடத்தின் ஒப்புதல் பெற்றோம்.''

தி.மு.க. செய்தது ஏமாற்று வேலையா?

''தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகியதை, ஏமாற்று வேலை என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் சொல்லியுள்ளதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு கட்சியிலும் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்த சில நடவடிக்கைகள் எடுப்பதை யாரும் குறை சொல்லக்கூடாது. ஞானதேசிகனின் கருத்து, காங்கிரஸுடைய அதிகாரபூர்வமான நிலைப்பாடு அல்ல.''

ஆயுதம் வழங்கப்பட்டதா?

''ஆயுதங்கள், ராடார் போன்றவற்றை இலங்கைக்கு வழங்கியதாகச் சொல்லப்படுவது தவறு. வெளியுறவுத் துறை அமைச்சரிடம் இதைப் பற்றிக் கேட்டேன். கடல் சார் எல்லைகளின் கூட்டுப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு, இலங்கையிலுள்ள மலையகத் தொழிலாளர் உட்பட அனைத்துத் தமிழர்களின் நல்வாழ்வு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, கடந்த ஐம்பது வருடங்களாகவே, அண்டை நாடு என்ற அடிப்படையில் இந்தியா இலங்கைக்குப் பொருளாதார உதவிகளைச் செய்து வருவதாகவும், அவற்றைத் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தக் கூடாதென்று இலங்கை எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் என்னிடம் கூறினார் வெளியுறவு அமைச்சர்.''

புலிகளுக்குப் பால் வார்க்கிறார்களா?

''சில திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவதும், ராஜீவ்காந்தியின் தியாகத்தை விமர்சனம் செய்வதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. குறிப்பாக, இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக, தமிழகத்தில் பேசுபவர்கள், உதவுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு.

இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பு இல்லாமல் முடிவு காண வேண்டும். ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் மூலம் வர இருந்த தீர்வு மிகச் சிறப்பான தீர்வு. ஆனால், அது அமுல்படுத்தப்படுவது யாரால் நிறுத்தப்பட்டது என்பது உலகத்துக்குத் தெரியும். இலங்கைப் பிரச்னையில் இனி ஒரு தீர்வு வரக்கூடிய சாத்தியத்தை காங்கிரஸ் கட்சி மட்டுமே உருவாக்க முடியும்.

தங்கபாலு ரெட் சிக்னல்

- ப்ரியன்

கல்கி (19.10.2008) இதழில், 'பிராவிடன்ட் ஃபண்ட் பணத்தில் திருப்பணி' என்ற தலைப்பின் கீழ் என்னைப் பற்றி வெளியாகியுள்ள செய்தி கண்டேன்.

எனது சொந்தப் பணத்திலிருந்து நான் ஆலயத் திருப்பணிகளுக்கு உதவி அறிவிக்கவோ, அளிக்கவோ இல்லை. இந்திய அரசின் கலாசாரத் துறைச் செயலர் என்கிற முறையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானங்களைப் புதுப்பிக்க ஒதுக்கப்பட்ட அத்துறையின் நிதியிலிருந்தே தமிழகக் கோயில் திருப்பணிகளுக்குத் தொகைகள் வழங்கச் செய்தேன். குறிப்பாக, உத்தர கோசமங்கை, திருப்புல்லாணி ஆகிய கோயில்கள் உதவி பெற்றன.

எனது சொந்தப் பணத்தைக் கொண்டு நான் திருப்பணிகள் நிகழ்த்தியதாகச் சொல்வது சரியன்று.

- என். கோபாலசுவாமி,
(தலைமை தேர்தல் கமிஷனர்)



இனிப்பான ரீவைண்ட்!

இப்போது தீபாவளி என்றால் டி.வி. முன் உட்கார்ந்து பொழுதைக் கழிக்கும் தினம் என்று ஆகிவிட்டது. ஆனால், முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பு டி.வி. கிடையாது. ஒரு வாரம் முன்னதாகவே முடிவு செய்து, பட்சணத் தயாரிப்பு களைகட்ட ஆரம்பித்துவிடும். ஐம்பது ப்ளஸ் வயதுடைய முந்தைய தலைமுறையினர் சிலரிடம் அந்த நாட்களைப் பற்றிக் கேட்டோம்.

"எங்கள் வீட்டில் அதிரசம் இல்லாமல் இருக்காது. அதிரசம் செய்யும்போது, வீடே அமர்க்களப்படும். அதிரசம் நிறைய எண்ணெய் குடிக்கும் என்பதால், நான் அதிரசம் செய்ய ஆரம்பித்ததுமே, என் கணவர் என் பக்கத்தில் ஒரு முக்காலியைப் போட்டுக் கொண்டு கையில் எண்ணெய் பிழிந்தெடுக்கும் கட்டை சகிதம் உட்கார்ந்து விடுவார். ஒவ்வொரு அதிரசமாக எடுத்து, கட்டைகளுக்கு நடுவில் வைத்து, எண்ணெயைச் சுத்தமாகப் பிழிந்து எடுத்து, பாத்திரத்தில் வைப்பார். கொதிக்கும் எண்ணெய் என்பதால், எங்கள் ஒரே மகனை சமையல் அறையில் கிட்டே சேர்க்க மாட்டோம். அவன் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு, சமையல் அறை வாசற்படிக்கு அப்பால் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பான்'' என்று அந்த 'அதி ரச' நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார் சென்னை புரசைவாக்கத்தைச் சேர்ந்த சிவகாமி அம்மாள்.

"தீபாவளிக்கு ஐந்தாறு நாட்கள் முன்னதாகவே ஸ்வீட் மற்றும் காரம் செய்வதற்கு வேண்டிய மாவுகளை அரைத்துக் கொண்டு வந்துவிடுவோம். பெரும்பாலான வீடுகளில் லட்டு, ஜாங்கிரி, மைசூர் பாக், பர்பி, சோமாசி போன்ற பாரம்பரியத்






* லட்சுமி செந்தில் * சிவகாமி * மீனாட்சி சுந்தரம் லட்சுமி

தென்னிந்திய இனிப்பு வகைகள்தான் செய் வார்கள். அதன் பிறகு பூஸ்ட் கேக், போர்ன் விடா கேக், குலோப் ஜாமூன் என்று செய்ய ஆரம்பித்தார்கள். கார வகைகளில் முறுக்கு, தேங்குழல், மிக்சர் இவை கட்டாயம் இருக்கும். வீட்டில் வயதான பாட்டிமார்கள் இருந்தால் அவர்கள் கைவண்ணத்தில் கைமுறுக்குகள் செய்வார்கள். அப்போதெல் லாம் கடையில் ஸ்வீட்கள் வாங்குவது கிடையாது. தலைதீபாவளி கொண்டாடும் வீடுகளில் சமையல்காரர்களிடம் ஸ்வீட் மற்றும் கார வகைகளைச் செய்து தரச் சொல்லி வாங்கிக் கொள்வார்கள். பெரிய கூட்டுக் குடும்பங்களில் குழந்தைகள் வேண்டிய மட்டும் சாப்பிடட்டும் என்று சொல்லி நிறைய செய்து வைப்பார்கள். எல்லாம் மள மளவென்று காலியாகி விடும்'' என்கிறார் பட்டு மீனாட்சி சுந்தரம்.

''நான் கனரா பாங்க் ஜம்மு கிளையில் பணியாற்றியபோது, ஒரு வருடம் ஜம்மு விலேயே தீபாவளி கொண்டாடும்படி யானது. உள்ளூர்வாசிகள் காலை முதல் ஸ்வீட் வகைகளையும், டிரை ஃப்ரூட் ரகங் களையும் பரிசளித்துக்கொண்டே இருக்க, வருகிறவர்களுக்கெல்லாம் தலா நாலு இட்லியும், வெங்காய சாம்பாரும் கொடுத்த போது, இட்லி, சாம்பாருடன் எனக்கும் சேர்த்து ரசிகர் மன்றம் ஆரம்பிக்காத குறை'' என்கிறார் மீனாட்சி சுந்தரம்.

''அதிகாலையில் எழுந்து விடிவதற் குள்ளாக எண்ணெய் தேய்த்துக் குளிப்பது தான் தீபாவளியின் விசேஷமே! அந்தக் காலத்தில் பெரிய வெந்நீர் தவலையில் முதல் நாள் இரவே தண்ணீர் நிரப்பி அதிகாலையில் வெந்நீர் போட்டுக் குளிக்க வேண்டும். ஆனால், இந்தக் காலத்துக் குழந்தைகள் சீக்கிரமாக எழுந்திருப்பதே கிடையாது. ஏதோ, சாஸ்திரத்துக்குத் தலை யில் சில சொட்டுகள் எண்ணெய் வைத்துக் கொள்வதுடன் சரி'' என்கிறார் கோடம்பாக் கத்தைச் சேர்ந்த லட்சுமி.

''தீபாவளியன்று அத்தனை பேருக்கும் காலை சிற்றுண்டி இட்லிதான் என்பதால், கிரைண்டர் என்ற ஒன்று இல்லாத அந்தக் காலத்தில் தீபாவளிக்கு முந்தைய நாள் கல்லுரலில் இட்லிக்கு மாவு அரைத்தே கை ஒய்ந்துவிடும். தீபாவளியன்று புத் தாடை உடுத்தி, வீட்டில் உள்ள பெரிய வர்களை வணங்கி, அனைவருமாகக் கோயி லுக்குப் போவது பாரம்பரியமாக வருவது. ஆனால், இப்போது ரிமோட்டே கோயில், டி.வி.யே தெய்வம்!'' என்று வருத்தப்படு கிறார் மைலாப்பூரைச் சேர்ந்த லட்சுமி செந்தில்.

- கௌதம் ராம்

பஜ்ரங்பாஜா

(அதிகாலை நான்கு மணிக்கு அலா ரம் அடிக்க, பதறிப்போய் எழுகிறாள் பங்கஜம். அருகே குறட்டையோடு தூங்கிக் கொண்டிருக்கும் கண வனைத் தட்டி எழுப்ப, மின்வெட் டுக்குப் பதில் சொல்ல முடியாத வீராசாமி போல் விழித்தார் பரமசிவம்)

பங்கஜம் : என்னங்க... மார்க் கெட்டுக்குப் போகணும்... போங்க... சீக்கிரம் ரெடியாகுங்க.

பரமசிவம் : மார்க்கெட்டுக்கா... எதுக்கு?

பங்கஜம் : தீபாவளிக்கு புதுசா பஜ்ரங்பாஜா அல்வா செய்யப் போறேன்.

பரமசிவம் : என்னது பஜ்ரங் பாஜா அல்வாவா? ஏதோ அரசியல் கட்சி மாதிரியில்ல இருக்கு.

பங்கஜம் : தலை தீபாவளிக்கு நம்ம பொண்ணும் மாப்பிள் ளையும் வரப் போறாங்க... அவங்களை இந்த அல்வா செஞ்சு அசத்தப் போறேன்.

பரமசிவம் : எதுக்கு... இந்த விபரீத ஆசையெல்லாம்...? பேசாம... மிளகு ரசம்... கொள்ளு ரசம்னு ஏதாச்சும் ட்ரை பண்ணேன்...

பங்கஜம் : எல்லாம் எனக்குத் தெரியும். முதல்ல கோயம்பேடு மார்க்கெட்ல கோதுமை; சைதாப் பேட்டை மார்க்கெட்டுல சல்லடை; எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட்டுல கரண்டி...

பரமசிவம் : எதுக்கு எல்லாத்தை யும் வேறவேற இடத்துல வாங்கச் சொல்றே?

பங்கஜம் : சொன்னதை மட்டும் செய்யுங்க.

(பரமசிவம் சென்றதும் தன் தோழிகளுக்கு ஃபோன் செய்கிறாள் பங்கஜம்.)

பங்கஜம் : ஹலோ... ஹேமாவா... தீபா வளிக்கு என் வீட்டுக்கு வரணும். நான் புதுசா பஜ்ரங்பாஜா அல்வா செய்யப் போறேன்...

ஹேமா : (பதறியபடி) இல்லே... பங்கஜம்... நான்... தீபாவளியானா... விரதம். (டக்கென்று ஃபோனை ஆஃப் செய்கிறாள்)

பங்கஜம் : ஹலோ மீனாட்சியா... நான் பங்கஜம் பேசறேன்... தீபாவளிக்குப் புதுசா... ஒரு அயிட்டம்...

மீனாட்சி : அச்சச்சோ... புது அயிட்டமா... நான்... வர முடியாது.

பங்கஜம் : ஏன்... நீ கூட... சேனைக்கிழங்கு பாயாசம் செஞ்சியே. வந்து நான் சாப்பிடலை...?

மீனாட்சி : அதுக்கில்லை... பங்கஜம்... குடும் பத்தோட... வ... வந்து... கோயிலை அடிக்க மொட்டையோடு போறோம்... ஸாரி... மொட்டை அடிக்க கோயிலுக்குப் போறோம்... (என்று விட்டு ஃபோனை 'கட்' செய்கிறாள்.)

(அப்போது வியர்க்க விறுவிறுக்க...காய்கறி களோடு உள்ளே வருகிறார் பரமசிவம்.)

பரமசிவம் : ப்ளூகிராஸ் மாதிரி மனுஷ கிராஸ் இருந்தா... எவ்வளவு நல்லா இருக்கும் தெரியுமா...?

பங்கஜம் : இதென்ன பட்டாசும் வாங்கிட்டு வந்திருக்கீங்க...?

பரமசிவம் : (ஒரு ராக்கெட்டைக் காட்டி) இதான் நமீதா ராக்கெட்.

பங்கஜம் : என்னது நமீதா ராக்கெட்டா...?

பரமசிவம் : ஆமா... பத்த வெச்சதும் 'டேய் மச்சான்'னு விசிலடிச்சுக்கிட்டே போகும்... (இன் னொன்றை எடுத்துக்காட்டி) இது ஜே.கே.ரித்தீஸ் வெடி... வெடிச்சதும் ஐம்பது... நூறு ரூபாய் நோட்டு வந்து விழும்.

பங்கஜம் : ஸ்டாப்... உங்க வெடி புராணம்.



அல்வா

தக்காளியை ஆர்ட்டின் ஷேப்புல நறுக்கி வைங்க.

பரமசிவம் : எதுக்கு... எப்படி வெட்டினாலும் வாணலில போட்டா வதங்கத்தானே போகுது... ஆமா... இதையெல்லாம் யாரு உனக்கு கத்துக் கொடுக்கிறா...?

பங்கஜம் : போன வாரம் கனவுல கத்துக்கிட்டேன்.

பரமசிவம் : சமையல்கட்டுக்கு தீபாவளிக்கு லீவு விட்டுட்டு நாம ஹோட்டலுக்குப் போனா என்ன...?

பங்கஜம் : தலைதீபாவளிக்கு வர்ற விருந்தாளிக்கு ஹோட்டல்ல வாங்கிக் கொடுத்தா நல்லாவா இருக்கும்?

பரமசிவம் : அவங்களை நெனைச்சாத்தான் பாவமா இருக்கு. (என்றவரை அநியாயத்துக்குக் கண்டு கொள்ளாமல், வாணலியை அடுப்பில் வைத்துவிட்டு விட்டத்தைப் பார்த்தாள். பின்... ஏதேதோ... எடுத்துப் போட்டாள். இரண்டு... கிண்டு... கிண்டி விட்டு விசிலடித்தாள்.)

பரமசிவம் : என்ன... முடிஞ்சுதா... பங்கஜம்?

பங்கஜம் : எல்லாம் முடிஞ்சுது... காஞ்சும்... காயாமலும் இருக்கிற மிளகாய் விதை தூவினா அல்வா ரெடி.

பரமசிவம் : ஏண்டி... அல்வாவுல மிளகாய்ச் செடி வளர்க்கப் போறியா...?

பங்கஜம் : டேஸ்டுக்காக... சரி... மாப்பிள்ளை - பொண்ணுக்கு ஃபோன் பண்ணிக் கேளுங்க...

(சொல்லிக் கொண்டிருக்கும்போதே காலிங்பெல் அலற, ஓடிச்சென்று பரமசிவம் கதவைத் திறக்க, மகளும் - மருமகனும்தான். பெண் உற்சாகமாக இருந்தாள். கையில் ஒரு பெரிய டிஃபன்கேரியர் வைத்திருந்தாள். மாப்பிள்ளைதான் தேமே என்றிருந்தார்.)

பங்கஜம் : வாங்க... வாங்க...

பரமசிவம் : வாங்க... மாப்பிள்ளை (என்று வரவேற்று, தனியாக அழைத்துச் சென்று பங்கஜத்தின் பஜ்ரங்பாஜா அல்வா விவரத்தை சொல்லிக் கொண்டிருக்க, பங்கஜமும், மகளும் ஆளுக்கொரு கிண்ணத்துடன் அவர்களிடம் வருகிறார்கள்).

பங்கஜம் : மாப்ளே... பஜ்ரங்பாஜா அல்வா செஞ்சிருக்கேன் சாப்பிடுங்க...

மகள் : அப்பா நான் லாலுமாய பால் பாயாசம் செஞ்சிருக்கேன் சாப்பிடுங்க...

(என்று இருவரும் கிண்ணத்தை நீட்ட, 'இங்கேயுமா?' என்று மருமகனும், 'அங்கேயுமா?' என்று பரமசிவமும் அலறியபடி மயங்கிச் சரிகின்றனர். எங்கேயோ வைத்த தீபாவளி தவுஸண்ட் வாலா விடாமல் வெடித்துக் கொண்டிருந்தது). ○

உத்தமபுத்திரன்

இந்தியாவும் வெற்றிகரமாக நிலவு ஆராய்ச்சியில் இறங்கிவிட்டது. சந்திராயான் 1 செயற்கைக்கோளை விண்ணில் ஏவி, தன் சிற்றடியை எடுத்து வைத்துவிட்டது. இந்தச் செயற்கைக்கோள் என்ன செய்யும், எத்தனை பொருள்களை அது ஏந்திச் சென்றது என்பதெல்லாம் இந்நேரம் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

சந்திராயானின் மூலத்தைப் பார்ப்போம். முதலில் இந்தியா ஏன் நிலவு ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்? இதற்கு முன்னரே அமெரிக்காவும் முன்னாள் சோவியத் யூனியனும் எக்கச்சக்கமாக ஆராய்ச்சி செய்துவிட்டார்களே?

உண்மைதான். இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் கடும் பனிப்போர் நிலவிய காலகட்டம். அது விண்வெளி ஆய்வையும் விட்டுவைக்கவில்லை. சோவியத் நிலவுக்கு ஓர் ஆய்வுக் கலனை அனுப்பி வைத்தால், அமெரிக்காவும் அடுத்த ஆண்டே இன்னொன்றை அனுப்பிவைக்கும்.

நிலவில் ஆளை இறக்கி, ஆய்வு செய்து, அவரைப் பத்திரமாக மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்து இறக்குவதுதான் பெரிய சாதனையாக அப்போது கருதப்பட்டது. அதையும் ஒருநாள், அமெரிக்கா செய்தது. அதைத் தொடர்ந்து, இதுவரை மொத்தம் 12 பேர்கள் நிலவில் இறங்கிவிட்டனர். இதெல்லாம் எழுபதுகள் வரையிலான கதை. 1976ல், சோவியத்தின் லூனா 24 கலன் விண்ணில் ஏவப்பட்டபின்,

▪ ஆர்.வெங்கடேஷ் ▪

இந்த ஆட்டம் கொஞ்சம் நின்றது.

அதன்பிறகு 1999ல்தான், மீண்டும் ஜப்பான் 'ஹிடென்' என்ற விண்கலத்தை, நிலவின் சுற்றுப் பாதையில் பயணிக்க வைத்தது. அமெரிக்காவில் உள்ள நாஸா ஆராய்ச்சி மையம், 1994 கிளெமெண்டைனையும் 1998ல் லூனார் ப்ராஸ்பெக்ட்டரையும் நிலவை ஆய்வு செய்ய அனுப்பி வைத்தது. 2003ல் ஐரோப்பிய ஸ்பேஸ் ஏஜென்சி, ஸ்மார்ட் 1 ஐ அனுப்பியது. 2007ல் சீனா சேங்க் 1 ஐ அனுப்பியது. சீனா, கோதாவில் குதித்தவுடன்தான், எல்லாருக்கும் அடிவயிற்றைக் கலக்கத் தொடங்கியது.

தொண்ணூறுகளின் இறுதியிலும் 2000 ஆண்டுகளின் தொடக்கத்திலும் ஒரு பெரிய பிரச்னை உலகெங்கும் தலையெடுத்தது. மின்சாரத் தேவை. அனல், புனல், காற்று என்றெல்லாம் பார்த்துவிட்டு, அணுமின்சாரம் உற்பத்தி செய்ய இறங்கினார்கள்.

நிலவில் உள்ள ஒரு தாதுப் பொருள், ஹீலியம் 3. இதனால் என்ன உபயோகம்? இதுவரை நம்மிடம் உள்ள தொழில்நுட்பத்தின் மூலம் அணுப்பிளவு சாத்தியம். அணு இணைவு என்று ஒன்று உண்டு. ஹீலியம் 3 இந்த அணு இணைவுக்கு உதவும். இதனை எரிப்பதன் மூலம், பெரிய கதிர்வீச்சோ, அணுக்கழிவோ கிடையாது. ரொம்பவும் பாதுகாப்பானது.

நிலவில் இருந்து இந்த ஹீலியம் 3 கொண்ட மண்ணைக் கொண்டுவந்து இங்கே உயர்வெப்பத்தில் எரித்து, மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும் என்பது எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கும் தியரி.

நிலவில் பிடித்த சீட்!

நடைமுறையில் சாத்தியமா? ஐம்பது ஆண்டுகள் கழித்து, இப்படியொரு மின்சார உற்பத்தி மையம் சாத்தியப்படலாம். அன்று, நிலவில் இருந்து பெரிய ரோவர்கள் மூலம், நிலவின் மண்ணை பூமிக்குக் கொண்டு வர முடியுமாக இருக்கலாம். தொழில்நுட்பத்தின் வேகத்தில் எதுவுமே சாத்தியம்தான். அவ்வளவுதான். சீனா, ஜப்பான் என்று எல்லா நாடுகளும் நிலவில் காதல் கொள்ளத் தொடங்கிய ரகசியம் இதுதான். இதைப் பார்த்த அமெரிக்காவும் மீண்டும் கோதாவில் குதித்துவிட்டது. ''ஹீலியம் 3 ஓட்டம்'' என்றே இதை அழைக்கிறார்கள்.

இப்போது நமக்கு இங்கேதான் பிரச்னையும் ஆரம்பிக்கிறது. நமக்கு எதிர்காலத்தில் எக்கச்சக்கமாக மின்சாரம் தேவைப்படும். இத்தனை கோடி இந்தியர்களும் வாழவேண்டும், உற்பத்தி பெருக வேண்டும் என்றால், மின்சாரம் இல்லையென்றால் வேலைக்காகாது. ஆனால், நாமோ நிலவு ஆய்வில் இன்னும் ரொம்பவும் பின்தங்கி இருக்கிறோம்.

வருங்காலத்தில் நிலவில் இருந்து உண்மையிலேயே ஹீலியம் 3 ஐ எடுத்துவர முடிந்துவிட்டால், நாம் எங்கே போய் நிற்பது? இந்த ஆய்வுக்கான கட்டாயம் இப்படித்தான் உருவாகிறது.

இன்னொரு பக்கம், நமக்கு நிலவு ஆய்வில் போதிய அனுபவமும் இல்லை. எல்லாம் சொல்கேள்விதான். நாமே நிலவின் வட்டப்பாதையில் செயற்கைக்கோளைச் சுற்றவிட்டு, சுயமாகச் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமல், அடுத்தவர்களின் தோள்களின் மேலே ஏறிக்கொண்டு எத்தனை ஆண்டுகள் சவாரி செய்வது? சுய அனுபவம் வேண்டாமா?

இதெல்லாம் சேர்ந்து உருவானதுதான், சந்திராயான் 1. அடுத்த ஆண்டு இறுதிக்குள் சந்திராயான் 2 விண்ணில் ஏவப்படும் என்கிறார்கள் இஸ்ரோகாரர்கள்.

நிலவில் சீட் பிடிக்க, கொஞ்சம் சீக்கிரமே ரெடியாகிவிட்டோம்.





வாங்கிவிட்டீர்களா..?

கல்கி

தீபாவளி மலர் 2008



விலை : ரூ.100/-

பக்கங்கள் : 344

மதிப்பு : அளவிட முடியாதது

ஸ்டாக் உள்ளவரை மட்டுமே விற்பனை!

**படித்துப் பாதுகாக்க வேண்டிய கலைச்சுவடு
உங்கள் வாரிசுகளுக்கு
வழங்கவேண்டிய காலப் பொக்கிஷம்!**

கூரியர் மூலம் பெற ரூ.30/- சேர்த்து M.O. அல்லது D.D. அனுப்புங்கள்

தொடர்புக்கு :

மானேஜர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை - 32

தொலைபேசி : 044 - 4343 8888

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.